Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 13/50
දිනමුරසු වාරමලර් செப்.23-29, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 426

## ஒசாமாவைத் தேடும் அமெரிக்கா




## ஐ.தே.க.வின் மற்றொரு வியூகம்



## உட்கார்வதில் உலக சாதனை

## ஹக்கீமின் மனமாற்றம்



## கோடி கேட்கும் நடிகை

# ஆன்மீகம்



## நல்ல குருவை நம்பு

இருட்டில் மழையும், புயலும் அடித்துக் கொண்டிருந்த நேரத்தில், நடுக்கடலில் ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்தனர் இருவர். அப்போது படகில் ஒருவன் வந்து "விரைவாக என்படகில் ஏறிக்கொள்ளுங்கள். உங்கள் இருவரையும் காப்பாற்றுகிறேன்" என்றான்.

தத்தளித்த இருவரில் ஒருவன் உடனே புத்திசாலித்தனமாக ஏறிக்கொண்டு விட்டான். மற்றவன் "உன்னை எப்படி நம்புவது? நீ என்னைக் கரை சேர்க்காமல் கைவிட்டுவிட்டால், என்ன செய்வேன்? உன் படகில் ஓட்டை இல்லை என்பது என்ன நிச்சயம்? இவ்வளவு புயலுக்கு உன் படகு தாக்குப் பிடிக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்" என்று கேள்வி கேட்டுக் கொண்டு நீரில் மூழ்கி இறந்தான்.

எமது வாழ்க்கையும் இதுபோன்றதுதான். நல்ல குருவை நம்பியவன் கரையேறுவான்! கடைத்தேறுவான்!

ரீ. குணவர்த்தன–களுவாஞ்சிக்குடி.

## உழைத்தலே மேன்மையானது

ஒருநாள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் ஒரு தோழரைப்பற்றிய பிரஸ்தாபம் வந்தது. "அவர் நாளெல்லாம் நோன்பிருக்கிறார்; இரவெல்லாம் வணக்கத்தில் ஈடுபடுகின்றார். எப்பொழுதும் தியானத்திலே இருக்கும் அவர் எவருடனும் அதிகம் பேசுவதில்லை" என்றும்; அவர் எப்படி உலகை வெறுத்து வாழ்கின்றார் என்பது பற்றி அங்கிருந்தோர் பாராட்டினார்கள்.

வாழ்த்துரைகளையெல்லாம் செவியேற்ற வள்ளல் நபி பெருமானார், ஒரேயொரு கேள்விதான் கேட்டார்கள், "அவர் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறார் அவருடன் பிறந்த சகோதரர் இவருக்கும் சேர்த்து பாடுபட்டுழைத்து பொருள்தேடி உணவளிக்கின்றார்" என்று சகாபாக்கள் பதிலளித்தனர். "அப்படியாயின் அந்த சகோதரர்தான் இவரைவிட மேன்மையானவர்"; என்று உழைத்துண்ணும் இன்பத்தை உயர்வெனக் கூறினார்கள் வள்ளல் நபியவர்கள்.

".... எனவே நிச்சயமாக கஷ்டத்துடன் சுகமிருக்கிறது. நிச்சயமாக கஷ்டத்துடன் தான் சுகமிருக்கிறது." (94:5,6)

அல்குர்ஆன்.

எல். பாத்திமா சஹ்லா லாபீர்–மூதூர்–04.

## ஐக்கியம்

'என் உரிமையை எப்படியும் பாவிப்பேன், உடமைகளை யாருக்கும் கொடுப்பேன், நான் எடுக்கும் தீர்மானங்களும், செய்யும் காரியங்களும் சரியானவை;' என நினைத்து எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக தன்னைக் காட்டிக்கொள்கின்றவர்களை சமூகத்தில் காணுகின்றோம்.

இவர்கள் சபைகளுக்குள்ளே பிளவுகளையும் பிரச்சனைகளையும் உண்டு பண்ணி விசுவாசிகளுக்கிடையேயுள்ள ஐக்கியத்தை சீர்குலைத்து மகிழ்ச்சி காணத்துடிக்கின்ற சில தீயசக்திகளை அரவணைத்து, ஆலோசனை வழங்கி, ஆஸ்திகளைக் கொடுத்து, அவர்களை வளர்த்து விடச் செய்யும் காரியங்களை திரைமறைவிலே செய்கின்றார்கள்.

"ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்:
ஆகிலும் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு
அவன் அதைச் சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும்:
இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது. (பிர 2:21)

எனவே, தான் வாழும் சமூகத்துக்கும், விசுவாச மக்களுக்கும், திருச்சபையின் ஐக்கியத்துக்கும், கெடுதியை ஏற்படுத்தும் தீய எண்ணமுள்ளவர்களின் வலைகளுக்குள் சிக்கி விடாதபடி: தன்னையும் தன் ஆற்றல்களையும் ஆசிகளையும் ஆண்டவர் இயேசுவின் நாம மகிமைக்காக பாவிப்போமாக.

சகோ. எஸ். யேசுநாதன்–துறைநீலாவணை.

## கவிதைப் போட்டி இல.426



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 29.09.2001

கவிதைப் போட்டி இல.426
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.423


### பரிசுக்குரிய கவிதை

### கிட்டாக் கனி

குலையாய் வாங்கினும்
மலிவாய்க் கிடைத்தது;
மலையாய் குவிப்பினும்
சீப்பாய் வாங்கவும்
முடியாமல்–
விலையாய் போனது!

யாஸீன் ஸாலிஹ்– ஒலுவில்–03.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### சுவை தெரியவில்லை

கசப்பான வாழ்க்கையில்
நொந்து வாழும்
மனங்களுக்கு
உன் இனிப்பான
சுவையும் புரியவில்லை!

துரைராஜா பரிமளாதேவி–கண்டி.

### வரட்சி

அம்பாந்தோட்டையில் வரட்சி!– அங்கு
இல்லையே உனது வளர்ச்சி...!
பட்டினியால் வாடும் எங்களுக்கு–மலர்ச்சி
பொங்கப் பண்ண மாட்டாயோ?.. புரட்சி...!

என். சுகுமாரன் சுபா–தலவாக்கலை.

### இங்கே கிடப்பது ஏன்?

முக்கனிகளில் ஒன்றான–நீ
இங்கே முக்கியடிச்சி கிடப்பது–ஏன்
கனிவதற்கு இன்னும்
காலவகாசம் தேவையோ?

தி. விஜியராணி–எருவில்.

### எச்சரிக்கை

கடமையுணர்வுடன் பயிரிடப்பட்டவையா–இல்லை
களவெடுத்து வந்து குவிக்கப்பட்டவையா?
மடமையின்றி சிந்தித்து வாங்குங்கள்–மாந்தரே
மண்ணுலகில் களவுப் பொருள் பெருக்கம் உணருங்கள்!

பசறையூர்–மல்லிகா பத்மநாதன்.

### எங்களைப் பிரிக்காதே

கூடி வாழ ஆசைப்படும்
எங்களைப் பிரிக்காதே
என்கிறீர்களா?
மனிதனையே கூடி வாழ
விடாத தேசம்
உங்களை எப்படி
விட்டுவிடும்?

செல்வி ராஜேஸ்வரி–
பூண்டுலோயா.

### பழங்கள்

வெளியூர்த்தம்பி
வாங்கினால்–நாமெல்லாம்
வாழைப்பழங்கள்!
உள்ளூர்த்தம்பி
வாங்கினால்–நாமெல்லாம்
ஏழைப்பழங்கள்!!

என். தனுசுஜன்–சண்டிலிப்பாய்.

### குலைக்குள் கொலை...!

எங்களுக்கு இனப்பிரச்சனையும்
புரியும், இலக்கணப்பிழையும்
தெரியும்–வாழைக்குலைக்குள்
ஒரு மனிதக் 'கொலை' சரிந்து
கிடக்கிறது உற்றுப் பாரீர்!!!

ஏ. எப். எம். றியாட்–முள்ளிப்பொத்தானை.

### வாழ்க்கை

இனிமையைச் சுமக்க
இளமை தேவையில்லை–தம்
மானத்தைக் காக்க
மாறுவேடம் தேவையில்லை–உம்
வாழ்வை ருசிக்க–மனத்
தாழ்வு தெரிய வில்லையோ!

கீரியன் குடியிருப்பு வை. சுயந்தன்.

### தூக்கம்

வாழைமேல் வாழையாய்
தூங்குது இந்த வாழை
ஆனால் நாம் மகிழ்ச்சி–மேல்
துக்கமாய் இருக்கிறோம்
இந்த யுத்தத்தால்.

த. மிருசானந்த்–
ஆரையம்பதி–01.

### வேண்டாம்...?

வான்பறவை முட்டை
அழித்ததற்கு...
இந்த வாழைப்பழங்களா?

எஸ். பி. பாலமுருகன்–பதுளை.

# வாசக[ர்] சாலை

### கம்பன் வேண்டும்

என் இனிய முரசே!

நீ சுமந்துவரும் அனைத்து ஆக்கங்களும் அருமையிலும் அருமை. இதை வார்த்தையால் வர்ணிப்பதென்பது 'கலைந்துவிட்ட கனவுகளை கயிறுபோட்டு பிணைக்க முயற்சிக்கும் செயலாகும்.'

நீ சுமந்துவருவதில் அரசியல் செய்திகள் எம்மை அதிரவைக்கின்றன. 'பாப்பா முரசு' பாலகர்களை வளக்கத்தின் உச்சத்திற்கு கொண்டு செல்கின்றன. உன் சேவை வளர்ச்சியைப்பாட 'கம்பன் பிறவியெடுத்து பாடவேண்டும்'. அதைக்கேட்டு வாசகர்களாகிய நாம் மகிழவேண்டும்.

உன் சேவை எமக்கு என்றென்றும் தேவை என உளம் கனிந்து வளமாக வாழ்த்துபவன்.

க. உதயகுமார், கொட்டகலை.

என் இனிய முரசே!

வாரம் தோறும் நீ சுமந்துவரும் அம்சங்கள் அனைத்தும் வாசக நெஞ்சங்களை கவர்ந்தவைகளாக இருக்கின்றன. இராஜகுமாரனின் 'மன்னாதி மன்னன்', 'அடோல்ஃப் ஹிட்லர்', 'தகவல் பெட்டி', 'சினி'மாச் செய்திகள் போன்ற பல்வேறு அம்சங்கள் அருமையாக இருந்தன. உனது இதழ்கள் உலகெங்கும் பரவி உன் சேவை தொடர நான் உளமலர்ந்து வாழ்த்துகின்றேன். வளமுடன் நீ வாழ்க.

திருவாசகம் தர்ஷனி, புங்குடுதீவு–10.



தமிழர் நெஞ்சங்களில் தேன் சிந்தும் தினமுரசே, 'வாரம் ஒரு வார்த்தை' மூலம் ஆயிரம் அர்த்தங்களை அள்ளி வழங்குகிறாய் 'நில்–கவனி–முன்னேறு' பகுதியை வாசிப்பதனால் என் தன்னம்பிக்கை இன்னும் வளர்கிறது. உனக்கு என் இதய பூக்கள் கொண்டு நன்றி கூறுகிறேன்.

ஷீலா மாணிக்கம்–மன்றாசி.

என் அன்பின் முரசே! உன்படைப்புக்கள் யாவும் மிகவும் அருமை. எதைப் பாராட்டுவது என்று தெரியவில்லை. 'அனிதாவின் காதல்கள்' தொடர்கதை எப்போது தினமுரசு சுமந்து வரும் என எதிர்பார்க்கத் தூண்டுகிறது.

மொத்தத்தில் தினமுரசு தினம் வராதா என ஏங்க வைக்கிறது. உன் பணி தொடர என் பலகோடி வாழ்த்துக்கள்.

வை. சாந்தரூபி, காரைதீவு–12.

வியாழன் தோறும் வீறு நடைபோட்டு வண்ண முகமுடனே தரணியெல்லாம் தாவி வலம் வரும் என் உயிர் முரசே! நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் அட படுசூப்பர். அதிலும் பயமின்றி இன்றைய அரசியலை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டும் உன் துணிச்சல் மிகு செயலை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. முரசே! நீ வளர் பிறையாய் என்றும் பவனிவர என் இதய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

கலைப்பிரியன் வேணு, பெரிய நீலாவணை–01.

### வாழ்த்துக்கள்...

முரசின் ஆரம்பகால ரசிகன் நான். முரசு சுமந்துவரும் அனைத்து அம்சங்களையும் ஒன்றுவிடாமல்–உடனுக்குடன் சூட்டோடு சூடாகப் படித்து முடித்துவிடுவேன். ராமனின் பாதம் பட்டதும்தான் அகலிகைக்கு உயிரே வந்தது... வியாழன் வந்து... முர்சு என் கையைத் தொட்டால்தான் எனக்கு உயிரே பிறக்கும்.

சுஜாதாவினுடைய தீவிர விசிறியான எனக்கு, அவரின் புத்தகங்களை படிக்கின்ற வாய்ப்பு அதிகம் கிட்டவில்லை... ஆனால் அந்தக் குறையை முரசு மட்டுமே முன்னின்று செய்கின்றது... பாராட்டுக்கள்...

விளையாட்டுப் பிரியையான எனக்கு, முரசில் வெளியாகும் விளையாட்டுச் செய்திகளைப் பார்த்து உள்ளம் பூரித்துப், பனிமழையிடம் சரண் புகுகின்றன...

மொத்தத்தில் "முரசு பல்சுவையும் கொண்ட காத்திரமானதொரு பத்திரிகை என்பதில் எனக்கு எள்ளளவுக்குக்கூட ஐயமென்பதேயில்லை.

**முரசின் பணி தொடர வாழ்த்துக்கள்.....**

ஏஸ். ஏ. றபியுல்தீன்–கரம்பை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

### ஆவலைத் தூண்டுகிறாய்

அன்பின் முரசே!

உன் அனைத்து அம்சங்களும் எமதுள்ளங்களைக் கொள்ளை அடித்து தவிக்கையில் வெள்ளிதனில் தாகத்தைத் தீர்ப்பது போன்று தாவி வந்திடுவாய். அதைப் பார்த்தபின் அடுத்த முரசு எப்போ வரும் என்று ஆவலையும் தூண்டி விடுவாய். முரசே உனக்கு நிகர் நீதான். என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

ஜி. கே. றஞ்ஜினி–நெடுந்தீவு–05.

# உங்கள் பக்கம்

## நவீன உலகில் கலாசார விழுமியங்கள்

இன்றைய விஞ்ஞான உலகத்திலே உலகம் மிகவும் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கின்றது. விஞ்ஞானம் மெஞ்ஞானமாகிக் கொண்டிருக்கின்றது. மில்லேனியம் கடந்து 21ம் நூற்றாண்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எமது வாழ்வு கொம்பியூட்டர் உலகோடு ஒட்டியுள்ளது.

சகல உயிரினங்களும் விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி செயற்கை வடிவில் உருப்பெற்று வருகின்றன. இன்றைய உலகில் எமது கலைகலாசாரத்தையும், பாரம்பரியங்களையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்திக்கொள்ளவேண்டியது எமது கடமையாகும்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்தகுடி– முதல்குடி தமிழ்க்குடி' என்பது வரலாற்று ஆசிரியர்களின் கூற்று. இந்தத் தமிழ்க்குடி மக்களின் ஆரம்பகால கலாசாரங்களையும், நவீன உலகில் அது மாற்றுருப்பெற்று விஞ்ஞானத்தையும் விஞ்சி நிற்பதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

எப்படியிருந்தாலும் நாம் எமது கலாசாரத்தை கட்டியெழுப்புவது எமது தலையாய கடமையாகும்.

அதேவேளை எமது பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படாத வண்ணம் நாட்டுக்குநாடு இடத்திற்கு இடம் எங்கள் பண்பாடுகளை மாற்றிக் கொள்வது அவசியமாகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் நாம் அமெரிக்காவிற்கோ அல்லது இங்கிலாந்திற்கோ போனால் அங்கு எமது கலாசாரத்தை கட்டுக்கோப்பாக வைத்திருப்பது என்பது கடினம்தான். ஏனெனில் எங்கள் தமிழ் கலாசாரப்படி ஒருவரை நேரில் காணும்போது, இரண்டு கைகளையும் கூப்பி 'வணக்கம்' என்பார்கள். இதே செயற்பாட்டை வெள்ளைக்காரன் ஒருவரைப் பார்த்து செய்யும்போது அவன் எங்களை 'முட்டாள்' என்று கண்டபடி திட்டித்தீர்ப்பான்.

எனவே வெள்ளைக்காரன் கலாசாரப்படி ஒருவரைக் கண்டால் கைகுலுக்கி வணக்கம் சொல்வார்கள். முதுகில் தட்டி முத்தம் கொடுப்பார்கள். இப்படிப்பட்ட செயற்பாட்டைக் கண்டு எமது மக்களில் சிலர் வியப்புக்கு உள்ளாவார்கள். எனவே இப்படிப்பட்ட வியப்புக்கள் சர்வ சாதாரணம். இடம், காலம், பொருள் என்று பார்த்துச் செயற்பட்டால், ஆங்கிலதேசத்தில் இடத்திற்குத் தகுந்தது போல் மாறுவதில் எந்த வகையான தவறுகளும் இல்லை.

குறிப்பாக இன்று எமது மக்கள் உள்நாட்டுப் பிரச்சனைகாரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் அனைவரும் எமது கலாசாரத்தையே பின்பற்றுவோம் என்று எண்ணியிருந்தாலோ அல்லது அதனைப் பின்பற்றியிருந்தாலோ இன்று இலண்டனிலோ அல்லது வேறு எந்த வெளிநாடுகளிலுமோ வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. எவ்வாறிருந்தாலும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாற்றத்தை நிரந்தரமாக மாற்ற முயலக்கூடாது.

வெளிநாட்டிலுள்ள நம்மவர் ஒருவர் தாயகம் திரும்பியதும் தாயகக் கலாசாரத்திற்கு தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும்.

சந்தர்ப்பத்திற்கேற்றதுபோல் மாறிக் கொள்ளும்போது முற்றுமுழுதாக மாறவேண்டும் என்பது முறையல்ல. குறிப்பாக ஆங்கிலக் கலாசாரப்படி ஒருவன் எத்தனை பெண்களோடும் சல்லாபித்துக்கொள்ளலாம். அதேபோல் பெண்களுக்கும் அது விதிவிலக்கல்ல. இதனால் எயிட்ஸ் போன்ற வியாதிகள் உருவாகக் காரணமாகின்றது. எனவே இப்படிப்பட்ட தகாத உறவுமுறைகளை பின்பற்றுதலையோ அல்லது ஒருவன் பலரையும் ஒருத்தி சிலரையும் என்ற நிலை உருவாகக்கூடாது. எமது கலாசாரப்படி ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை மாறக்கூடாது.

எனவே நவீன உலகில் எமது கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்பதே எனது வேண்டுதலுமாகும்.

ஆர். இரட்னேஸ்வரன், தோகா–கட்டார்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த. பெ. இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: 074–514282
தொலை நகல் (Fax):– 074-513266

# ஒசாமா பின்லேடன் உயிருடனோ பிணமாகவோ வேண்டும் என புஷ் அறைகூவல்

# ஆப்கானிஸ்தான் எந்தநேரத்திலும் தாக்கப்படலாம் என்ற அபாயத்தில் தலிபான் துருப்புக்களும் உஷார் நிலையில்

அமெரிக்கா மீதான தாக்குதலின் சூத்திரதாரி எனக் கருதப்படும் ஒசாமா பின் லேடனை உயிருடனோ, பிணமாகவோ தமக்குத் தேவையென அறிவித்திருக்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆப்கானிஸ்தான்மீது எந்தநேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடிய விதத்தில் உஷாராக இருக்குமாறு தனது படைகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

அமெரிக்காவில் யுத்த சூழ்நிலை ஒன்றுக்கு முகம்கொடுக்கும் வகையில் அந்த நாட்டு ரிசேர்வ் படையணிகள் கடமைக்கு அழைக்கப்பட்டு பூரண தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா மேற்கொள்ளவிருக்கும் தாக்குதல்களை தடுக்க பாகிஸ்தான் மேற்கொண்ட ராஜதந்திர முயற்சிகள் தோல்வியைத் தழுவியிருக்கும் அதேவேளை ஒசாமா பின் லேடனை அமெரிக்காவிடம் அல்லது சர்வதேச சமுகத்திடம் விசாரணைக்காக கையளிப்பது குறித்த முக்கியமான தீர்மானமொன்றை வியாழக்கிழமை அறிவிக்கவிருப்பதாக ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனிலும் அமெரிக்கா ஆப்கான் மீது தாக்குதல் நடத்தும் சாத்தியக் கூறுகள் அதிகரித்திருப்பதையை அடுத்து அந்த நாட்டு துருப்புக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலிபான் துருப்பினர் பாகிஸ்தானுடனான எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா தமக்கெதிராக போர் தொடுக்குமாயின் தங்களுக்கு உதவவேண்டும் என தலிபான் அமைப்பு முஸ்லிம் நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை கடந்த வாரம் அமெரிக்காவில் நடந்த தாக்குதலுக்கும் தனக்கும் தொடர்பில்லையென ஒசாமா பின் லேடன் மீண்டும் ஒருமுறை கூறியிருக்கிறார்.

## உயிரிழந்தவர்களின் விவரங்கள் புலிகளால் அறிவிப்பு!

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலில் கடற்புலிகளின் துணைத்தளபதி லெப். கேணல் இரும்பொறை மாஸ்டர் உயிரிழந்துள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வடமராட்சி கிழக்கில், பருத்தித்துறைக்கு கிழக்கே சுமார் 40 கி.மீ. தூரத்தில் 1,200 படையினருடன் சென்று கொண்டிருந்த கப்பலைத் தாக்க கடற்புலிகள் மேற்கொண்ட முயற்சியிலேயே லெப்.கேணல் இரும்பொறை மாஸ்டர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சமரில் இவருடன் நான்கு கடற்கரும் புலிகள் உட்பட பத்துப் புலிகள் உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

திருகோணமலை துறைமுக வாயிலில் கடந்த சனிக்கிழமை காலை கடற்படையினரின் அதிவேக டோரா படகு மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் உட்பட மட்டக்களப்பு அரணகன்வில, மணலாறு, ஓமந்தை, விளாத்திக்குளம் ஆகிய வெவ்வேறு இடங்களில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல்களில் இரண்டு கடற் கரும்புலிகள் உட்பட 12 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

திருகோணமலை கடற்பரப்பில் துறைமுகவாயிலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் டோரா படகு மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படையினரின் படகு சேதமடைந்தது. இந்தத் தாக்குதலையடுத்து துறைமுகத்தின் உள்ளேயிருந்து உதவிக்கு விரைந்த சில டோரா படகுகள் சேதமடைந்த படகை இழுத்துச் சென்றதாகவும், இந்தத் தாக்குதலில் 2 கடற்கரும் புலிகள் உயிரிழந்ததாகவும் புலிகளின் வானொலி ஞாயிற்றுக்கிழமை இரவு தனது செய்தி ஒலிபரப்பில் தெரிவித்தது.

இந்த மோதலில் கடற்கரும்புலிகள் தமிழினியன் அல்லது பொறையரசன் (செல்வரத்தினம் யோகேஸ்வரன்), ஓசை இனியன் (இரத்தினம் ராஜ்குமார்) ஆகியோர் உயிரிழந்துள்ளார்கள்.

இதேதினம் ஓமந்தை விளாத்திக்குளம் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் புலிகளின் காவல்துறையின் சிறப்புப்படையைச் சேர்ந்த இராமன் அல்லது சுதா (கண்டியைச் சேர்ந்த தங்கராசா இராமன்) உயிரிழந்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை மணலாறு பகுதியில் இடம் பெற்ற மோதலின் போது, தமிழீழ தேசிய துணைப்படையைச் சேர்ந்த 2ஆம் லெப்டினன்ட்களாகிய தமிழ்ச்செல்வன் (யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த இராசு தமிழ்ச்செல்வன்), பாலகிருஷ்ணன் (கிளிநொச்சியைச் சேர்ந்த இராமையா பாலகிருஷ்ணன்), லெப்டினன்ட் ஞானசேகரம் (ஆனையிறவைச் சேர்ந்த சோமு ஞானசேகரம்) ஆகிய மூன்று பேர் பலியாகியுள்ளார்கள்.

கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அரணகன்வில என்ற இடத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகளின் அன்பரசி படையணியின் தளபதி லெப்டினன்ட் கேணல் சிவகாமி உட்பட 6 பெண்போராளிகள் உயிரிழந்துள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் அன்பரசி படையணியின் தளபதி லெப்டினன்ட் கேணல் சிவகாமி என்றழைக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சின்னத்துரை நிஷாந்தினி, கப்டன் கலைவிழி (மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சங்கப்பிள்ளை பவளக்கொடி) லெப்டினன் அருமைநாயகி (கந்தப்போடி தனலட்சுமி), 2 ஆம் லெப்டினன்ட் தினசா (கிருஷ்ண பிள்ளை கலைவாணி), 2ஆம் லெப்டினன்ட் அகநிலா (காசுபதி ஜெயா), சந்திரமதி (செல்லத்தம்பி வனிதா) ஆகியோரே உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதனவரி செலுத்த அவசரப்படவேண்டாம் பள்ளிவாசல் சம்மேளம் அறிவுறுத்தல்

ஆதன வரிகளை பெருந்தொகை நிலுவைப் பணத்துடன் சேர்த்து மொத்தமாகச் செலுத்துமாறு ஏறாவூர் நகர பிரதேச சபை எல்லைக்குள் வாழும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள ஆதனவரியை மொத்தமாகச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆதனமும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும் என எச்சரிக்கப்பட்டுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலுக்கு அமைவாக ஏறாவூர்நகர பிரதேச முஸ்லிம்கள் எவரும் கடன்பட்டோ அல்லது ஆதனங்களை அடவு வைத்தோ பணம் செலுத்த வேண்டாமென ஏறாவூர் பள்ளிவாசல்கள் சம்மேளனம் பொது மக்களை கேட்டுள்ளது.

ஆதனவரியை நிலுவைப் பணத்துடன் செலுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏறாவூர் மக்களின் நிலைமையை விளக்கி கடிதம் அனுப்பியுள்ளோம். எனவே அது சம்பந்தமாகத் தீர்மானமெடுத்து சம்மேளனத்திற்கு அறியத் தருவதாக அதிகாரிகள் கடிதம் அனுப்பியுள்ளனர் என்று பள்ளிவாசல்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர்ப் பகுதி முஸ்லிம்கள் கடந்த 15 வருட காலமாக தமது சொத்துக்கள், விவசாய நிலங்கள், கால்நடைகள், வருவாய் வாய்ப்புக்கள் அனைத்தையும் இழந்து திறந்த வெளி அகதி முகாம் போன்றே வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில் வடக்கு கிழக்கில் வேறு இடங்களில் அறவிடப்படாத பெருந்தொகை ஆதன வரியை எங்ஙனம் ஏறாவூர் மக்களிடம் மட்டும் அறவிட முடியும் எனப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் கேட்டுள்ளது. ■

## அஷ்ரப் நினைவுதின வைபவங்கள்

மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரபின் முதலாவது வருட நினைவு தின வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் உட்பட பெருந்தொகையான அரசாங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை அஷ்ரப் நினைவு தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களிலும் பல மத நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சிகளில் முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் உட்பட பல முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மறைந்த தலைவரின் நினைவாக இப்பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களில் அதிகாலையில் கத்தமுல் குர் ஆன் ஓதி தமாம் செய்யப்பட்டன. விசேட கூட்டுப் பிரார்த்தனை வைபவங்களும் இடம் பெற்றன. ●

## போலியோ மருந்தேற்றல் செயற்திட்டத்துக்கு உதவியாக போர் நிறுத்தம் செய்யுமாறு யுனிசெப் வேண்டுகோள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் ஐந்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமையும் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமையும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கு வசதியாக எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளிலும் ஒக்டோபர் 19,20 ஆம் திகதிகளிலும் போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் கோரியுள்ளதாகவும் யுனிசெப் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யுனிசெப், 'உலக சுகாதார நிறுவனம்' ரோட்டரி கழகம், அரசசார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் அமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவுடன் சுகாதார அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

5 வயதுக்குட்பட்ட சுமார் 313,000 பிள்ளைகள் இந்தப் போலியோ மருந்தைப் பெறுவார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு சுமார் 5000 சுகாதார சேவையாளர்கள், தொண்டர்கள் ஆகியோர் அணி திரட்டப்பட்டுள்ளனர். பேரலியோ நோயை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கும் பொருட்டு சுகாதார அமைச்சு 1995ஆம் ஆண்டில், யுனிசெப், உலக சுகாதார நிறுவனம், ரோட்டரிக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு தேசிய தடுப்பு மருந்தேற்றல் தினங்களை அறிமுகம் செய்தது.

இதன்படி நாட்டிலுள்ள 5 வயதுக்குட்பட்ட எல்லாப்பிள்ளைகளுக்கும் வருடம் தோறும் இரண்டு முறை போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

ஆயினும் போர்ச்சூழல் காரணமாக வடகிழக்கு மாகாணங்களில் தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை பூரணமாக நிறைவேறாப்பகுதிகள் இன்னமும் காணப்படுகின்றன. மேலும் இந்த மாவட்டங்களில் மக்கள் அடிக்கடி இடம்பெயர்ந்து போவதும் வருவதுமாயுள்ளனர். எனவே, சுகாதார அமைச்சு தேசிய தடுப்பு மருந்தேற்றல் இயக்கத்தை இந்த வருடம் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மட்டுமே நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளது. ●

## மட்டக்களப்பில் சேர்க்கப்படும் சிறுவர்கள் உடனுக்குடன் வன்னிக்கு அனுப்பிவைப்பு!

### நகர்ப்பகுதியை நோக்கி மக்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பில் கட்டாய ஆட்சேர்ப்பின் மூலம் சேர்க்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்கள் உடனடியாக புலிகளின் அதிவேகப் படகுகள் மூலம் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த சில நாட்களாகப் பிடிக்கப்பட்ட சிறுவர்கள் கிழக்கில் வைக்கப்படவில்லை என்று பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் கூறுகின்றனர்.

கிழக்கிலிருந்தால் பிள்ளைகள் தப்பி ஓடி விடக்கூடும் என்பதாலேயே அவர்கள் உடனடியாக வன்னிக்காட்டுக்கு அனுப்பப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்தவார இறுதியில் கிழக்குக் கரையில் பிள்ளைகளை மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குக் கொண்டு செல்வதற்காக புலிகளின் துருப்புக் காவிப் படகுகள் தரித்து நின்றதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு நகரப் பகுதிக்கு வரும் சில போக்கு வரத்து வழிகளைப் புலிகள் தடை செய்து கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டபோதும் புலிகளால் தடை செய்யப்படாத பட்டிருப்பு மற்றும் செங்கலடி, சித்தாண்டி, வந்தாறுமுலை வழிகளுக்கூடாகப் பொதுமக்கள் புலிகளின் பகுதிகளிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டை அண்டிய பகுதிகளுக்கு அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

நகரப் பகுதிகளில் வாடகை வீடுகள் யாவும் இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பியுள்ளன. தமது பிள்ளைகளை காப்பாற்றும் நோக்கில் பல பெற்றோர் நகரப் பகுதிகளிலும் அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் இடம்தேடி அலைகிறார்கள்.

இதுவரை களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, கல்லடி, மட்டக்களப்பு, மைலம்பாவெளி, செங்கலடி, ஏறாவூர் போன்ற பகுதிகளுக்கு ஏராளமான தமிழ்க் குடும்பங்கள் வந்து சேர்ந்துள்ளன.

## தார்கொண்டு அழிப்பு

தெருக்களிலும் தெருவோரங்களிலும், பஸ்நிலையங்கள் மற்றும் பொது இடங்களிலும் புலிகளால் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் இப்பொழுது தார் கொண்டு அழிக்கப்பட்டுள்ளன.

சமீப நாட்களுக்கு முன்னர் இரவோடிரவாக புலிகளால் இந்த வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. மட்டக்களப்பு-செங்கலடிப்பகுதியிலிருந்து கும்புறுமுலை வரை இந்தவாசகங்கள் காணப்பட்டன.

## உதயனுக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் வழக்கு

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகைக்கு எதிராக மான நஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகத்தில், வெளியான வாசகர் கடிதம் ஒன்று தொடர்பாகவே இம்மானநஷ்ட வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக ஈ.பி.டி.பி.யின் செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

இதேவேளை, இக்கடிதம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்திலும் அமைச்சர் தேவானந்தா புகார் செய்திருப்பதாக அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## விமானக்கட்டணங்கள் மீண்டும் உயர்வு

கட்டுநாயக சர்வதேச விமான நிலையத்துக்கு வந்து போகும் விமானங்கள் மீதான காப்புறுதிக்கட்டணம் 400 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதையடுத்து விமானக் கட்டணங்கள் மீண்டும் உயர்ந்துள்ளன.

இதேவேளை இந்த காப்புறுதிக்கட்டண அதிகரிப்போடு எமிரேட்ஸ் நிறுவனம் இலங்கைக்கான அதன் சேவைகளை இடை நிறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் சேவைக்கு அடுத்ததாக கட்டுநாயக்கவுக்கும் உலக நாடுகளுக்கும் இடையில் அதிகளவு விமான சேவைகளை நடாத்தும் எமிரேட்ஸ் நிறுவனம் அதன் சேவைகளை திடீரென நிறுத்தியதையடுத்து பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

காப்புறுதிக்கட்டணங்களை உயர்த்தும் தீர்மானம் லண்டனில் உள்ள லொயிட்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ■

## வீட்டுக்கொரு போராளி அல்லது பெருந்தொகைப் பணம்

மட்டக்களப்பில் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இடம்பெற்றுவரும் வீட்டுக்கொரு போராளி என்ற கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நகர்ப் பகுதிக்கும் நகரைச் சூழவுள்ள கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் புலிகள் விஸ்தரித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் தமது கூட்டங்களுக்கு சமுகமளிக்க வேண்டுமென்று புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இத்தகவல் படைத்தரப்புக்கும் எட்டியுள்ளது. இதனால் புலிகளால் கூட்டங்களுக்கு பொதுமக்கள் அழைக்கப்படும் தினங்களை முன்கூட்டியே அறிந்து படையினர் கட்டுப்பாடற்ற பகுதிப் போக்குவரத்துக்களைத் தடைசெய்து விடுகின்றனர்.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பொதுமக்களுக்கான கூட்டமொன்றுக்கு வருமாறு புலிகள் அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனையறிந்த படையினர் கட்டுப்பாட்டற்ற பகுதிகளுக்குச் செல்லும் மட்டக்களப்பு-கொம்மாதுறை, வந்தாறுமுலை, சித்தாண்டி ஆகிய போக்குவரத்து வழிகளைத் தடைசெய்துவிட்டனர்.

வீட்டுக்கொரு போராளி என்ற உத்தரவுப்படி தமது ஒரு பிள்ளையை போராட்டத்திற்கு வழங்கவேண்டும். பிள்ளைகள் இல்லாத பட்சத்தில் பெருந்தொகைப் பணத்தை வழங்கவேண்டும் என்றும் புலிகள் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளனர். ■

## காணாமல்போன மலையக யுவதி சடலமாக மீட்பு!

நாவலப்பிட்டியில் கடந்த புதன் கிழமை காணாமல்போன இளம் யுவதி ஒருவர் இருதினங்களின் பின்னர் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி இம்புல்பிட்டியைச் சேர்ந்த சோளமலை உமாதேவி (வயது 23) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரைக் கடத்திச் சென்று காமுகர்கள் சிலர் யுவதியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின் கழுத்தை நெரித்துக் கொடூரமாக கொன்றுள்ளதாகவும் சடலம் நாவலப்பிட்டி மல்லாந்தை என்ற இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவதினமான 12 ஆம் திகதி தையல் வகுப்பிற்கு செல்வதாக கூறிச்சென்ற மேற்படி யுவதி அதற்குப்பின் வீடு திரும்பாததால் இது குறித்து இவரது தந்தையான சோளமலை நாவலப்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் 14ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் மல்லாந்தையிலுள்ள காட்டுப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு இடத்தைச் சுற்றி காகங்கள் வட்டமிட்டதையடுத்து சந்தேகம் கொண்ட பிரதேசவாசிகள் சிலர் அப்பகுதிக்கு சென்று பார்த்தபோது முகம் சிதைவடைந்த நிலையில் இவரது சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

## நிவாரண உதவி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் புலிகள் இயக்கத்தின் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு யாராவது இடம்பெயர்ந்திருந்தால் அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் வட மாகாண அபிவிருத்தி தமிழ் விவகார அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார் என்று மட்டக்களப்பு அலுவலக பொறுப்பாளர் பரணிதரன் பிரதீபன் தெரிவித்துள்ளார். ■

# முரசம்

## புதியதோர் உலகத்துக்காய்....

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

பயங்கரவாதத்துக்கு எதிராக
அமெரிக்கா
போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது!
கடந்த வாரம் வரையிலும் பயங்கரவாத
அமைப்புக்களின் மனித உரிமைகளை
மதிக்க வேண்டும் எனக் கூறி வந்த
அமெரிக்க சிவில் அமைப்புக்கள்
பயங்கரவாதிகளை
பூண்டோடு அழிக்க வேண்டுமென
வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

தமது நலன்களுக்காக மாத்திரம்
பயங்கரவாதத்தை பயன்படுத்தலாம்
என்ற கனவிலிருந்து அந்த நாட்டு
அரசாங்கம் கடந்த 12ம் திகதி
விழித்துக் கொண்டது.

ஒரு காலத்தில் தங்கள்
கைகளினாலேயே
பாலூட்டி வளர்க்கப்பட்டவர்கள்
மார்பில் பாய்ந்து இதயத்தை
கிழிக்கும் வரையில் தமது
விளையாட்டின்
அபாயத்தை உணரமுடியாமல் இருந்த
அமெரிக்கர்கள் வரலாறு காணாத
அழிவை தம் கண் முன்னால் கண்ட
பின்னர் சர்வதேச பயங்கரவாதத்தின்
அபாயத்தைப் பற்றி உபதேசிக்க
ஆரம்பித்துள்ளார்கள்.

வெறுமனே உபதேசத்துடன் மாத்திரம்
நின்றுவிடாமல் போர்ப்பிரகடனமும்
செய்திருக்கிறார்கள்.

அடிப்படைவாத சிந்தனை கொண்ட
பயங்கரவாதம்
நவீனத்துவத்தின் உதவியோடு
மானிட சமூகத்துக்கு விடுக்கும்
அச்சுறுத்தல் இலேசானதல்ல.

அவர்களது குறிக்கோள்களின்
முன்னால்
மனித சமுதாயத்தின் உயிர் வாழும்
உரிமைக்கு
மதிப்போ மரியாதையோ
கிஞ்சித்தும் கிடையாது.
அழிவை தவிர அவர்களுக்கு
வேறு பாஷை தெரியாது!

மிகப்பெரிய துரதிஷ்டம் யாதெனில்
இத்தகைய பயங்கரவாதத்தின் கரங்கள்
இன்று இன மத மொழி பேதங்களை
மாத்திரமன்றி நாடுகளின்
எல்லைகளையும்
தாண்டி உலகமயமாக்கலோடு ஒன்றித்து
வளரும் ஒரு மாபெரும் அபாயமாக
வியாபித்திருப்பதுதான்.

சர்வதேச பயங்கரவாதத்தின்
தன்மையை
அமெரிக்கத் தாக்குதலுக்குப் பின்னர்
உலகம் நன்குணர்ந்திருப்பதை
அவதானிக்க முடிகிறது.
பயங்கரவாதத்துக்கு எதிரான
அமெரிக்காவின்
நடவடிக்கைகளுக்கு அந்த நாட்டின்
பரம எதிரிகளாக உள்ள கியூபா, சீனா
போன்ற நாடுகள்கூட
ஆதரவளித்திருப்பதன்
மூலம் இது தெளிவாகின்றது.

அமெரிக்கா அதன் வழமையான
இனத்துவப்பாகுபாடுபாட்டை
வெளிக்காட்டாது
'பயங்கரவாதம்' என்ற வரையறைக்குள்
அடங்கும் சகல திசைகளிலும் தன்
பார்வையை விஸ்தரிக்குமாயின்
இன்றை விட சிறந்ததோர் உலகத்தை
நாளை எதிர்பார்க்க முடியும்!

இதற்கு பயங்கரவாதத்தை தெளிவாக
அடையாளம் காணும் திடமான
சிந்தனையும், நேர்மையும்
இன்றியமையாதவை!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

**என்றென்றும்
அன்புடன்,**

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஐ.தே.க.வின் மற்றொரு வியூகம்

மக்கள் விடுதலை முன்னணியின் நன்னடத்தை அரசாங் கத்தை ஓட்டிச் செல்வது இலகுவான காரியமல்ல என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணி உணர ஆரம்பித்துள்ளது. இவ் விருபிரிவினருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான நாளில் இருந்து அதிலிருக்கும் ஷரத்துக்களை அமுல் செய்வதில் புதுப்புது பிரச்சனைகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன.

பாராளுமன்றத்தை கூட்டுவதும் சர்வஜன வாக்கெடுப்பை இரத்துச் செய்வதும் ஜனாதிபதியின் ஒரு கெசட் அறிவித்த லால் செய்யக்கூடிய காரியங்கள். அதனால் அவை எந்தவித சிக்கலும் இன்றி நடந்து முடிந்தன. ஆனால் அதன் பின்னர் குறிப்பிடப்பட்டிருக்கும் செயல் வடிவம் கொடுக்க வேண்டிய நன்னடத்தை நிபந்தனைகளில்தான் இழுபறி நிலை தோன்றியிருக்கிறது.

43 பேர் கொண்ட அமைச்சரவையை 20 ஆக குறைப் பதில் அரச உயர்மட்டம் பலத்த சங்கடத்தை எதிர்கொண்டது. எவருடைய மனதையும் நோகவைக்காமல் 43 பேரை 20 ஆக குறைப்பது இலேசான காரியமல்ல. 'எந்த நேரத்திலும் அமைச்சர் பதவிகளை தூக்கியெறியத்தயார்' என்று கூறிக் கொண்டிருந்த பலர், பதவியை பறித்தால் ஆதரவை வாபஸ் பெற நேரும் என்று சமிக்ஞை செய்திருந்ததால் இருப்ப வற்றை பிரித்துக் கொடுப்பதில் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. உண்மையில் இதை வாசிக்கும் நேரம் வரையிலும்கூட தற்போதைய அமைச்சரவையின் சரியான தொகையையும், யார் யார் இடம்பெற்றிருக்கிறார்கள் என்ற விபரமும் தெளிவில்லாமல் இருக்கலாம். ஜனாதிபதியையும் பிரதமரையும் தவிர்த்து 20 பேர்கொண்ட அமைச்சரவைக்கு ஜே.வி.பி.யின் அங்கீகாரம் கோரப்பட்ட போதும் '20 என்றால் 20' என திட்டவட்டமாகக் கூறியிருக்கும் விமல் வீர வன்ச ஜனாதிபதி பிரதமர் உள்ளடங்களாகவே 20 பேர் அமைய வேண்டு என தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பி.யின் நன்னடத்தை அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்கள் வேண்டாம் எனக்கூறி, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கடந்த 7 ஆண்டு கால குறைகளை சுட்டிக் காட்டி ஜனாதிபதிக்கு இராஜிநாமா கடிதம் சமர்ப்பித்த நான்கு அமைச்சர்களுள் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே மறுநாள் காலையிலேயே மீண்டும் அமைச்சராக விருப்பம் தெரிவித்து குழறுபடியை அதிகரிக்கச் செய்துவிட்டார். தனது கட்டான தொகுதி மக்களின் வேண்டுகோளின் பேரிலேயே தான் மீண்டும் அமைச்சுப் பொறுப்பை ஏற்க விரும்பியதாக ஜெயராஜ் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறெனி னும் கடந்த 12ம் திகதி நடைபெற வேண்டியிருந்த அமைச்சர வை மாற்றம் ஒரு வாரகாலமாக இழுபட்டுக் கொண்டிருக் கிறது.

இது தீர்ந்ததென்று வைத்துக் கொண்டால் மறுபுறத்தில் விலைவாசி அதிகரிப்புப் பிரச்சனை கிளப்பப்படுகின்றது. ஜே.வி.பி. ஒப்பந்தத்தின் படி அடுத்த ஒரு வருட காலத்துக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப் பிடப்பட்டுள்ளது. ஆனால் திங்கட்கிழமை முதல் கோதுமை மாவின் மொத்த விலை ஒரு ரூபா 60 சதத்தினால் அதிகரித் துள்ளது. இது குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக ஜே.வி.பி. கூறியிருக்கிறது.

எவ்வாறிருந்தாலும் இவை சிறிய பிரச்சனைகளே இவற்றுக்கு ஏதோ ஒரு வழியில் தீர்வைக் காண முடியும்!

நன்னடத்தை அரசாங்க நிபந்தனைகளில் பிரதானமானது சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பானதுதான். இப்போது இது குறித்து பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சமயத்தில் ஜே.வி.பி. சற்றும் எதிர்பாராத ஒரு திசையில் காய் நகர்த்த அரசாங்கம் தயாராகி வருவதை அவதானிக்க முடிகிறது.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம்தான் இந்த சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட விருக்கின்றன. அரசியல் யாப்பில் அவ்வாறானதொரு திருத்தத்தைக் கொண்டுவர பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது 'மக்கள் ஆணை அவசிய மாகும். சர்வஜன வாக்கெடுப்பொன்றில் மக்கள் ஆணையை பெறாது அரசியலமைப்பில் திருத்தம் செய்ய முடியுமா முடி யாதா என்பதை உயர்நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும். ஒருவேளை சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிடுமாயின் ஜே.வி.பி.யின் திட்டங்களில் பாரிய குழறுபடி தோன்றும்.

நீதிமன்றத்தின் ஊடாக அவ்வாறானதொரு உத்தரவைப் பெற அரசாங்கம் முயற்சிப்பதாக ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கூறியிருக்கிறார்.

அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வர சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது அவசியம் என நீதி அரசியல்யாப்ப அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்திருந்த கூற்றை அர சாங்க ஊடகங்கள் பலத்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

இந்த சுயாதீன ஆணைக்குழு நியமனத்துக்கு ஆதரவ வழங்காமல் தவிர்க்க ஐக்கிய தேசிய கட்சி ஏதாவது ஒரு சாட்டுப் போக்கை தேடும் என்பதை எதிர்பார்த்தேயாக வேண்டும். ஏனெனில் இத்தகையதொரு ஜனநாயக சீர்த் திருத்தக் கனவை நனவாக்கிய பெருமை ஜே.வி.பி. யிற்கோ, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ போய்ச் சேருவதை ஐ.தே.க ஒரு போதும் விரும்பாது.


ஆணைக்குழுக்களின் நியமனத்தை பரிசீலிக்கும் அர சியலமைப்பு நிர்ணய சபைக்கான உறுப்பினர்களை தெரிவ செய்வதில் இப்போது பிரச்சனை தோன்றியிருக்கிறது. இதற்கென நியமிக்கப்படும் 8 பேர் கொண்ட சபையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதி நிதி ஒருவரும் இடம்பெற வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கூறப்படுகின்றன. ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொண்டால் ஆணைக் குழுவின் சுதந்திரம் அர்த்தமற்றதாகிவிடும் எனக்கூறி ஐ.தே.க இதனை எதிர்க்கிறது. உண்மையில் ஐ.தே.க.வின் எதிர்ப்பின் நோக்கம் ஆணைக்குழுக்களின் சுதந்திரத் தன்மையை பாதுகாக்க வேண்டும் என்பதல்ல நன்னடத்தை அரசாங்கத்தை குழப்ப வேண்டும் என்பதுதான். ஐ.தே.க.வின் ஆதரவு மறுக்கப்பட்டால் சர்வஜன வாக்கெடுப் புக்கு அரசாங்கம் தள்ளப்படும். இதனை ஜே.வி.பி. அனுமதிக்காது. ஏனெனில் சர்வஜன வாக்கெடுப்பில் அர சாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்தால் அது ஆணைக் குழுக்களோடு மட்டும் நிற்காமல் அரசியல் அமைப்பில் தமக்கு பாதகமான சகலதையும் மாற்றியமைக்க முயற்சிக்கும். குறிப்பாக தேர்தல் முறையில் கைவைக்கும். இது ஜே.வி.பி.யை பொறுத்த வரையில் ஆபத்தான விஷயம்.

இத்தகைய நிலைக்கு முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியை வீழ்த்த ஜே.வி.பி. முயற்சி மேற் கொள்ளும் அப்போது அரசாங்கத்துக்கு தேர்தல் ஒன்றை சந்திப்பதை தவிர மாற்று வழி கிடையாது. இதை எதிர்பார்த்துத்தான் ஐ.தே.க. காய் நகர்த்த ஆரம்பித்துள்ளது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் கடந்த காலங்களில் ஜனநாயகத்தை பாதுகாத்தல், ஆணைக்குழு அமைத்தல் என்று கூறி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் எல்லாம் உண்மையில் ஐ.தே.க.வின் அதிகாரத்தை நோக்கிய முயற்சிகளே தவிர வேறில்லை என்பது தெட்டத்தெளிவாகியுள்ளது.

முன்னர் இந்த சுயாதீன ஆணைக்குழுக்களைப் பற்றி கதைக்கும் போது அரசாங்கம் முன்வைக்க விருக்கும் புதிய அரசியல் யாப்பில் இவை இடம் பெற்றிருப்பதால் தனியாக ஆணைக்குழுக்களை கோராமல் ஒட்டுமொத்தமான அரசியல் யாப்புக்கும் ஆதரவு தருமாறு அரசாங்கம் கோரியது.

அத்தகையதொரு அரசியல் யாப்பை உருவாக்க நீண்ட காலம் செல்லும் என்பதால் முதலில் உடனடியாக



சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து பின்னர் ஆறுதலாக புலிகளுடன் பேசி அதிகாரப் பரவலாக்கலை வழங்கும் புதிய அரசியலமைப்பை கொண்டு வர முடியும் என்று சில எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் பத்திரிகைகளும் கூறிவந்தன.

இப்போது ஜே.வி.பி.யின் வற்புறுத்தலால் அவ்வாறான முடிவுக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிற போது அதே சிவில் அமைப்புக்களும் பத்திரிகைகளும் முன்னெப்போதும் இல்லாத அளவு இனப்பிரச்சனைக்கு முக்கியத்துவம் வழங்கி இனப்பிரச்சனையை தீர்க்காமல் ஆணைக்குழு அமைப்பதில் எந்த இலாபம் இல்லை என கூறத்தொடங்கியுள்ளன். இத்தகைய அமைப்புக் களின் நடவடிக்கைகளை அவதானித்தால் இவர்களின் தேவை இனப்பிரச்சனை தீர வேண்டும் என்பதல்ல, சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுமல்ல பொதுஜன ஐக்கிய முன்னணியை அகற்றி விட்டு ஐ.தே.க.வை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும் என்பது மட்டும்தான்.

**எம்.பி.எம். பர்ஸான்**

எவ்வாறிருந்தாலும் ஜே.வி.பி.யின் எதிர்காலம் முற்றிலும் தனது நிபந்தனைகளை வென்றெடுப் பதில்தான் தங்கியுள்ளது. முக்கிய நிபந்தனைகளில் இருந்து ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி பொதுஜன ஐக்கிய முன்னணி நழுவி விடுமாயின் ஜே.வி.பி. பலத்த சங்கடத்துக்கு உள்ளாக வேண்டி ஏற்படும். அதனாலேயே ஆணைக்குழுக்களை அமைக் கும் விடயத்தில் ஆதரவளிக்குமாறு ஐ.தே.க.வை கோரும் நிலைக்கு அந்த கட்சி தள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் வெற்றிபெற முடியாமல் போனால் அரசாங்கத்திலிருந்து வெளியேறி வெளியில் வந்து ஜே.வி.பி. எத்தனை கவர்ச்சிகரமான வசனங்களை பேசினாலும் பயனளிக்கப்போவதில்லை. அது தனது அரசியல் கன்னித்தன்மையை இழந்த கட்சியாகவே கருதப்படும்.

இத்தகைய குழறுபடிகளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடை யில் கடந்தவாரம் சந்திப்பொன்று நடைபெற்றது. ரவூப் ஹகீம் தலைமையிலான குழுவினர் அரசாங்கத்தி லிருந்து வெளியேறிய நாளிலிருந்துதான் இன்றைய அரசியல் நெருக்கடி உருவெடுத்தது. அதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து கிடைத்த பல அழைப் புக்களை நிராகரித்த ஹகீம் கடந்தவாரம் ஜனாதிபதியை சந்திக்க முன்வந்தார்.

இந்த சந்திப்பின் போது தான் மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஒருபோதும் இணையப்போவ தில்லை என்று ரவூப் ஹகீம் ஜனாதிபதியிடம் கூறிய தாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும் அண்மைக்காலமாக ஹகீம் தலைமையிலான குழுவினரிடம் ஒரு மனமாற்றம் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது. அர சாங்கத்தை விட்டு வெளியேறிய நாட்களில் ஹகீமின் சொற்பிரயோகங்களில் இருந்த 'சூடு' தற்போது பெருமளவு குறைந்துள்ளது. தமது உறுப்பினர்களை தொடர்ந்தும் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர வைத்து பாதுகாப்பதில் ஹகீம் சில சங்கடங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிகிறது. அத்தோடு அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் களுக்கு எதிராக பல வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. இவை குறித்தும் ஹகீம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியதாகத் தெரியவருகிறது.

ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச்சனை தீர்வு முயற்சி பின்னடைவை சந்தித்திருப்பதால் அதை சீர்செய்ய எதிர்கட்சிகளுட னான தரகர் வேலைக்கு ஹகீம் உடன்பாடு தெரி வித்ததாக கூறப்பட்டுள்ளது. ஜே.வி.பி.யின் நன்ன டத்தை நிபந்தனையில் உள்ள இந்த இடைவெளியை ஹகீம் பயன்படுத்த நினைத்திருக்கலாம்.

## ஹகீமின் மன மாற்றம்

இதற்கிடையில் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் தலைவிரிக்கும் மனமாற்றம் ஹகீமை அரசாங் கத்தின்பால் நகர்த்துவதாகவும் கதைகள் உலாவருகின் றன. சிலர் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் மீண்டும் சேர விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் ஹகீமுக்கு மக்காவில் வைத்து செய்து கொடுத்த வாக்குறுதி தடையாக இருப்பதாகவும் சில வட்டாரங் களில் பேசப்படுகின்றது. அரசாங்கத்தை விட்டு விலகிய மறுநாள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் 7 பேரும் மக்கா சென்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

எவ்வாறெனினும் சுதந்திர ஆணைக்குழு விடயத் தில் ரவூப் ஹகீமுக்கு பலத்த கடப்பாடு இருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் இந்த ஆணைக் குழுக்களை அமைக்க 100 நாள் காலக்கெடுவிதித்தே அவர் தமது ஆதரவை பொதுஜன ஐக்கிய முன் னணிக்கு வழங்கினார்.

இப்போது அவற்றை பெற்றெடுக்க ஜே.வி.பி. மேற்கொள்ளும் முயற்சிகளை ரவூப்ஹகீம் நகைப்புக் குள்ளாக்குவது முரண்பாடாக இருக்கிறது. இவற்றை ஜே.வி.பி.யினால் பெற முடியுமா என்பது வேறு விடயம். ஒரு காலத்தில் தான் காலக்கெடு விதித்து அழுத்தம் கொடுத்து கோரிக்கை என்ற அடிப்படையிலேனும் ஜே.வி.பியின் முயற்சிக்கு வார்த்தைகளிலேனும் அங்கீகாரம் வழங்க வேண்டும். தார்மீகக் கடமை ஹகீமுக்கு இருக்கிறது.

முன்னர் ஹகீம் அரசாங்கத்துக்கு 100 நாள் கால்க்கெடு விதித்தது புலிகளோடு பேச வேண்டும் என்பதற்காக அல்ல. சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டும் என்று தான். ஆனால் இப்போது மறுபக்கமாகத் திருப்பி ஆணைக்குழுக்களை அமைப்ப தால் எந்தப் பிரச்சனையும் தீர்க்க முடியாது முதலில் இனநெருக்கடிக்கு தீர்வுகாண முயற்சிக்க வேண்டும் என்று ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழு அமைப்பதில் அவர் காட்டிய ஆர்வத்தை போலின்றி தற்போதைய முயற்சி நேர்மை யானதும், உண்மையானதுமாக இருக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பம்.

# அண்டை மண்டலத்தில்..

கானகன்

# அமெரிக்காமீது தாக்குதல்

## -படிப்பினை என்ன?

இரண்டாவது பியர்ல் ஹார்பர், 21ம் நூற்றாண்டின் மீது தொடுக்கப்பட்ட போர். உலகின் தனிப்பெரும் வல்லரசு இதுவரை கண்டிராத பேரழிவு, அவமானம், பொறுப்பான பயங்கரவாதக் குழுக்கள் எங்கிருந்தாலும் கண்டறியப்பட்டு, வேரடி மண்ணோடு களைந்தெறியப்படவேண்டும். இவை மனித குலத்தின் எதிரிகள். இப்படியாக உலகெங்கும் பத்திரிகை செய்திகள். கண்டனக் குரல்கள்.

இந்தியாவில் வலதுசாரியினருக்கு, முஸ்லிம் எதிர்ப்பாளர்களுக்கு, சங்க பரிவாரத்தினருக்கு அல்வா சாப்பிட்டது போல குமுறுகிறார்கள். கொக்கரிக்கிறார்கள். நாங்கள் அப்போதே சொன்னோம். இந்த பாய்களை நம்பக்கூடாது. பாகிஸ்தானுடன் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அணுகுண்டுபோட்டு ஒழித்துவிடுவதே ஒரே வழி. இப்படியான ஓலங்கள். இதைவிடக் கொடுமை பாலஸ்தீன அராபியர்கள் மத்தியில் ஒரு சிலர் பகிரங்கமாகவே செப்டம்பர் 10ம் நாள் தாக்குதலை ஏதோ தங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கொண்டாடியதுதான்.

தீவிரவாதம் பயங்கரவாதமாக மாறும்போது ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளை மட்டுமல்ல. தீவிரவாதத்தை உருவாக்கும் நிலைகளினால் தோன்றும் அபாயத்தையும்தான் நடந்து முடிந்துள்ள தாக்குதல்கள், பேரிழப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அனைத்தும் உடைந்து சிதறுகின்றன. வரம்பற்ற வன்முறை எங்கும் தலைவிரித்தாடுகின்றது. இந்தச் சீரழிவில் ஒரு பாவமும் செய்யாதவர்களெல்லாம் மூழ்கிக்கொண்டிருக்கின்றனர். சிறந்த மனிதர்களுக்கோ மன உறுதியில்லை. ஆனால் கயவர்கள் ஆவேசமாகப் பொங்கியெழுகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு அயர்லாந்து நாட்டில் தோன்றிய மாபெரும் கவிஞன் யேட்சின் பிரசித்தி பெற்ற ஒரு கவிதையிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் ஒரு பகுதிதான் இது. உலகெங்கும் நிகழும் அநீதியும், அக்கிரமும், பீறிட்டு வரும் துக்கத்தில் யேட்ஸ் அன்று கூறிய சொற்களை மெய்ப்பித்ததாகவே இருக்கின்றன.

மாதக்கணக்கில், ஏன் ஆண்டுக் கணக்கில் கூட திட்டமிட்டு, துல்லியமாக 15 மணித்துளிகளுக்குள் ஒன்றன் பின் ஒன்றாக நான்கு விமானங்கள் கடத்தப்பட்டு. உலக வர்த்தகத்தின் கேந்திரமான ஒரு பகுதியினை தரைமட்டமாக்கியிருக்கின்றனர். மிஞ்சியிருக்கும் ஒரே வல்லரசு நாங்கள்தான் என்று தம்பட்ட மடித்துக்கொண்டிருந்த அமெரிக்க நாட்டு பாதுகாப்புத்துறையின் தலைமையகமான பென்டகன் மாளிகையின் ஒரு பகுதியே தகர்க்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு குழப்பத்தில் ஜோர்ஜ் புஷ்ஷைத் தவறவிட்டிருக்கின்றார்கள்.

இரண்டாம் உலகப்போரின் போது பியர்ல் துறைமுகத்தில் யாரும் எதிர்பாராவண்ணம் ஜப்பானியர்கள் குண்டு வீசித்தகர்த்ததற்கொப்ப நிகழ்ந்த தாக்குதல்கள் இவை.

அந்த அதிரடித் தாக்குதலுக்குப் பிறகுதான் அமெரிக்கா தலையிட்டது. பின்னர் ஹிரோஷிமா,நாகசாகி நரகங்



களில் அணுகுண்டுகளை வீசி தனது வலிமையினை நிலைநிறுத்தியது. அதைப் போலவே இப்போதும் இத்தாக்குதல்களுக்குக் காரணமான ஒசாமா பின்லாடனின் தலைமையில் இயங்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகளையும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும், ஊக்குவிக்கும் நாடுகளையும் பூண்டோடு அது அழித்துவிடவிருக்கிறது என்று செய்திகள்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு தான் சானியாவிலும், கென்யாவிலும் அமெரிக்க அரசு அலுவலகங்கள் தரைமட்டமாக்கப்பட்டபோது, பின்லாடன் இருந்ததாகச் சந்தேகிக்கப்பட்ட இடத்தின் மீதும், அவருக்கு தொடர்பிருந்ததாகக் கருதப்பட்ட ஒரு மருந்து தயாரிப்பு தொழிற்சாலை மீதும் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதை இங்கே நினைவு கூறலாம். அநேகமாக இந்தக் கட்டுரை பிரசுரமாகும் நேரத்தில் ஆப்கானிஸ்தான்மீது அப்படியொரு தாக்குதல் தொடங்கியிருக்கலாம். நியூயோர்க்கின் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் தகர்க்கப்பட்ட ஓரிரு நாட்களிலேயே சம்பந்தப்பட்டவர்கள் யார், எப்படி? அமெரிக்காவிற்குள் நுளைந்தார்கள். எப்படி எங்கே விமானமோட்டும் பயிற்சி பெற்றார்கள். என்பதையெல்லாம் கண்டறியத்துவங்கிவிட்டார்கள் வல்லுநர்கள். ஏதோ ஒரு வகையில் சதிகாரர்கள் அரேபியர்களே பின்லாடனைச் சேர்ந்தவர்களாகத்தானிருக்க வேண்டும் என்று பத்திரிகைகளும், டி.வி. நிறுவனங்களும் கூறுகின்றன.

விளைவு, அமெரிக்காவில் இஸ்லாமியர்கள், அவர்களைப் போல தாடி வைத்திருக்கும் சீக்கியர்கள், மாநிறமான அல்லது கறுப்பான ஆசிய கண்டத்தைச் சார்ந்தவர்கள், வெள்ளைய வெறியர்களின் தாக்குதல்களுக்குள்ளாயிருக்கின்றார்கள். பல அராபிய அலுவலகங்களுக்கு தொலைபேசியில் மிரட்டல்கள் வரவே அவை முடப்பட்டு வருகின்றன. பாலஸ்தீனியர்கள் சம்பந்தப்பட்ட இணயத் தளங்களுக்கு வெறுப்பினைக் கக்கும் ஈ-மெயில்கள் வரவே அவைகூட தற்காலிகமாக முடப்பட்டுவிட்டன. அடுத்து என்ன நடக்கும் என அனைவரும் ஒரு புறம் ஆவலாகவும் இன்னொரு புறம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து அழிவுகளை சந்தித்து அலுத்துப்போன யூதர்கள் அமைதியை நிலைநாட்டுவேன் என்று முழங்கிய பாராக்கிற்கு பெரும் ஆதரவை நல்கினர். பேச்சுவார்த்தை வெற்றி பெறும் நிலையில், ஒரு யூத வெறியர் சர்ச்சைக்குரிய ஒரு பகுதிக்குச் செல்ல, பாலஸ்தீனியர்கள் கொதித்துப் போனார்கள். இன்டிஃபாடா மீண்டும் துவங்கியது. இவர்கள் கல்லாலடித்ததால் அவர்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். இறுதியில் பராக்கின் ஆட்சி கவிழ்ந்தது. வெறியர் ஷரான் பிரதமரானார். மரண ஊர்வலம் தொடர்கிறது.

யாருக்கு லாபம்? உள்ளதும் போச்சு நொள்ளக்கண்ணா என்ற கதைதான். ஷரான் செய்தது தவறுதான். அதற்காக விடாமல் பிரச்சனையை உருவாக்கி பராக்கை வெறியேற்றியிருக்கவேண்டுமா என்ன? யுதர்களில் பெரும்பாலானோர் பாலஸ்தீனியர்களின் உரிமைகளை அங்கீகரிக்கத்தயாராக இல்லை என்று வைத்துக்கொண்டாலும்கூட, ஏதோ ஒரு கட்டத்தில் அவர்கள் அமைதியினை நாடும்போது, நட்புக்கரத்தை உதறித் தள்ளுவானேன். அதுவும் நசுக்கப்படுபவர்களின் நிலை படுமோசமாயிருக்கும் போது?

1994ல் எப்படியும் அமைதி என்று கூறி ஆட்சிக்கு வந்த அதிபரின் முயற்சிகளை திட்டமிட்டு முறியடித்துவிட்டு, சிங்களவர்கள் மத்தியில் பெரும் மனக்கசப்பையும் எரிச்சலையும் ஏற்படுத்திவிட்டு,ஆஹா மீண்டும் நம்மை ஏமாற்றிவிட்டார்கள். இவர்களை நம்பவே கூடாது என்று கூக்குரலிடுவது கைதட்டலை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் தமிழர்களின் நிலை இன்னமும் சீர்கெட்டிருப்பதுதானே உண்மை!

பாலஸ்தீனியர்களுக்கு மட்டுமல்ல. உலகின் பல பகுதிகளில் உழைக்கும் மக்களுக்கு, சுரண்டப்படும் மக்களுக்கு, மூன்றாம் உலக நாடுகளுக்கு பெரும் அநீதி இழைத்துவிட்ட அமெரிக்காவிற்கு தகுந்த பாடம் கற்பித்துவிட்டதாக இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஜம்பம் அடித்துக் கொள்ளலாம். ஆனால் இத்தகைய அணுகுமுறையின் காரணமாக இறுதியில் அதிக இழப்பு முஸ்லிம்களுக்குத்தான்.

அதே நேரம் நடக்கக்கூடாதது நடந்துவிட்டதென்று பதறும் அமெரிக்கர்கள் தங்கள் குற்றங்களை சற்றும் உணர்ந்ததாகவே தெரியவில்லை. சி.என்.என். மற்றும் பி.பி.சி. தொலைக்காட்சிகளில் தோன்றும் அமெரிக்கர்களில் ஒருவராவது பின்லாடனையும், பயங்கரவாதத்தையும் வளர்த்துவிட்டதே அவர்களது அரசுதான் என்பதை ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை.

ஆப்கானிஸ்தானில் அன்றைய சோவியத் யூனியனுக்கு ஆதரவான ஒரு அரசு வந்துவிட்டதென்று அதை அழிப்பதற்காக வெறிக்கும்பல்களை சகட்டுமேனிக்கு ஊக்குவித்தது சி.ஐ.ஏ.தானே. இன்று அனுபவிக்கிறார்கள்.

இன்னொரு புறம் அவர்களுக்கு இடம் கொடுத்து பாகிஸ்தானும் இன்று விழிக்கிறது. எப்படி சிக்கலிலிருந்து மீள்வதென்று தெரியாமல் இந்தியாவை சேதப்படுத்த உருவாக்கப்பட்ட ஜிஹாத் குழுக்கள் அங்கேயே பதம் பார்க்கின்றன. சுன்னி, ஷியா குழுக்கள் ஓயாமல் சண்டையிட்டுக்கொண்டு மடிந்து கொண்டிருக்கின்றார்கள். எங்கள் கையில் ஆட்சியைக் கொடுங்கள் என்று மதகுருமார்கள் கொக்கரிக்கிறார்கள்.

இன்று பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஒழித்துவிட, தலிபானை அடக்க ஒத்துழைத்தாக வேண்டும் என்று மிரட்டும் அமெரிக்கா, அந்த சிறிய நாட்டை இப்படி ஒரு தர்மசங்கடத்தில் சிக்கவைத்தது தாங்கள்தான் என்று உணரவேயில்லையே.

வியட்நாம், சிலி, நிகாராக்குவா, கிரர்னாடா, ஈரான், ஈராக், சோமாலியா என்று நீளும் அந்தப் பட்டியலுக்கு முடிவேயில்லையே. அமைதி பற்றியோ, நாகரிகம் பற்றியோ பேச இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? காற்றை விதைத்தால் சூறைக்காற்றே விளையும் என்றுதானே விவிலியம் கூறுகிறது!

செப்டெம்பர் 10ம் திகதி தாக்குதல்கள் இன்றைய உலகில் யாரும் எங்கும் பாதுகாப்பாக இருக்கமுடியாது என்பதை தெளிவாக உணர்த்திவிட்டன. மேலைநாட்டவர்தானே உலகமயமாக்கல் கொள்கைகளே உன்னதமானவை. எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திவருகிறார்கள்.

ஒட்டுமொத்த பூமியே ஒரே கிராமமாகிக்கொண்டிருக்கிறது. அந்த அளவு தொழில்நுட்பம் வளர்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். அவ்வாறு பரிணாமவளர்ச்சி ஏற்படும்போது இத்தகைய இழப்புக்களையும் சந்தித்தே தீரவேண்டும்.

ஏற்றத்தாழ்வுகளும், சுரண்டலும், அநீதியும் மலிந்து, பத்து, இருபது சத மக்கள் சுகபோகத்தில் இருக்க, மற்றவர் நலிந்துபோய் விட வழிவகை செய்யும் ஒரு பொருளாதார அரசியல் அமைப்பு. இத்தகைய தாக்குதல்களுக்கு உள்ளாவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தலிபானையும், பின்லாடனையும் தேடி அலைவதற்கு பதில் மேலைநாட்டோர் சீரழிவின் மூல காரணம் அவர்கள் வியந்து போற்றும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பிலேயே பொதிந்திருக்கிறது என்றுணர்ந்து அதனைக் களைய தகுந்த நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும். இல்லையேல் இன்னும் ஓராயிரம் பின்லாடன்கள் உருவாகிக் கொண்டுதான் இருப்பார்கள். ▭

# புலிகளும் படையினரும் கிழக்கில் ஏட்டிக்குப் போட்டியாக பிரசாரம்!

வட பகுதிக் கடலில் படையினரை ஏற்றிச் சென்ற கப்பலை தாக்கியழிக்க கடந்த வாரம் புலிகள் மேற்கொண்ட முயற்சி முற்றிலுமாக வெற்றியளிக்கவில்லை. இந்த தாக்குதலில் இருதரப்பிலும் கணிசமான சேதம் ஏற்பட்டது. 11 படையினர் கொல்லப்பட்டு 12 பேர் காணாமல் போனதாகவும் மேலும் 43 படையினர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகள் தரப்பில் கடற்புலி முக்கியஸ்தர் ஒருவர் உட்பட 10 பேர் பலியானதாக திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டது. புலிகளின் 5 வள்ளங்களை மூழ்கடித்ததாக இராணுவப் பேச்சாளர் கூறியிருந்தார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. வீட்டுக்கொருவரை போராட்டத்துக்கு வழங்குமாறு பெற்றோர்கள் வலியுறுத்தப்படுகின்றனர். இதனால் வசதிபடைத்த பலர் தமது பிள்ளைகளை தூர இடங்களுக்கு அனுப்பி வருவதாக கூறப்படுகின்றது. மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் புலிகளின் பிரசாரப்பணி மும்முரமாக நடைபெறுகின்றது அண்மைக்காலமாக கிழக்கில் புலிகள் வெளியிட்ட பல துண்டுப் பிரசுரங்களில் தாம் மட்டக்களப்பு நகரை கைப்பற்றப்போவதாக கூறப்பட்டிருக்கிறது. மறுபக்கத்தில் புலிகள் மேற்கொள்ளும் எந்தத் தாக்குதலையும் முறியடிக்க தாங்கள் தயாராக இருப்பதாக படையினர் தெரிவித்து வருகின்றனர். புலிகளுக்கு ஒத்துழைப்பதை தவிர்க்குமாறு படைத்தரப்பு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் தாக்கலாம் என்றும் கிழக்கில் தாக்குதல் நடக்கலாம் என்று பரவலான ஊகங்கள் வெளியாகிக்கொண்டிருக்கும் சமயத்தில் இவை இரண்டுக்கும் மாறுபட்ட கருத்தொன்றை பற்றி கடந்தவாரம் பாதுகாப்பு உயரதிகாரிகளின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

தலைநகரில் பொருளாதார கேந்திர ஸ்தானங்கள் சிலவற்றை தாக்க புலிகள் திட்டமிட்டு வருவதாக புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. கொலன்னாவை, ஊருகொடவத்தை ஆகிய இடங்களில் இருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் தாங்கிகளை தாக்க புலிகள் திட்டமிட்டுள்ளார்களென புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. இதனையடுத்து இவ்விரு இடங்களுக்கும், சபுகஸ்கந்தையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கும் கடும் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் பணிக்கப்பட்டிருக்கிறார்.

கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் றொஹான் தளுவத்தையின் தலைமையில் கடந்த வாரம் நடவடிக்கை தலைமையகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு உயரதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் இது விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. முப்படைத் தளபதிகளும் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் எரிபொருள் தாங்கிகளின் தற்போதைய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாறப்பட்டது.

கொழும்பு பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவே பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பதால் இது விடயம் தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்துமாறு ஜெனரல் தளுவத்தையினால் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். முன்கூட்டியே தகவல்களை பெற்றுக் கொள்ளும் பல்வேறு வழிமுறைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இதற்கிடையில் கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சினால் லண்டனில் உள்ள லொயிட்ஸ் காப்புறுதி நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் அந்நிறுவனம் திருப்தியடைந்திருப்பதாக கூறப்படுகின்றது. கொழும்பு துறைமுகம் புலிகளின் முதல் தர தாக்குதல் இலக்காக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு அங்கு 24 மணி நேரமும் செயற்படும் முழு அளவிலான பாதுகாப்பு வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் பொறுப்பதிகாரியாக ரியர் எட்மிரல் நந்தன துடுவேவத்த நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் லொயிட்ஸ் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் ரொனிடி மேல் தலைமையில் லண்டன் சென்ற குழுவில் இவரும் இடம் பெற்றிருந்தார். இவர் சமர்ப்பித்த பாதுகாப்பு அறிக்கையையே லொயிட்ஸ் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்நிலையில் கிழக்கில் புலிகளின் அச்சுறுத்தல் அதிகரித்திருக்கும் பகுதிகளுக்கு பாதுகாப்பு உயரதிகாரிகள் கடந்த வாரம் விஜயம் மேற்கொண்டனர்.

ஜெனரல் தளுவத்த, முப்படைத்தளபதிகள், விசேட அதிரடிப்படையின் பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் குணதிலக உட்பட சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் அம்பாறை பகுதியில் பாதுகாப்பு நிலமைகளை நேரடியாக கண்டறிந்தனர். இருவாரங்களுக்கு முன்னர் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான சென்ரல் கேம்ப் பகுதியை இவர்கள் பார்வையிட்டனர்.

நான்கு அமைச்சர்கள் தமது அமைச்சுப் பொறுப்புக்களை இராஜிநாமா செய்ததையடுத்து கடந்த வாரம் நடைபெறவிருந்த பாதுகாப்பு சபை கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் விமானப்படைத்தளம் மீதான தாக்குதல் குறித்து விசாரணை செய்ய விமானப் படைத் தளபதியினால் நியமிக்கப்பட்ட குழு அதன் விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

1000 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையை விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி அண்மையில் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா குமாரதுங்கவிடம் சமர்ப்பித்துள்ளார். அதன் சாராம்ச மீள் அறிக்கை ஒன்றை தனக்கு சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியினால் மீண்டும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் கட்டுநாயக்க தாக்குதல் இடம்பெற்ற தினத்தில் முகாமுக்கு பொறுப்பாக இருந்த விமானப்படை கொமாண்டர் ஆனந்த ஏற்கனவே சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார். கடமையை துஷ்பிரயோகம் செய்தது தொடர்பாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மத்தியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற்ற அஷ்ரப் நினைவு தின வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி விடுதலைப் புலிகள் இயக்கத்தை கடுமையாகச் சாடியதுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படுவதை புலிகள் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார்.

உலக நாடுகள் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான தனது பங்களிப்பை நேர்மையாக வெளிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட திருமதி குமாரதுங்க இலங்கையின் தற்போதைய பிரச்சனை மேலோட்டமான ஒரு விடயமல்ல என்றும் அது ஆழப் பதிந்த ஒரு நெருக்கடி எனவும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் கலந்துகொண்ட இந்த கூட்டத்தின்போது இனப்பிரச்சனையைத் தீர்க்கும் வழிகளை அரசாங்கம் தெளிவாக அடையாளம் கண்டுள்ளதாகக் கூறிய ஜனாதிபதி தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பயங்கர வாதத்தை ஒழிக்க உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையம் வலியுறுத்தினார். ■

## சுவிஸ் வாழ் யாழ் மக்களுக்கு மீண்டும் ஓர் வாய்ப்பு!

**ஜோதிட மேரு சுவிஸ் விஜயம்**

பிரபல வெற்றிலை ஜோதிடரும்,
ஜோதிட கலாநிதியுமான இணுவையூர்
R. சத்தியமூர்த்தி குருக்களும் அவரது
புதல்வர் சிவகுமாரசர்மாவும் சுவிற்சர்லாந்திற்கு
விஜயம் செய்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தினை
வெற்றிலை ஜோதிடம் பார்க்க,
திருமணப்பொருத்தம் மற்றும் ஜாதகக்
குறிப்புகளை கணித்துப் பெற்றுக்கொள்ளவும்,
கிரகதோஷ நிவர்த்திகள், சாந்தி
பூஜைகளை செய்து கொள்ள மற்றும் தெய்வீக
யந்திரங்கள், மூலிகைகளை பெற்றுக்கொள்ளவும்
பயன்படுத்தலாம்.

முன்கூட்டிய பதிவுகளுக்கு.

S.K. Ads

Sri Maha Vishnu Jothidalaya
Main street,
Vishnupuram
Kotagala. T.P: 051-23530


No, 24A,6/9 Initium Road,
Dehiwala.
T.P : 01-733739,
Cell: 077-796504

Calling Bell No - 18
No - 40
Luisen Strassa
நூதன் கடைக்கு அருகில்
Zurich
Switzerland
Tel: 795798651
31-9716793

## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

## Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு

**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

## RECOVA*




நீண்ட நாட்களாக மூட்டு வலியால் அவஸ்தைப் படுபவர்களுக்கு மூட்டுக்களை புனரமைக்கும் ''ரிகோவா'' முற்றாக நிவாரணம் அளிக்கின்றது. தற்போது இலங்கையில் முன்னணி பார்மசிகளில் ''ரிகோவா'' கிடைக்கப் பெறுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:
Tel : 01-470290, 077-805738

**சுவிஸ் பேர்ண் மாநகரில்.**

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
**T.P. 0041-31-8191837**

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

## 6ம் ஆண்டு நினைவாஞ்சலி

மலர்வு 25 10 1978 தாயகம்



உதிர்வு 19 09 1995 கொலண்ட்

**சுரேஸ்காந் செல்வநாயகம்**

*மானிப்பாய் மேற்கு*

ஆண்டுகள் ஆறு சேர்ந்ததையா!
அன்னை தந்தை முகம் சோர்ந்ததையா!
பாசமுடன் அக்கா தம்பிமார் மூவர்-பாரினிலே
உன் முகம் தேடிப்பதைத்திட
நீ ஈசனுடன் நாடி இறையடி சேர்ந்து,
காலமெல்லாம் எம்மை கண்ணீர் மல்க,
கவலையுடன் கல்லறை தேடி பணிந்திடுவோம் இதய அஞ்சலி
உன் பிரிவால் துயருறும் அன்பு
பெற்றோர்-செல்வநாயகம், சரோஜினிதேவி
சகோதரி-சசிகலா, மைத்துனர் ஜெகதீஸ்வரன்
சகோதரர்-சுரேஷ்குமார், சுரேஷ்ராஜ், சுரேஷ் கோபி (கொலண்ட்)
மாமா-மகேந்திரராசா, மாமி விஜயாம்பிகை (ஜேர்மனி)
மாமா- இராஜகுலேந்திரன், மாமி பவாணி (கனடா)
சித்தப்பா- விக்னேஸ்வரன் (ஜேர்மனி) சித்தி கமலாதேவி (தாயகம்)
சித்தப்பா- சிவநாதன், சித்தி பத்மாதேவி (தாயகம்)
மாமா- சிறிகாந்தன், மாமி ரதிமதி (சுவிஸ்)
மாமா- ரவிச்சந்திரன் (சுவிஸ்)
சித்தப்பா-சந்திரசேகரம், சித்தி ஜெகசோதி (கொலண்ட்)
சித்தப்பா-சிவக்குமார், சித்தி தேவகி (கனடா)
மாமி-இராசா நாகம்மா (தாயகம்)
பெரியம்மா-கந்தசாமி மீனாட்சி (தாயகம்)
Students of ALMEERS COLLEGE, HOLLAND.
மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்.

தகவல்: N.Selvanayagam, Hoornse Hop-6.
3752 T.M. Bunschoten Nederland

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.
விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
TELE: (65) 4533308

## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் செப்டெம்பர் 22-27 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் செப்டெம்பர் 29,30 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் செப்டெம்பர் 08, 09 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் செப்டெம்பர் 15, 16 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி.ஞானஅமிர்தம் துரைராஜசிங்கம்**

| அன்னை மடியில் 11.09.1942 | ஆண்டவன் அடியில் 25.09.2000 |
|---|---|

எங்கள் அன்பு தெய்வமே எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டாலும் எங்கள் இதயத்தில் என்றும் நீங்கா இடம்பெற்ற அன்னையே உன் உயிர் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கும்.

கணவர்-து. துரைராஜசிங்கம் (ENGINEER) இந்தியா
பிள்ளைகள்:-ஞானராஜ் (M.Com) (லண்டன்), ராமராஜ் (Bsc) (ஜேர்மனி), ரகுராஜ் (B.Com) (இந்தியா) திவிராஜ் (Engineer) (இந்தியா), விஜயராஜ் (Computer Engineer) (இந்தியா), விஜிதா (இந்தியா)
மருமக்கள்:- எழில்லோஜினி (லண்டன்),சஞ்ஷியா (ஜேர்மனி)
சகோதரர்கள்: நேசரத்தின் அருளப்பனம்(பிரான்ஸ்) புஷ்பராணி பொன்னுத்துரை (இலங்கை), தேவராஜா(சிவபாதம் அடைந்தவர்), செகராஜா(இலங்கை), சந்திரலீலா சிதம்பரநாதன்(கனடா), யோகராசா(கனடா),
மைத்துனர்: Dr.துளசிராஜா (இலங்கை)

## 6ம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 24 09 1981



ஆண்டவன் அணைப்பில் 22 09 1995

**செல்வி அல்போன்ஸ் அமலவிஜி**

பாரினிலே சில காலம்
பார் போற்றும் இனியவளாய்
சில காலம் வாழ்ந்த எங்கள்
பண்பான சுடரொழியாம்
அல்போன்ஸ் அமலவிஜியே
பாரினிலே பலரிருக்க
பார்த்தவர்கள் அதிசயிக்க
அழைப்பதற்கு யாருமின்றி
அழைத்துவிட்டான் இறைவன் உன்னை
ஆறு ஆண்டுகள் தான் ஆனாலும்
உன்நினைவு முகம்
எம்மை விட்டு அகலாது.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்.
அப்பா அல்போன்ஸ், அம்மா சிசிலியா, அக்காமார் ராஜி றெஜி, ஜசி தம்பி, ராஜன், அத்தான்மார் அசோக், தவம், கேதீஸ், தொட்டப்பா ஸ்ரீபன், பங்குத்தந்தை A.Y. யாவிஸ் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள்.

## அலசுவது - இராஜதந்திரி

# 21ம் நூற்றாண்டின் முதலாவது உச்சக்கட்டத் தாக்குதல்



இருபத்தியோராவது நூற்றாண்டின் உச்சக் கட்ட வளர்ச்சியின்மீது வீழ்ந்த பலத்த அடி எனக்குறிப்பிடுமளவுக்கு நியூயோர்க் நகரில் இடம்பெற்ற தாக்குதல் விளங்குகின்றது.

உலகின் அனைத்து மூலை முடுக்குகளிலும் 'சின்னத்திரைகள்' வாயிலாக அனைத்து மக்களுமே அப்படுபயங்கரத்தைப் பார்த்துத் திகைப்படைந்து போயிருந்தனர்.

அமெரிக்காவின் ஹொலிவூட் திரைப்பட நிறுவனம் திரைக் கதையம்சங்களைப் பொறுத்தவரை கைவைக்காத ஒரு விடயமே இல்லை எனக் கூறலாம்.

உலகில் இடம்பெற்ற நிஜமான சம்பவங்கள் முதற் கொண்டு, ஏனைய விடயங்கள் பலவற்றையும் ஹொலிவூட் தயாரிப்பாளர்கள் திரைப்படங்களாக வெளியிட்டே வந்த வண்ணமிருக்கின்றனர்.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் புதிய திரைப்படமொன்று ஹொலிவூட்டிலிருந்து வெளியாகியிருந்தது. பேர்ள் ஹாபர், **(Pearl Harbour)** என்ற பெயரைத் தாங்கியதே அத்திரைப்படமாகும்.

சர்வதேச திரையரங்குகளில் சக்கைபோடு போட்டு வரும் அத்திரைப்படம், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானிய போர் விமானங்கள் அமெரிக்காவின் ஹவாய்த் தீவிலுள்ள பேர்ள் ஹாபர் என்றழைக்கப்படும் துறைமுகத்தைத் தாக்கிய உண்மைச் சம்பவத்தையே மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்காவின் முதுகெலும்பை முறித்து விடுவதாகவே 'பேர்ள் ஹாபர்', துறைமுகத்தாக்குதல் விளங்கியிருந்தது.

பிரிட்டன் மற்றும் நேசநாட்டுப் படைகளுடன் இணைந்து அமெரிக்கா ஐரோப்பாவில் போரிட்டுக் கொண்டிருந்தவேளை ஜப்பான் அமெரிக்காவினது ஆகாய கடல் எல்லைகளை ஊடறுத்து வந்து 'பேர்ள் ஹாபர்', துறைமுகம்மீது கடுந்தாக்குதலை நடத்தியிருந்தது.

இத்தாக்குதலில் அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் பல நாசமாகியிருந்தன. அத்துடன் அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான விமானங்கள் பலவும் நிர்மூலமாகியிருந்தன. ஏராளமான உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் அத்தாக்குதலில் அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருந்தது.

இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவுக்கும் சவால் விடும் விதத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலையடுத்தே அமெரிக்கா தனது சுயரூபத்தைக் காட்டியிருந்தது.

ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களின்மீதும் அடுத்தடுத்து அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியிருந்தது.

ஜப்பானுக்குப் பதிலடியாக அமெரிக்கா நடத்திய அவ்விரு அணுகுண்டுத்தாக்குதல்களும் மானிட வரலாறே கண்டிராத படுமோசமான அழிவை ஏற்படுத்தியிருந்தது. கூடவே இரண்டாம் உலக யுத்தத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்திருந்தது.

'பேர்ள் ஹாபர்' துறைமுகம் மீது ஜப்பான் மேற்கொண்ட பெருந்தாக்குதலுக்கு அடுத்தபடியாக ஏறத்தாழ 50 வருடங்களின் பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ள மாபெரும் தாக்குதலாகவே நியூயோர்க்கில் நிகழ்ந்த அனர்த்தம் விளங்குகின்றது.

அமெரிக்காவின் அரசியல், சமூக, பொருளாதார நடைமுறைகளைப் பிரதிபலிப்பதாகவே அங்குள்ள நகரங்கள் காணப்படுகின்றன.

வாஷிங்டன் அமெரிக்காவின் தலைநகராகும். ஆனால் நியூயோர்க் நகர் அமெரிக்காவின் வர்த்தக மையமாக இருக்கின்றது. அத்துடன் இந்த நகரிலேயே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அமைந்துள்ளது.

நியூயோர்க் நகரில் வர்த்தக மற்றும் நிதிநிறுவனங்கள் என்பவை ஏராளமாகக் காணப்படுவதாலேயே இந்நகரம் வானுயர்ந்த கட்டடங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

ஒரு 'காங்கிரீட் வனாந்தரம்' **(Concreate Forest)** என்று வர்ணிக்கப்படுமளவுக்கு நியூயோர்க்கில் உள்ள கட்டடங்கள் அனைத்துமே நூற்றுக்கும் மேற்பட்ட மாடிகளைக் கொண்டவையாக வானளாவி நிற்கின்றன.

அமெரிக்காவின் தனித்துவத்துக்கு ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டு அங்கு வாழும் வெள்ளையர்கள் மட்டும் காரணமல்ல. அடிமைகளாக ஆபிரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்பட்டுக் குடியேற்றப்பட்ட கறுப்பினத்தவர்களின் இன்றைய சந்ததியினர் ஐரோப்பாவில் இருந்து புலம் பெயர்ந்து சென்ற பல்வேறு இனத்தவர்கள், மற்றும் யூதர்கள், இந்தியர்கள், சீனர்கள், ஆகியோர்கூட அமெரிக்காவின் கைத்தொழில், பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

தாக்குதலுக்குள்ளான நியூயோர்க் நகரம் கூட பல்வேறுபட்ட இனத்தவர்களையும், நிறத்தவர்களையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது.

கடந்தவாரம் விமானக் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்ட இரு பயணிகள் விமர்சனங்கள் முட்டி மோதித் தகர்த்த இரு உலக வர்த்தக மையக் கட்டடங்களிலும் பலியானோரில் 500 பேர் வரையிலான பிரிட்டிஷ்காரர்கள் பணியாற்றியுள்ளனர்.

அத்துடன் 300 பேர்வரையிலான இந்தியர்கள்கூட நியூயோர்க் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து குடியேறியுள்ளவர்களில் பெரும்பாலானோரும் நியூயோர்க்கில் அவலச் சாவைத் தழுவியுள்ளனர்.

அமெரிக்காவை பயங்கரவாதிகள் தாக்குவது போலவும், வேறு கிரகங்களிலிருந்து வந்த விநோத மனிதர்கள் அமெரிக்காவை ஆக்கிரமிப்பது போலவும், அமெரிக்க ஜனாதிபதியின் பிரத்தியேக விமானம் விமானக் கடத்தல்காரர்களால் கடத்தப்படுவதுபோலவும் கற்பனையில் சித்தரிக்கப்பட்ட ஏராளமான ஹொலிவூட் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

ஆனால் அக்கற்பனைகளையெல்லாம் கடந்துவிட்ட நிலையில் ஓர் உண்மைச்சம்பவமாகவே நியூயோர்க் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதும், வாஷிங்டனில் உள்ள பென்டகன் அமெரிக்க இராணுவத்தலைமையகம் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் விளங்குகின்றன.

இதுவரைகாலமும் கடலிலும், தரையிலுமே தற்கொலைக் குண்டுதாரிகள் தமது கைவரிசையைக் காண்பித்திருந்தனர். ஆனால் தற்போது ஆகாயத்திலும் ஒரே நாளில் விரிவான முறையில் பயங்கரவாதப் பேர்வழிகள் விமானங்களைக் கடத்திச் சென்று தற்கொலைத் தாக்குதல்களாக தமது இலக்குகளைத் தகர்த்துவிட்டுள்ளனர். இதில் எதுவுமறியாத அப்பாவி விமானப்பயணிகளும் அகாலமரணத்தைத் தழுவியுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் இன்று பயங்கரவாத நடவடிக்கைகள் விரிவடைந்து வருவதையே காணமுடிகின்றது.

பயங்கரவாதம் ஊடுருவாத ஒரு துறையே இல்லையென்று கூறுமளவுக்கு அரசியல் நடவடிக்கைகள், பொருளாதார, கைத்தொழில் செயற்பாடுகள், போக்குவரத்து போன்ற அனைத்திலுமே பயங்கரவாதம் என்ற வார்த்தைப் பிரயோகம் சிம்ம சொப்பனமாகவே இருந்து வருகின்றது.

இலங்கையில்கூட வடக்கு-கிழக்கு இனப்பிரச்சனை தோற்றம்பெற்ற காலம் முதற்கொண்டு அப்பாவிப் பொதுமக்கள் உயிர், உடமை என்பவை எண்ணிலடங்காத வகையில் காவு கொள்ளப்பட்டுள்ளதையே அறிய முடிகின்றது.

இருபத்தியோராம் நூற்றாண்டை உலகம் எட்டியுள்ளது. இந்த நூற்றாண்டில் அதிசயிக்கத்தக்க விதத்தில் மனித மேம்பாடு வளர்ச்சிகண்டுள்ளது.

அமெரிக்காவை எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் அந்நாடு அனைத்துத் துறைகளிலுமே அபரிமித வளர்ச்சி கண்டுள்ளது. புவியியல் விஞ்ஞான, தொழில் நுட்ப ரீதியான சாதனைகள் பலவற்றைப் புரிந்துள்ள அமெரிக்கா விண்ணுலகிலும் தனது சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்புவதிலேயே முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.

இருப்பினும் உலகரீதியாக நோக்கும் போது ஒரு புறம் அபரிமிதமான வளர்ச்சியும் மறுபுறத்தே பெரிதும் வளர்ச்சிகுன்றிய போக்குமே இருந்து வருகின்றது.

21ம் நூற்றாண்டில் மானிடகுலம் எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமானவற்றில் வளர்ச்சிகண்டுள்ளதோ, அதேயளவு தூரம் அழிவபூர்வமானவற்றிலும் உச்சநிலையை அடைந்தேயிருக்கின்றது.

இந்த இருவேறுபட்ட வளர்ச்சி நிலையினதும் பிரதிபலிப்பையே நியூயோர்க் நகரில் இடம்பெற்ற தாக்குதலில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

நியூயோர்க் தாக்குதலையடுத்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் வில்லியம் புஷ் யுத்த சன்னதம் கொண்டுள்ளார்.

திரு. ஜோர்ஜ் வில்லியம் புஷ் அமெரிக்க அதிபராகப் பதவியேற்று எட்டு மாத காலத்தில் அவரது ஆளுமைக்குச் சவால் விடும் விதத்தில் நியூயோர்க் நகர் மீதும், வாஷிங்டனிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத்தாக்குதலின் சூத்திரதாரி ஆப்கானிஸ்தானில் இருந்து வருகின்ற இஸ்லாமிய தீவிரவாதத்தலைவரான ஒசாமா பின்லாடன் என்றே அமெரிக்கா தனது சுட்டு விரலை உயர்த்தியுள்ளது.

ஒசாமா பின்லாடன் மீது அமெரிக்காவில் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள், மற்றும் வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எவ்வேளையிலும் ஒரு முழு அளவிலான போர் ஒசாமா பின் லாடனைக் குறிவைத்து அமெரிக்காவினால் முடுக்கி விடப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. இருப்பினும் உலகில் அமெரிக்கா ஓர் இராணுவ வல்லரசு மட்டுமல்ல. ஜனநாயகவல்லரசாகவும் இருந்து வருகின்றது.

அரசியல் ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் கூட அமெரிக்கா சர்வதேச மட்டத்தில் பெருமளவு செல்வாக்கைக் கொண்டதாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் வெறுமனே ஆத்திரத்துக்குமட்டும் இடம்தராது நிதானமாக சிந்தித்துச் செயலாற்றும் விதத்திலும் நடந்து கொள்ள வேண்டிய ஜனநாயக நாடான அமெரிக்காவின் தலையாய கடமையாகின்றது.

ஒசாமா பின்லாடனே அமெரிக்காவின் நியூயோர்க், வாஷிங்டன் நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்பட்டாலும், அவரைத் திட்டவட்டமாக ஒரு குற்றவாளியாக வரையறை செய்யக்கூடிய ஆதாரங்களை உலக சமூகம் முன்பாக அமெரிக்கா வெளியிடவேண்டும்.

அத்துடன் பின்லாடனை இராணுவரீதியாக அழுத்தங்கள் இன்றி இராஜதந்திர ரீதியில் சுற்றிவளைக்கக் கூடிய அணுகுமுறைகளையே அமெரிக்கா முதலில் கையாள வேண்டும்.

இந்த முயற்சிகளில் தோல்வியடையும் பட்சத்திலேயே அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளைப் பிரயோகிப்பது குறித்து ஆராய வேண்டும்.

ஆனால் அப்படி எதுவுமின்றி எடுத்த எடுப்பிலேயே ஒசாமா பின்லாடனைக் கைது செய்வது என்ற ரீதியில், அவர் இருந்துவருகின்ற ஆப்கானிஸ்தானுக்குள் அமெரிக்கா யுத்தம் புரிய எண்ணுவது அரசியல் வரம்புகளை பலவந்தமாக மீறுவதாகவே இருக்கும்.

சர்வதேச பிரச்சனைகள், குறிப்பாக இலங்கைப் பிரச்சனையில்கூட பேச்சுவார்த்தைகள், மற்றும் அரசியல் அணுகுமுறைகள் மூலமாகவே தீர்வுகளைக்காண முடியுமென்றே அமெரிக்கா எப்போதும் கூறி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

ஒசாமா பின்லாடனைக் கைப்பற்றும் யுத்தம் என்பது இலகுவாக இருக்கப்போவதில்லை என்பதனை அமெரிக்க அரசியல் விமர்சகர்கள்கூடத் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானைச் சூழவரவுள்ள நாடுகளான ஈராக், பாகிஸ்தான், இந்தியா மற்றும் மத்திய கிழக்கு, ஈரான், சீனா ஆகிய நாடுகள் ஏற்கனவே அரசியல் நெருக்கடிகளுக்குள்ளானவையாக இருக்கின்றன.

இத்தகையதொரு சூழ்நிலையில் அமெரிக்கா அவசரப்பட்டு முடிவுகள் எதனையும் எடுக்குமேயானால் அதன் பக்கவிளைவுகள் பாரதூரமானவையாக மாற்றமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■

## அதிரடி அய்யாத்துரை



***ஒற்றுமையைப் பற்றி*** ஊருக்கு உபதேசம் செய்த தனித்துவக் கட்சிக்காரருக்கு கடைசியில தலைவரின்ர நினைவு நாளைக் கூட ஒற்றுமையாகக் கொண்டாட முடியாமல் போச்சு. உந்த மனுஷன் மறைந்த ஒரு வருஷப் பூர்த்தியை எதிரும் புதிருமான அரசியல் கூட்டாளிகளோடு அனுஷ்டித்துப் போட்டினம். முஸ்லிம்களைத் தாண்டி தேசியம் பேணவேண்டும் என்று ஐக்கியத்துக்கு பாடுபட்ட தலைவரையே ரெண்டாக உடைத்து கூட்டம் நடத்துற அளவுக்கு பகை வளர்ந்திருக்கு. என்னதான் பிரச்சனை, மனக் கசப்பென்றாலும் ஒரு செத்துப்போன தலைவரின்ர நினைவு நாளைக்கூட ஒன்றாக அனுஷ்டிக்கத் தெரியாதவர்களாக இருக்கினமே என்று நினைக்கேக்க உந்தாக்களிடம் வேறென்ன சாதனையை எதிர்பார்க்க முடியும்? நினைவுக் கூட்டத்தில ஒவ்வொரு கட்சி சார்பாகவும் பிரதிநிதிகள் உரையாற்றியவை. தலைவர் கட்டி வளர்த்த முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக மட்டும் எவரும் இல்லை!

***ஆப்கானைத்தாக்க*** அமெரிக்கக்காவுக்கு தளம் கொடுக்கத் தயாரென்று இந்தியாவும் பாகிஸ்தானும் போட்டி போட்டுக் கொண்டு அறிவிச்சிருக்கினம். தேவையென்றால் முல்லைத் தீவு தளத்தையும் பாவியுங்கோவென்று இலங்கை சொன்னால் எப்படியிருக்கும்!? அதை விடுங்கோ எல்லா விஷயத்துலயும் அமெரிக்கா ரெட்டை வேடம் போடுறதா சொல்லுவினமல்லே... அடிவாங்குற விஷயத்துலயும் தான் பாருங்கோ... கட்டுநாயக்காவை தாக்கினப்போது... பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சனையை தீர்க்கோணமெண்டு உபதேசிக்கினம். தன்ர முதுகில அடி விழும்போது மட்டும் போர்க்கொடி தூக்கிட்டினம் ஒசாமாவுடன் பேச்சு வார்த்தை நடத்தலாமே...?!

***அமெரிக்காவுக்கு விழுந்த*** அடியில எங்கட பச்சைக் கட்சிக்காரருக்கு இருக்கும் கவலை என்ன தெரியுமோ? இனிமேல் புலிகள் எந்தப் பெரிய தாக்குதலை நடத்தினாலும் அரசாங்க தரப்பில யாரையும் பதவி விலகச்சொல்ல முடியாததுதான். அப்படியேதும் நடந்தால் உடனே திருப்பிக் கேட்பினம் "உந்த அளவு அழிஞ்சும் புஷ் பதவி விலகினவரோ" எண்டு.

***உயரமான கட்டடங்களில*** இருக்கிறவையின்ர வயித்தில புளிகரைய ஆரம்பிச்சிருக்கு. தலைநகரில உள்ள உலக வர்த்தக மையத்துக்குள் இருந்த அமைச்சுக்கள் எல்லாம் மெதுமெதுவாக சின்னக் கட்டடங்களுக்கு நகர ஆரம்பிச்சிருக்கு. கூலி அதிகமாக இருப்பதால இடம்மாறுவதாச் சொல்லுகினம்! உதுதான் காரணமோ...?

***தமிழகத்து சன் செய்தியில*** இலங்கை பாராளுமன்றச் செய்தி ஒளிபரப்பாகேக்க பி.எம்.ஐ.சி.எச்.சின்ர படத்தை ஸ்கிரீனில காண்பிக்கினம். உதை சொல்லித்திருத்த பண்டிதர்களுக்கு நேரம் கிடைக்கேல்லையே...?

***அமெரிக்காவை தாக்காமல் விட்டிருந்தால்*** பிரதமர் சொன்னபடி ரெண்டு வாரத்தில மின்சாரம் கிடைச்சிருக்கும்! கடைசியில பார்க்கேக்க இரவெல்லாம் இருட்டில கழிக்கவேண்டி ஏற்பட்டதுக்கும் ஒசாமா பின்லேடன்தான் காரணம் பார்த்தியளே... இன்னும் கொஞ்சகாலத்துக்கு என்ன நடந்தாலும் உந்த ஒசாமாவின்ர தலையில போட்டு தப்பிச்சிடலாம்! ■

# அசைக்க முடியாத 'பென்டகன்' அதிர்ந்தபோது.....

உலகின் மிகச்சிறந்த உளவுத்துறை அமெரிக்காவிடம் தான் இருக்கிறது. அதிநவீன இராணுவப் படையணிகளும் பாதுகாப்பு கருவிகளும் அமெரிக்கர்களிடம்தான் இருக்கின்றன. ஆனால் கடந்த வாரம் அந்த நாட்டு ஜனாதிபதியை விமானப்படைத்தளம் ஒன்றில் வைத்து பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வெள்ளை மாளிகையில் இருந்தவர்களை வெளியேற்ற வேண்டி ஏற்பட்டது. நியூயோர்க், வாஷிங்டன் நகரங்கள் பேய்கள் தாண்டவமாடிய இடங்களாக மாறியிருந்தன.

'ஒரு தசாப்த்த காலமாக தேசிய பாதுகாப்பு அதிகாரிகளும் உளவுத்துறையினரும் எதிர்பார்த்திருந்த தாக்குதல் கடைசியில் தலைக்கு மேலால் வந்து விழுந்தது. அதற்கு முகம் கொடுக்க பாதுகாப்பு தரப்பினர் தம்மை போதியளவு தயார்படுத்தியிருக்கவில்லை' என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை அதன் விசேட பதிப்பில் எழுதியிருந்தது.

இதற்கு மத்தியிலும் ஒரு பெண் தனது கணவருக்கு நிலைமையை விளக்கியிருக்கிறாள். மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதை சிப்பந்திகளும் அறிந்திருந்தனர். "நான் உங்களை நேசிக்கிறேன்" என்று அந்தப் பெண் கடைசியாக தனது கணவருக்கு சொன்னாள்.

கடந்த 11ம் திகதியை உலக வரலாற்றின் இருண்ட நாள் என்று பாப்பரசர் வர்ணித்திருந்தார். அமெரிக்கர்களுக்கென்றால் அது சர்வநிச்சயமாக இருண்ட நாள்தான்.

பொஸ்டன், நெவார்க் டளஸ் விமான நிலையங்களுக்குள் ஒரே நேரத்தில் புகுந்த இளைஞர்கள் சிலர் அமெரிக்க உள்ளூர் விமான நிலையங்களின் பாதுகாப்பு ஒட்டை களை முழுமையாகப் பயன்படுத்தி 6 அல்லது அதற்கு குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட பிரிவுகளாக 4 விமானங்களில் ஏறிக்கொண்டார்கள்.

பயணிகள் சகலரையும் விமானத்தின் பின் பகுதிக்கு ஒதுக்கிய கடத்தல்காரர்கள் அந்த உத்தரவுக்கு கட்டுப்படாதவர்கள்மீது சிறிய கத்திகளால் குத்தி காயமேற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பயணம் அனேகமான வாழ்க்கையின் முடிவாகத்தான் இருக்கும் என்று பெரும்பலான பிரயாணிகளுக்கு தெரிந்து போனது. ஆனால் அந்த முடிவு எந்த வகையில் அமையும் என்பதை கடத்தல்காரர்கள் மாத்திரம்தான் அறிந்தார்கள்.

ஒரு விமானி தமக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை மிகவும் சாதுர்யமாக கட்டுப்பாட்டு நிலையத்துக்கு வழங்கிக்கொண்டிருந்தார்.

அவரால் நேரடியாக எதனையும் தெரிவிக்க முடியாவிட்டாலும் 'ஒன்' செய்யப்பட்டிருந்த தொடர்பாடல் கருவிகள் விமானத்துக்குள் நடைபெறும் அல்லோல கல்லோல நிலையை கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தெரியப்படுத்தியிருந்தது.

ஒரு விமானத்தில் மாத்திரம் தமது கையடக்கத் தொலைபேசிகள் மூலம் உறவினர்களுடன் கதைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மரணத்துக்கு முன்னர் வீட்டுக்கு வழங்கும் இறுதித் தகவலாக அது அமைந்தபோதும் தாம் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டிருக்கும் செய்தியை வெளியில் கூற அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறான முயற்சிகள் ஈடேறாத வகையில் கடத்தல்காரர்கள் நடந்து கொண்டனர். இதற்கு மத்தியிலும் ஒரு பெண் தனது கணவருக்கு நிலைமையை விளக்கியிருக்கிறாள். மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதை சிப்பந்திகளும் அறிந்திருந்தனர். "நான் உங்களை நேசிக்கிறேன்" என்று அந்தப் பெண் கடைசியாக தனது கணவருக்கு சொன்னாள்.

"நான் இதயத்தை எதற்கும் தயார்படுத்திக் கொண்டேன்" என்று ஒருவர் வீட்டாரிடம் தெரிவித்துள்ளார்.

பெட்ரோல் நிரப்பப்படப்பட்ட விமானங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த கடத்தல்காரர்கள் விமானிகளை கொலை செய்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. எவ்வாறெனினும் விமானங்கள் எதற்காக திசை திருப்பப்படுகின்றன என்பதை அமெரிக்க விமானிகள் இடையில் அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

இதனால் கடத்தல் காரர்களுடன் விமானிகள் மோதியதாலேயே நெவோக்கில் இருந்து சான்பிரான்ஸிகோ நோக்கி பயணித்த விமானம் பிட்ஸ்பேக்கில் விபத்துக்குள்ளாகியிருக்கிறது என ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட விமானங்களில் இரண்டு, அதிலிருந்த நூற்றுக்கணக்கான பயணிகளுடன் நியூயோர்க் உலக வர்த்தக கட்டடத்துடன் மோதுண்டு பல்லாயிரக்கணக்கானவர்களை பலிகொண்டுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள அமெரிக்க படைகளின் நடவடிக்கைகளையும், தேசிய பாதுகாப்பு துறையையும் கட்டுப்படுத்தும் அந்த நாட்டின் பாதுகாப்பு தலைமைக் காரியாலயமான பென்டகனில் வீழ்ந்த மற்றைய விமானம் அங்கிருந்த 800 பேரின் உயிரை குடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ அபாயமில்லாத குளிரூட்டப்பட்ட அதி பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கூடிய பென்டகன் 1940களின் ஆரம்பத்தில் நிர்மானிக்கப்பட்டது. சுமார் 24 ஆயிரம் பேர் இதில் பணியாற்றுகிறார்கள்.

5 மாடிகளைக் கொண்ட பென்டகனின் முதல் மாடியை நோக்கி போயிங் 757 விமானம் மிக வேகமாக வந்து மோதியது. எந்த நேரத்திலும் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று நடைபெறலாம் என்றிருந்த பென்டகன் கடந்த 58 வருடங்களாக தன்னை பாதுகாத்துக் கொண்டது. ஆனால் அதை கனவாக மாற்றிய மாபெரும் தாக்குதலை அது சந்தித்து விட்டது.

முதல் மாடிக்கும் இரண்டாவது மாடிக்கும் இடையிலான இடைவெளியை வேகமாக தாக்கிய விமானம் முழு பென்டகன் கட்டடத்தையும் ஒரு கணம் அதிர வைத்தது. தாக்குதலுக்கு உள்ளாகிய பகுதியில் கட்டட திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதனால் அங்கு ஏராளமான 'புரபேன்' வாயு சிலிண்டர்கள் குவிக்கப்பட்டிருந்தன. விமானத்தில் ஏற்பட்ட தீயை தொடர்ந்து இந்த சிலிண்டர்களும் வெடிக்க ஆரம்பித்ததாலேயே அதிகளவு தீ பரவியுள்ளது.

அமெரிக்க பொருளாதாரத்தின் கேந்திரஸ்தானங்களும் பென்டகனும் எப்படி இத்தகைய பாரிய தாக்குதலுக்கு உள்ளானது? இத்தனை உயிர்களை பலிகொள்ளும் வைராக்கியம் யாரிடமிருந்தது? இந்தத் தாக்குதலை தடுக்கும் திறன் அமெரிக்க அதிகாரிகளுக்கு இருக்கவில்லையா? என்ற கேள்விகள் இன்று பிரதானமாக முன்வைக்கப்படுகின்றன.

முக்கியமான அரசாங்கக் கட்டடங்களை பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பதில் உள்ள சிரமத்தையே பென்டகன் மீதான தாக்குதல் உணர்த்தியிருப்பதாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


அண்மையில் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட திமோதி மெக்வி என்ற

னும் வீதித் தடைகளால் மாத்திரம் பயங்கரவாதிகளை கட்டுப்படுத்த முடியாது" என்கிறார் புரூஸ் ஹோமான் என்ற பாதுகாப்பு நிபுணர்.

"வீதித்தடைகளை போட முடியும்; அதனால் பயங்கரவாதிகள் ஆயுதங்களை கீழே வைத்து விட்டார்கள் என்று அர்த்தம் கொள்ள முடியாது. உண்மையில் அவர்கள் மாற்றுத் திட்டங்களின் பால் தூண்டப்படுகின்றார்கள்" எனவும் அந்த நிபுணர் கூறுகிறார்.

விமான நிலையம் பென்டகனுக்கு அருகிலேயே இருக்கிறது. இந்த முத்தரப்பு தகவல் பரிமாற்றத்தில் பாரிய தவறு நிகழ்ந்திருப்பதாக வொஷிங்டன் போஸ்ட் சுட்டிக் காட்டியுள்ளது.

பென்டகன் மீதான தாக்குதல் மிகவும் கடுமையானதாக இருந்தது; எந்தளவுக்கெனில் அந்த கட்டடத்தின் மிகப்பாதுகாப்பான இரகசிய இடத்தில் இருக்கும் தேசிய இராணுவ கடடளை நிலையம் புகை



பென்டகன் பாதுகாப்புச்சபையின் ஜெனரல் ஹென்ரி ஷெல்டன் பாதுகாப்பு செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், ஜோன் வோனர்.

தாக்குதல்கள் என்பதால் உலக நாடுகளின் கண்டனத்துள் உள்ளாகியிருக்கிறது.

மத்திய கிழக்கு விவகாரத்தில் அமெரிக்கா கடைபிடிக்கும் கபடத்தனமான வெளிநாட்டுக் கொள்கைக்கு கிடைத்த பரிசாக சிலர் இதனை வியாக்கியானம் செய்த போதும், சில நகரங்களில் மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்த போதும், வெளிப்படையாக யுத்த தர்மங்களை மீறி பொதுமக்களை ஆயுதமாகப் பாவித்து நடத்தப்பட்ட தாக்குதலானது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஒருவேளை இதை வாசிக்கும் போது அமெரிகக் விமானங்கள் ஆப்கானிஸ்தான் அப்பாவி மக்கள் மீது குண்டு மழை பொழிந்து கொண்டிருக்கலாம். அது எவ்வளவு அநீதியான கண்டனத்துக்குரிய செயலோ, அதே அளவு கண்டனத்துக்குரிய நிகழ்வாகவே அமெரிக்க பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் பார்க்க வேண்டும்.

யுத்த தர்மங்கள் குறித்த சட்டங்கள், வரையறைகள் எதுவுமின்றி நடைபெற்ற முதலாம் உலகப் போருக்குப் பின்னர் யுத்தங்களின் போது அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்காக போர்காலச் சட்டங்கள் வரையப்பட்டன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அந்த சட்ட திட்டங்கள்

அமெரிக்க இளைஞரினால் நடத்தப்பட்ட ஒக்லோஹோமா குண்டுத்தாக்குதலின் பின்னர் முக்கிய நகரங்களில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அவை பெரும்பாலும் லொறிகளில் அல்லது உடம்பில் குண்டைக் கட்டிக் கொண்டு வரும் தாக்குதல்களை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பயங்கரவாதிகள் வாகனங்களின் மூலம் மாத்திரம்தான் தாக்குதல் நடத்துவார்கள் என்று அமெரிக்க அதிகாரிகளை சிந்திக்கத் தூண்டும் பல சம்பவங்கள் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன.

1993ம் ஆண்டு உலக வர்த்தக கட்டடத்துக்கு அருகில் கார்குண்டொன்று வெடித்தது. 1995ம் ஆண்டு ஒக்லோஹோமாவில் ட்ரக் குண்டு வெடித்தது. 1998ம் ஆண்டு கென்யா மற்றும் தன்ஸானியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் கார் குண்டுகள் வெடித்தன.

இவற்றின் காரணமாக பயங்கரவாதிகள் காரில் வருவார்கள் அல்லது வயிற்றில் குண்டை பொருத்திக் கொண்டு வருவார்கள் என்ற கோணத்திலேயே அமெரிக்க அதிகாரிகளின் கவனம் குவிந்திருந்தது.

"வாகனகுண்டுகளை தடுப்பதில் நாம் வெற்றி கண்டிருக்கிறோம். வெடிமருந்து நிரப்பப்பட்ட ட்ரக் வண்டிகளை உலக வர்த்தக நிலையத்துக்கோ பென்டகனுக்கோ இப்போது கொண்டு வரமுடியாது எவ்வாறெனி

எவ்வாறெனினும் இத்தகைய தாக்குதல்கள் முன்னிலையில் பாதுகாப்பு அதிகாரிகளால் என்ன செய்ய முடியும்? எவரேனும் ஒருவர் விமானத்தைக் கடத்தி அதை கட்டடத்தில் மோதும் போது அதை எப்படி தடுப்பது என தமது ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார் ஜோன் ஏ.கொஸ்டினன் என்ற நிருவாக அதிகாரி.

இத்தகைய நெருக்கடிக்கு மத்தியிலும் கூட பென்டகன் மீதான தாக்குதலை தவிர்த்திருக்க முடியும் என வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

டளஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் லொஸ் ஏன்ஜல்சை நோக்கி பறக்காமல் வொஷிங்டனை நோக்கி திசை திருப்பப்பட்டதாகவும், கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை துண்டித்து விட்டதாகவும் டளஸ் விமான நிலைய அதிகாரிகள் ரீகன் தேசிய விமான நிலையத்துக்கு அறிவித்துள்ளார்கள் ஆனால் சந்தேகத்துக்குரிய விமானம் ஒன்று வொஷிங்டனை நோக்கி வருவதாக ரீகன் விமான நிலையத்தினரால் பென்டகனுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. இத்தனைக்கு உலக வர்த்தக நிலையம் தாக்கப்பட்ட செய்தி வெளியாகிக் கொண்டிருந்தது.

உலக வர்த்தக நிலையம் மீது இரண்டாவது விமானம் மோதியதற்கும் பென்டகன் தாக்கப்பட்டதற்கும் இடையில் 39 நிமிட நேர இடைவெளி காணப்பட்டது. ரீகன்

மண்டலமாக காட்சியளித்ததென தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இணைந்து இம்மாதம் 29,30ம் திகதிகளில் நடாத்தவிருந்த மாநாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவிருந்தது. உலகமயமாக்கலுக்கு எதிரான அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பாரிய எதிர்ப்புப் பேரணியை கட்டுப்படுத்துவதிலேயே அமெரிகக் சிவில் பாதுகாப்பு நிறுவனங்களின் கவனம் குவிந்திருந்தது. மாநாடு நடைபெறும் இடத்தைச் சுற்றி பாரிய வேலிகளை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக வேலி போடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை வாஷிங்கடன் பொலிஸார் எதிர்நோக்கிய சமயத்தில்தான் பென்டகன் தாக்குதலுக்கு உள்ளானது.

இந்த தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், பெருளாதார இழப்புக்கள் என்பன குறித்தும் அவற்றின் தாக்கங்கள் குறித்தும் உலகம் உணர ஆரம்பித்துள்ளது. பயங்கரவாதத் தாக்குதல்களின் கொடூரத்தை பென்டகனும் அமெரிக்க மக்களும் உணர்ந்துள்ளார்கள்.

எவ்வாறெனினும் பொதுமக்கள் பயணம் செய்த விமானங்களை கடத்தி எரிபொருள் நிரப்பப்பட்ட ஏவுகணைகளாக அந்த விமானங்களை பயன்படுத்தி நடத்தப்பட்ட



படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்த போதும் அண்மைக்காலங்களாக பயங்கரவாதம் சர்வதேச ரீதியில் தீவிரமடைந்ததோடு மீண்டும் பழைய படியே முதலாம் உலக மகாயுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்ததைப் போன்ற ஒரு துரதிஷ்ட நிலை தோன்றிக் கொண்டிருக்கிறது.

பல்வேறு வகையான நியாயங்களை முன்வைத்துப் போராடும் திவிரவாத அமைப்புக்கள் போர் தர்மங்களை வெளிப்படையாக மீறிச் செயற்படுகின்றன. பலஸ்தீன மக்களின் கல்வீச்சை துப்பாக்கியால் அடக்கும் இஸ்ரேலன் அரச பயங்கரவாதத்துக்கு அமெரிக்கா உதவியளிப்பதன்மூலம் மாபெரும் தவறை அது செய்து வந்தது. அதே போன்ற மற்றொரு தவறுதான் கடந்த வாரம் வொஷிங்கடனிலும், நியுயோக்கிலும் அரங்கேறின.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் இருந்த ரஷ்ய சார்பான கம்யூனிச அரசாங்கத்தை பதவி கவிழ்க்க ஒசாமா பின் லேடனை அமெரிக்க சி.ஐ.ஏ. தான் வளர்த்து விட்டதென்பது யாவரும் அறிந்த உண்மை. சோவியத் குடியரசுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கெடுபிடி யுத்த காலத்தில் அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட ஒரு குழந்தை தான் இந்த ஒசாமா. இன்று அது தனது விகாரமான தோற்றத்தை பெற்றவர்களுக்கே காட்டியிருக்கிறது.

கடந்த 11ம் திகதி சர்வதேச அமைதி தினமாகவும், போர் நிறுத்த தினமாகவும் ஐ.நா.சபையினால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இந்த சமாதான நாளில் நடைபெற்ற மோசமான பயங்கரவாதத் தாக்குதலை இறுதியாக நடைபெற்ற மிகப் பெரும் தாக்குதலாக வரலாற்றில் இணைத்துக்கொண்டு இத்துடன் பயங்கர வாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமாயின் இவ்வருட சமாதான தினம் மெய்யாகவே அர்த்த முள்ளதாக அமையும்.

பயங்கரவாதிகளையும், அவர்களுக்கு புகலிடம் வழங்குவோரையும் துரோகிகளாகக் கருதுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்திருக்கிறார். அவரது இந்த நிலைப்பாட்டை முழு அமெரிக்காவினதும் உண்மையான நேர்மையான நிலைப்பாடாக சபதமிட்டு உலகம் முழுவதையும் அந்தப் பணிக்கு ஈடுபடுத்துவதைத் தவிர இத்தகைய தாக்குதல்களை தடுக்க வேறென்ன வழி இருக்கிறது?

**'உலகை உலுக்கிய சர்வதிகாரி ஹிட்லர்' உண்மைத் தொடர் அடுத்தவாரம் இடம்பெறும்.**

# தகவல் பெட்டி



## உட்கார்வதில் உலக சாதனை

உலகசாதனை புரிந்து தமது பெயர்களை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ள என்ன வெல்லாம் செய்கிறார்கள் பாருங்கள்.

ஹொங்கொங் நாட்டைச் சேர்ந்த சிலர் சங்கிலித் தொடர் நாற்காலி போல் உட்கார்ந்து உலகசாதனை செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள்.

தமது நாட்டைச் சேர்ந்த 180 பேரை ஒன்று சேர்த்து நாற்காலி போன்ற எந்த இருக்கையும் இல்லாது ஒருவர்மேல் ஒருவர் உட்கார்ந்து உலகசாதனை படைத்துள்ளார்கள்.

வட்டமாக இப்படி இவர்கள் ஒருவர் மடியில் ஒருவராக 5 நிமிடங்களும் 17 விநாடிகளும் அமர்ந்திருந்தார்கள்.


## பாதுகாப்பாகப் பார்வையிட...


உலகில் உள்ள காட்டுவளத்தின் மொத்த அளவில் ஏழு சதவீதமானவை பனாமாக் காடுகளில் மண்டிக் கிடப்பதாக வனவள ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

இருப்பினும் இந்தக் காட்டுவளம், காட்டிலே எறித்த நிலவு போல், யாருக்கும் பயன்படாமல் இருந்தது. ஆராய்ச்சியாளர்கள் இந்தக் காட்டு வளத்தைப் பற்றிக் கூறினார்கள்.

உடனே பனாமா அரசு 30 மில்லியன் டொலர் (நம்நாட்டு மதிப்பில் சுமார் 270 கோடி ரூபாய்) செலவு செய்து ஒரு ஹொட்டல் அமைத்தது. சுற்றுலாப்பயணிகள், சாதனை படைக்க விரும்புவோர் ஏறக்குறைய 340 ஏக்கர் பரப்பளவுள்ள இந்தக் காட்டுவளத்தை இதில் தங்கியிருந்து பார்வையிட ஏற்பாடு செய்துள்ளது.

பாதுகாப்பான கேபிள்களின் உதவியால் ட்ரொலி எனப்படும் சாதனத்தின் உதவியால் உல்லாசப் பிரயாணிகள் பார்வையிடுவதையே படத்தில் பார்க்கிறீர்கள்.





## குட்டியின் குஷியான சவாரி

ஓணானைப் போன்ற பெரிய பிராணியின் பெயர் இக்குவானா. ஓணான் இனத்தைச் சேர்ந்த இக்குவானாவின் முதுகின் மேல் அநாயாசமாக உட்கார்ந்திருக்கிறது அதன் குட்டி.

அவுஸ்திரேலியாவில் உள்ள கோஸ் கோட் நகரில் உள்ள உயிரியல் பூங்காவில் இருக்கும் இந்த இக்குவானா பார்வையாளர்களைக் கவர்ந்து வருகிறது.

குட்டி இக்குவானாவுக்கு குஷி வந்து விட்டால் தாயின் தலைமேல் ஏறிச் சவாரி செய்யும். மற்ற நேரங்களில் தாயின் மேலே படுத்துக் கிடக்கும்.




இந்த மனிதர் இரண்டு கைகளாலும் தூக்கிப் பிடித்திருப்பது ஆலம் விழுதுகளை அல்ல. ஆலமர விழுதுகள் போன்ற தனது நீண்ட தலைமுடியை. இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் பரத்முனி என்ற சாது. இவர் காங்காசாகர் என்ற புண்ணியஸ்தலத்தை நோக்கிச் சென்றபோது பிடிக்கப்பட்ட படம்தான் இது. பல வருடகாலமாக வெட்டாமல் வளர்க்கப்பட்ட இவரது முடியின் நீளம் ஏறக்குறைய எட்டடி ஆகும்.



## சாய்ந்து விழுந்த கட்டடம்

உலகின் எந்த மூலையிலாவது இயற்கை தன் சீற்றத்தைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

தாய்வான் நாட்டில் கடந்த 50 வருடங்களாக ஏற்படாத புயல் மற்றும் வெள்ளத்தாலான அழிவுகள் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

இதனால் சுமார் 80க்கும் மேற்பட்ட உயிரழிவுகள் ஏற்பட்டன. பாரிய பொருள் அழிவுகளும் ஏற்பட்டன. படத்தில் தெற்கு தாய்வானின் ஓர் ஆற்றோரத்தின் அருகே இருந்த கட்டடம் புயல் காற்றால் அடியோடு சாய்ந்து விழுந்துள்ளது.



புதுமுகம் ஷாம்-சிம்ரான்
படம்: 12B

## சூர்யாவின் சம்பளம்

'குஷி' படம் தமிழ்-தெலுங்கில் பெற்ற வெற்றி சூர்யாவை உச்சத்துக்குக் கொண்டுபோய் விட்டது. தற்போது 'குஷி'யை இந்தியில் இயக்கி வரும் சூர்யா அதற்காகப் பெற்றுக் கொண்ட சம்பளம் எவ்வளவு தெரியுமா? 3 கோடி ரூபாய்.

இந்தி 'குஷி' வரும் டிசம்பரில் முடிந்துவிட ஜனவரியில் பூமிகாவைக் கைப்பிடிக்கவுள்ளார் சூர்யா. கல்யாணம் முடிந்ததும் அஜித்தை வைத்து 'நியூ' படத்தை இயக்கவுள்ளார்.

## நாகார்ஜுனின் 'ருத்ரன்'

நாகார்ஜுன் நடித்த தெலுங்குப் படமொன்று தமிழில் 'ருத்ரன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

இதில் நாகார்ஜுனுடன் சௌந்தர்யா, நாசர், கசன்கான், பொன்னம்பலம், விஜயகுமாரி உட்பட பலர் நடித்துள்ளனர். கே.சீனிவாசன் இயக்கியுள்ள இப்படத்திற்கு எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைத்துள்ளார்.



அப்பாஸ்-ஸ்ரீதேவி
படம்: காதல் வைரஸ்

சினி விசிட்



அனுஷா
படம்: சிட்டி தாதா

திரையுலக மறுபக்கம் 208

# தமிழ் நடிகர்களை விரட்டும் தெலுங்கர்கள்

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தெலுங்குத் திரையுலகில் தூள் கிளப்பிக் கொண்டிருக்கும் நடிகர்களில் 'டாக்டர்', 'பிரகாச', 'வரன்' ஆகிய மூன்று நடிகர்கள் முக்கியமானவர்கள்.

தெலுங்கு பேசுபவர் என்றாலும் 'டாக்டர்' தமிழகத்தில் இருந்து சென்றவர். கர்நாடகத்தில் இருந்து சென்றவர் 'பிரகாச' நடிகர். 'வரன்' நடிகர் சுத்தத் தமிழர். இவையெல்லாம் தெலுங்கு திரையுலகத்தவர்களுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தி வந்தன.

பிற மாநிலத்தில் இருந்து வந்து அங்கு கோலோச்சி வரும் அவர்களைத் துரத்தியடிக்கச் சமயம் பார்த்திருந்தார்கள் தெலுங்கு தேசத்தவர்கள்.

முதலில் தெலுங்கு தேசத்தவர்களின் இலக்குக்குள்ளானவர் 'டாக்டர்' நடிகர். விருந்தொன்றில் தனது மனைவியும் முன்னாள் நடிகையுமானவரின் சகோதரியிடம் தவறாக நடந்து கொண்ட இயக்குநரை அடித்தார் 'டாக்டர்'.

தமிழின் உச்ச நட்சத்திர நடிகர் வணங்கும் கடவுளின் திருநாமத்தைக் கொண்ட அந்தத் தெலுங்கு இயக்குநர் சரியான சபலப் பேர்வழி. தமிழில் இருந்து தெலுங்கு நோக்கிச் செல்லும் நடிகைகளில் பெரும்பாலானோருக்கு இவர்தான் அடைக்கலம் கொடுப்பார்.

'டாக்டர்' இந்த இயக்குநருக்கு அடித்த விஷயத்தைப் பெரிது படுத்தி அதையே காரணம் காட்டி அவர் நடிக்க தடை விதித்தது.

'பிரகாச' நடிகர் படப்பிடிப்புக்களுக்கு சரியான நேரத்திற்குச் செல்வதில்லை. யாருக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை என்று காரணம் காட்டி அவருக்கும் தெலுங்கில் நடிக்கத் தடை போட்டது.

'பிரகாச' நடிகர் நடத்தை கொஞ்சம் ஏறக்குறைய இருந்தாலும் அதைக் காரணம் காட்டித் தடை போட்டது, நடிகரை தெலுங்கு தேசத்தில் இருந்து விரட்டத்தான்.

அடுத்தது 'வரன்' நடிகர். இவரையும் அங்கிருந்து விரட்டச் சரியான சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது தெலுங்குத் திரையுலகம்.

தமக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எதிர்த்து நடிகர்கள் இருவரும் பல எதிர்ப்புக்களைக் காட்டியும் எதுவித பயனும் இல்லை.

இத்தனை பிரச்சனைகளுக்கு மத்தியில் தமிழ்த்திரையுலகம் இது பற்றி மூச்சுக் கூட விடவில்லை.

காரணம் இல்லாமல் இல்லை. சூப்பர் நடிகர்கள் இருவர் மற்றும் 'காந்த' நடிகர் ஆகியோரது படங்கள் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு அங்கு வெளியாகின்றன.

இவர்கள் மூவருடைய மொழிமாற்றுப் படங்கள் நேரடியாகத் தயாரிக்கப்படும் தெலுங்குப் படங்களுக்குரிய வரவேற்பைப் பெறுகின்றன.

தடை விதிக்கப்பட்ட நடிகர்களுக்கு ஆதரவாகப் பேசி, தெலுங்குத் திரையுலகம் மேல் எதிர்ப்பைக் காட்டித் தெலுங்கில் இருக்கும் தமது படங்களுக்கு வரவேற்பை வீணாக இழக்கக் கூடாதென்று அமைதியாக இருக்கிறார்கள்.



ஆனந்தராஜ்-சங்கீதா
படம்: நிலம் பார்க்கும் நிலவு

## ஸ்ரீராமின் மாணவர்கள்

'மௌனராகம்', 'அக்னி நட்சத்திரம்' போன்ற படங்களின் ஒளிப்பதிவால் திரையுலகை திரும்பிப் பார்க்க வைத்தவர் பி.சி.ஸ்ரீராம்.

இவரிடம் பயின்ற பலர் இன்று இந்தியத் திரையுலகின் பிஸியான ஒளிப்பதிவாளர்களாக இருக்கிறார்கள்.

ஜீவா, கே.வி. ஆனந்த், திரு, பிரபு, கோபால், ராம்ஜி, பாலு, பாலமுருகன், நிரவ் ஷா, ஃபௌசியா ஆகியோர் ஸ்ரீராம் பாசறையில் பயின்ற மாணவர்கள்.

'மீரா', 'குருதிப்புனல்' ஆகிய படங்களை இயக்கியிருக்கும் பி.சி.ஸ்ரீராம் இப்போது அடுத்த படத்தை இயக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

## இந்திக்குப்போன இஷா

'காதல் கவிதை', 'நெஞ்சினிலே', 'என் சுவாசக்காற்றே' ஆகிய தோல்விப் படங்களில் நடித்து ராசியில்லாத நடிகை என்ற முத்திரை குத்தப்பட்ட இஷா கோபிகருக்கு 'நரசிம்மா' படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டது.

'நரசிம்மா'வின் படுதோல்வியால் இனித் தமிழ்ப் படங்களில் நடிக்க வாய்ப்பே வராது என்ற முடிவுடன் மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு இந்திக்குப் போய் விட்டார் இஷா.

இப்போது இந்தியில் இவர் கதாநாயகியின் தோழி, கதாநாயகனின் தங்கை வேடங்களில் நடித்து வருகிறார்.

# யார் இந்தக் குழந்தை?



படத்தில் புன்னகை தவழ இருக்கும் இந்தக் குழந்தை யாரென்று தெரிகிறதா? இந்தக் குழந்தையின் பெயர்-சாரா. தாயின் பெயர்-அஞ்சலி. இந்தக்குழந்தையின் தந்தை பெரும் கிரிக்கெட் வீரர்.

இப்போது கண்டு பிடித்திருப்பீர்கள். ஆம். இந்திய கிரிக்கெட்டின் துடுப்பாட்ட நட்சத்திரமான சச்சினின் மகள்தான் இவர்.

# தேன் கிண்ணம்

## வருமா வாழ்வில் வசந்தம்

உன் வார்த்தையில்
ஆசையைக் காட்டி
என் வாழ்க்கையை
எதற்காக சிதறடித்தாய்?
***
என்னை உனக்காக
வாழ வைத்த நீ
ஏன் இன்னொருத்திக்காய்
வாழ்கின்றாய்?
***
நீ என்னை காதலித்ததுமே
உன் இதயம் என்னிடம்
என் இதயம் தான்
உன்னிடம் இருந்தது.
அது தெரியாத நீ
கேவலமாக
உன்னிடமிருந்த பெண்ணிதயத்தை
கொடுத்து அவளைக் காதலிக்கிறாய்.
வேடிக்கை தான். உன்வாழ்வு!
-ஆனால்
வேதனையோடு என்வாழ்வு
தினமும் வீணாகிப் போகுதே!

காயத்திரி பரமலிங்கம்-வவுனியா.



## நான் நினைத்ததும்...

நான் நினைத்தேன்
உனை மறந்துவிடலாம்
என்றுதான்-ஆனால்
அது நடக்கவில்லையே
***
நீ உன் காதலால்
என் உயிரில் அழியா
தழும்பை அளித்து
விட்டாயே
***
நான் நினைக்கவில்லை
நீ மாறுவாய் என்று
ஆனால்-இன்று
நடந்தது
அதுதானே,
மறுதலித்து விட்டாயே
நீ....!

ஈழவாணி-வவுனியா.



## இனியாவது வாழ்கிறேன்

உன்னை
நினைத்துக்கொண்டு
நான் வாழவில்லை.
உன் நினைவுகளாலே தான்
நான் வாழ்கிறேன்!
நீ செய்த
துரோகத்தை
மறந்து விட்டு
நான் வாழவில்லை!
மறப்பதற்காகவே
வாழ்கிறேன்!
உன்னை
வெறுத்துவிட்டு வாழவில்லை
உன்னை வெறுப்பதற்காகவே
நான் வாழ்கிறேன்!
இன்னும்
உன் பொய்மைகளை
சகித்துக் கொண்டு வாழவில்லை.
அவை எல்லாவற்றையும்
சகித்துக்கொள்ளவே
வாழ்கிறேன்!
மொத்தத்தில்-
நான்
வாழ்ந்து கொண்டிருப்பதற்காக
வாழவில்லை.
இனியாவது வாழ்வோம்
என்பதற்காக
வாழ்கிறேன்!

வே.காண்ணாநிதி-டயகம கிழக்கு.

## தேர் இழக்க வா!

ஒரு தூயகாதல் தேரை
நீயும் நானும் மட்டும்
வடம்பிடித்து
இழுத்து வந்தோம்!
யாரோ எங்கோ
புக்கையும் சுண்டலும்
பிரசாதம் கொடுக்க நீ
இடையில் விட்டுவிட்டு
போய்விட்டாய்
இதோ!
நான் இப்போதும்
வடத்தோடுதான்
வருந்தி நிற்கிறேன்
நீ வருவாய் என.

என்.தனுசுஜன்-
யாழ்ப்பாணம்

## அகத்தில் உன் சொத்தானேன்..

மனத் திங்களே...! நீ
உன் கூந்தலை வருடும்
போது..., முடி உதிருகிறது..
என்று கவலைப்படுகிறது புரிகிறது...
***
அதையிட்டு என் உள்ளம்
மகிழ்வடைகின்றது...,
என்னை வெறுக்க வைக்கும்
கலைகள் தான் உன்
தலையில் உதிரும் முடிகள்...
***
நுதலில் நுண்ணிய திலகம்
இடும், அனுவாய் உள்ளம்
துளையிடுபவளே..! உன் நுரையீரல்
ஈரலிப்பாய் இருப்பதற்குக் காரணம்
தெரியுமா உனக்கு...?
***
நீ என்னை வெறுப்பாக
நினைக்கும் போதெல்லாம்
உன்னை அறியாமலே...,
வேகமாய் அருந்தும் பிராணவாயுவில்
என் கண்ணீரையும் சேர்த்து
அல்லவா உள்ளெடுக்கின்றாய்
அதனால் தான்...!
***
உயிருக்கு உருவம் வழங்கிய
உயிரானவளே 'உன்னை நான்
நேசிக்கவில்லை', என்று கூறுகின்றாய்
நானும் அதை முழுதாய்.
ஏற்கின்றேன்....
***
புனிதமானவளே நான் உன்
அக உறுப்பில் அல்லவா
நிலையான சொத்தாய் அமர்ந்து
விட்டேன்....
***
அதை வெளிப்படுத்தும் வழி
தெரியாமல் தான் உன்
இதழ்கள் நான் உன்னை
நேசிக்கவில்லை என்கின்றன..

பாக்கியராசா துஷ்ஷயந்தன்-
கோட்டைக்கல்லாறு-02.

## எதிர்காலம் என்ன சொல்லும்?

மனதில் இருக்கும் நிம்மதி போனால்
மண்ணில் வாழ்வது புண்ணிய மாமோ?
கனவில் வருவதை நிஜமென நம்பி
காரியம் செய்வது கண்ணிய மாமோ?
அனலில் விழுந்திடும் புழுவினைப் பார்த்து
ஆனந்தங் கொள்வது ஆனந்த மாமோ?
புனலில் நீந்திடும் மீனினைப் பிடித்து
புழுதியில் இட்டு இரசித்திட லாமோ?
***
நித்தம் சாவதன் வரவதை பார்த்து
நினைவினில் சோகம் வரவிட லாமோ?
ரத்தம் தோய்ந்து வாழ்வதை ஏந்தி
ரணமுடன் உழல்வது வழிமுறை தானோ?
யுத்தம் ஒன்றே தொழிலென கொண்டு
யுகங்களை கடத்துதல் விதிமுறை யாமோ?
சித்தம் கலங்கும் செயல்களி னாலே
சிக்கித் தவிப்பதும் தலைவிதி தானோ?
***
நலங்கள் நாடும் மக்களுக்கெல்லாம்
நாளும் துன்பம் ஒருகொடை யாமோ
சலங்கை கட்டா கால்கள் கொண்டு
சட்டென விலையது ஆடிட லாமோ,
புலன்கள் இருந்தும் ஜடமென வாழும்
புதுவழிக் காய்தான் பிறந்திடப்போமோ
இலங்கை என்றால் இன்னல் என்று
எதிர்கா லந்தான் சொல்லிடு மாமோ?


பூண்டுலோயா-மெய்யன் நடராஜ்
-டோஹா கட்டார்.

## 'என்னில் அவள்'

தாழ்ந்து கிடந்த என்னை
உயர்த்தி விட்ட உத்தமியே...!
என் வாழ்வில் விளக்கேற்ற வந்த..
விண்மீனே...!
ஒன்றரை வருடமாக
உன்னோடு உறவாடி
இப்போது இடைவெளியா..
நம் வாழ்வில்...?
பிரிவால் உன் நினைவு... என்
நெஞ்சைப் பிழிகிறது.
***
ஆசை மொழிகளால்... என்னை
அழகு படுத்தியவளே..!
உன் வார்த்தை கேட்க.. என்
காதுகள் தவமிருக்கின்றன.
உன் பார்வைகள்... என்னை
பட்டாபிஷேகம் செய்யும்.
தும்பியினம் சிறகடிக்க...
துவழ்கின்ற இடையாளே-உன்னை
சிலையாக வடித்துள்ளேன்-இதயத்தில்
ரோஜாக்கள் தலைகுனியும்.. உன்
பூ முகம் கண்டு...
என்முகம் புன்னகை பூக்கும்
நம் காதல் நினைவுகளை... உன் வீட்டு
செம்பருத்தி செடி சொல்லும்!

மு.கமலன்-வாழைச்சேனை.


# பேனா நண்பர்கள்



பெயர்:
ரி. தேவப்பிரசன்னா.
வயது: 21
முகவரி:
24, மத்திய வீதி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
பி. உஷாந்தினி,
வயது: 17
முகவரி:
283, வீரபுரம்,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
எம். அஸ்மீர்
வயது: 18
முகவரி:
ஆலங்கேணி வீதி,
கிண்ணியா-02.
பொழுது போக்கு:
வழமையானவை.

# நலம் தரும் நம்பிக்கை




நடக்க இயலாதவனை இயேசு நடக்கச் சொல்கிறார். அவன் தயங்குகிறான். எழுந்து நிற்கவே தடுமாறுகிறான். நடக்கத் துணிவு இல்லை. 'நம்மால் எப்படி நடக்க முடியும்?' என்ற தயக்கம் கொள்கிறான்.

"உன்னுடைய நம்பிக்கை உன் கால்களை விட பலகீனமாக இருக்கிறது" என்று இயேசு சொன்னவுடன் துணிந்து எழுந்திருக்கிறான் அவன்.

நிற்க முடியாது என்ற உணர்வே நடக்கத் தடை போடுகிறது. நிற்க முடியும் என்ற வேகமே துணிவை தருகிறது. முதலில் சற்று தடுமாறினாலும் பின்பு துடிப்புடன் நடக்கிறான்.

அவன் அப்படி நடந்து சென்றதற்கு இயேசுவின் வார்த்தைகள் அவனைத் தூண்டிவிட்டதுதான் காரணம்.

தலைவர்களின் வார்த்தைகளால் தொண்டர்கள் எந்த அளவுக்குத் தூண்டப்படுகிறார்கள் என்பதனைக் கண் முன்னே காண முடிகிறது.

நம்முடைய முயற்சிக்குத் தூண்டுதல் தேவையாக இருக்கிறது. தூண்டுதல் என்பது நம்மிடம் மறைந்து கிடக்கும் சக்தியை வெளிப்படுத்தி பயன்படும் வழியில் செயலாற்றுவதுதான்.

'நம்முடைய சக்தி பலருக்கும் பயன்பட்டால் நல்லதுதானே. நாம் மட்டும் அல்ல மற்றவர்களும் பயன் அடைகிறார்கள்' என்று எண்ணும் போது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும் இல்லையா?

"உன் குறிக்கோளை உயரத்தில் வை. அதை அடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொள். அதற்கான பாதையை தேர்ந்து எடு. எப்படி செயல்பட்டால் குறிக்கோளை அடைய முடியும் என்ற சாத்தியக் கூறுகளைப் பற்றி சதா எப்பொழுதும் நினைத்துக் கொண்டிரு."

"கனவு காண். அந்தக் கனவே உன்னை தூண்டிக் கொண்டே இருக்கும்" என்று சிக்மண்ட் பிராய்ட் என்ற உளநூல் மேதை கூறுகிறார். இதனைக் கடைப் பிடித்தால் வெற்றி நமக்குத்தான்.

விளையாட்டில் மூன்று கட்டளைகள் உண்டு. ஒழுங்கு, செயல், வெற்றி. இந்த மூன்றும் தாரக மந்திரங்கள்.

முதலில் தனிப்பட்ட அளவில் கட்டுப்பாடு. பிறகு கடுமையான பயிற்சி. அடுத்து வெற்றி நோக்கு. இத்தகைய உத்திகள் விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல வாழ்க்கைக்கும் பொருந்தும்.

வசதியற்றவர்கள் வாழ்வுக்காகப் போராடியவர்கள் எல்லாம் இறுதி காலத்தில் அழியாதப் புகழ் பெற்று இருக்கிறார்கள். இவர்களால் மட்டும் எப்படி இந்த நிலைக்கு உயர்வு பெற முடிந்தது?

அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையில் நம்பிக்கை வைத்து செயலாற்றியபடியினால் தான் வெற்றி பெற முடிந்தது.

கால வேகத்திலும் காய்ந்து விடாமல் கருகி மண்ணோடு மண்ணாக மறையாமல் பொன்னேடுகளில் என்றென்றும் அழியாமல் தமக்கென்று ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

கார்ல்வில்ஹெம் என்ற ஜெர்மன் கவிஞர் தன் மனைவியுடன் வாழ்ந்த முப்பத்தெட்டு வருட வாழ்க்கையிலும் நாள் தவறாமல் நூறு வரிகள் உள்ள கவிதையை எழுதி அன்பளிப்பாக அளித்து மனைவி இறந்து போன பின்பும் அவர் உயிரோடு இருந்த ஆறு ஆண்டுகளும் தவறாமல் வழக்கப்படி அவளைப் பற்றிய கவிதையை எழுதி அவள் சமாதிக்குச் சமர்ப்பித்து வந்தார்.

இவரால் மட்டும் எப்படி முடிந்தது என்றால் 'தன்னால் எழுத முடியும்' என்ற உறுதி இருந்ததுதான்.

பிறந்த குழந்தை குப்புறப்படுக்கிறது. குப்புறப் படுத்ததும் தவழ்கிறது. அதன் பிறகு தத்தித்தத்தி நடக்கிறது. நடக்கும் குழந்தை ஓடுகிறது. இது எப்படி முடிகிறது என்றால் 'முடியும்' என்ற உத்வேகம் இருப்பதால்தான்.

# இந்தவாரம் உங்கள் பலன்

23.09.2001 தொடங்கி 29.09.2001வரை

## கிரக நிலை

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| தனு | - செவ்வாய், கேது |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு |
| சிங்கம் | - வெள்ளி |

சந்திரன், விருட்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) குடும்பத்தில் மகிழ்ச்சியும், பொருள்வரவில் திருப்தியும் ஏற்படும். வெளியிடப்பயணங்களால் நன்மையுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் தமது மேலதிகாரிகளால் பாராட்டப் படுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) மனக்கவலை மறையும். குடும்பத்திலும், தொழில் நிலையிலும் முன்னேற்றம் உண்டாகும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் உயர்வடைவர். மாண்வர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி
அதிஷ்ட இலக்கம்: 03.

### மிதுனம்:

(மிருக சீரிடத்துப் பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் சிறப்பும், குடும்ப நன்மையும் உண்டாகும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) தொழில் கஷ்டங்கள் தீரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருள் வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வி மேன்மையும், விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமும் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

### சிங்கம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) குடும்பத்தில் சிறிது பிரச்சனைகள் தோன்றும். பணவரவு சிறிது தாமதமாகும். சுபகருமங்களில் தடையுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கன்னி:

(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் பேறும், குடும்பத்தில் சந்தோஷமும் நிலவும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவ சாயிகள் வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 01.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழில் விருத்தியும், குடும்ப சுகமும், சிறந்து விளங்கும். மறைமுக எதிர்ப்புக்களால் சிலர் பாதிப்புறுவர். உத்தியோகஸ்தர்கள் தமது மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) தொழிலில் சிறிது கஷ்டங்கள் தோன்றும். வார இறுதியில் பணவரவு திருப்தி தரும். பிரயாணங்களில் அவதானத்துடன் இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் எந்தக் கருமத்தையும் திட்டமிட்டுச் செல்வது நல்லது. மாணவர்களுக்கு நன்மைகிடைக்கும்.

அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழில் விருத்தியும், பணவரவும் உண்டாகும். நீண்ட நாளைய கனவொன்று நனவாகும். உத்தியோக ரீதியான நன்மைகளுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மகரம்:

(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) தொழிலில் சிறிது பிரச்சனைகள் ஏறபட்டு மறையும். வெளியிடப் பிரயாணங்களால் தொல்லைகள் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் வீண் சிரமங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு கல்வித் தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### கும்பம்:

(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி, முன்முக்கால்) தொழிலும், குடும்பத்திலும் சந்தோஷம் நிலவும். வீண் மனக் கவலைகள் மறையும். பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்வு கிடைக்கும். விவ்சாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) மனக்கவலைகள் படிப்படியாக மறையும். தொழிலில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஏறபடும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த தடைகள் விலகும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பிணிப் பெண்களின் உணவு



பொதுவாகத் தாய்மை அடைந்த ஒரு பெண் தனது குழந்தைக்குப் பால் கொடுக்கும் காலம் வரையில் இரண்டு உயிர்களுக்கு உணவிட வேண்டிய தாயிருக்கிறது.

வயிற்றுக்குள் இருக்கும் குழந்தை தனக்குத் தேவையான உணவை தாயிடம் இருந்து தொப்புள் கொடி மூலம் பெறுகிறது. குழந்தையின் கழிவையும்கூட இந்தத் தொப்புள் கொடியே அகற்றுகிறது.

எனவே கர்ப்பிணிப் பெண்களும் தாய்மாரும் வயிறு முட்ட உணவு உண்பதில் அக்கறை காட்டாமல் சத்தான உணவுகளைச் சாப்பிடுவதில் தான் கவனம் செலுத்த வேண்டும்.

வழக்கமாகக் காலையில் எழும்பும் போது ஒரு பாண்துண்டோ அல்லது பிஸ்கட்டோ உண்டு பால் குடித்துச் சிறிது ஓய்வு எடுக்கவேண்டும். கர்ப்பிணிப்பெண்கள் தமது வாய்க்கு எது சுவையாக இருக்கிறதோ அதைத் தாராளமாக உண்ணலாம். எனினும் எண்ணெய்ப் பண்டங்களையும் கொழுப்புப் பதார்த்தங்களையும் தவிர்ப்பது நல்லது.

சராசரியாக உணவில் அரிசி 400 கிராம்,பச்சைக்காய்கறி 100 கிராம், மீன் அல்லது இறைச்சி 100 கிராம், பருப்பு, கிழங்கு, கீரை, பழங்கள் 100 கிராம், முட்டை 30 கிராம், பால் அரை லீட்டர், தண்ணீர் அரைலீட்டர் ஆகியன இருந்தால் தாய்க்கும் சேய்க்கும் போதுமானது.

இவற்றை முழுமையாக இல்லாது, தினமும் மாறி மாறிச் சாப்பிடுவது மிக நல்லது. இவற்றோடு கரட், வெங்காயம், வெள்ளரி, கொய்யாப்பழம், தோடம்பழம், சப்போட்டா நெல்லிக்காய் ஆகியவையும் தாய்மைக்கு நன்மை பயக்கும்.

இந்த உணவு முறை தவிர இரவு தூக்கத்திற்கு முன்பு மிதமான வெந்நீரில் குளித்தல், மெலிதான உடைகளை அணிதல், தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடித்தல், காலாற சிறிது தூரம் நடத்தல், அன்றாடப் பணிகளைச் செய்தல், ஆனந்தமாக இருத்தல் ஆகியவையும் சிறப்பான குழந்தைப் பேற்றை உருவாக்கும்.

கர்ப்பிணிப் பெண்கள் மல்லாக்காக படுக்காமல் இருதயம் இருக்கும் இடதுபுறமாகச் சாய்ந்து தூங்குவதால் மட்டுமே குழந்தைக்குச் சுகமான சுவாசத்தைக் கொடுக்க முடியும்.

## ஆரோக்கியமான அழகுக் குறிப்புக்கள்

★ தலையில் பொடுகு இருந்தால் அதை ஒழிக்க தேங்காய் எண்ணெயுடன் சிறிது கற்பூரத்தைப் போட்டு வைத்து அந்த எண்ணெயைத் தொடர்ந்து உபயோகியுங்கள். பொடுகுபோய் விடும்.

★ ஒரேஞ்ச் பழத் தோல்களைத் தூக்கி எறிந்து விடாதீர்கள். அவற்றைக் காய வைத்துப் பொடியாக்கி, அப்பொடியைச் சவர்க்காரத்திற்குப் பதிலாக தேய்த்து குளிக்கலாம். உலர்ந்த சருமத்தை உடையவர்களுக்கு இந்தப் பொடி நல்லது.

★ வேப்பம்பூவை நெருப்பில் வாட்டித் தலையில் வைத்துக் கொண்டால் பேன், ஈர் முதலானவை நீங்குவதுடன் தலைப் பாரம் குறைந்து, முடி செழித்து வளரும்.

★ இரவு படுக்கச் செல்லும்போது எலுமிச்சம்பழத்தில் பாதியை முகத்தில் தடவிக் கொண்டு படுத்து காலையில் எழுந்ததும் முகத்தைக் கழுவிப் பாருங்கள். முகம் பளபளப்பாக இருக்கும்.


★ ஊளைச் சதை உள்ளவர்கள் பப்பாளிப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், தேவையற்ற சதைகள் நீங்கி, அம்சமாகி விடுவீர்கள்.

★ எலுமிச்சம்பழ விதைகளுடன் சிறிது மிளகையும் சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைத்துத் தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி கொட்டுவது நின்று, முடிவளர ஆரம்பிக்கும்.

★ முகப்பரு உள்ளவர்கள் துளசியையும் மஞ்சளையும் சேர்த்து அரைத்து படுக்கச் செல்லுமுன் முகத்தில் பூசிக்கொண்டு வாருங்கள். ஒரே வாரத்தில் முகப்பரு இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KC

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-09-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? நிந்தவூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம். ஏ. எம். யாஸ்மின்,
116ஏ, அல் மினா வீதி, நிந்தவூர்-09.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.






சுரேஷைப் பார்த்துப் புன்னகைத்தாள் அனிதா. அவன் அப்படியே உடம்பு முழுவதும் சிலிர்ப்படைந்து, "அப்பாடா... முதல் தடவை என்னை நிமிர்ந்து பார்த்து ஸ்மைல் பண்ணிட்டே!" என்றான்.

"ஒரு ஸ்மைல் போதும்!"

"சிரிப்பா... சிரிப்பா... நல்லா பழகணும் இல்லையா? வீட்டோடயே போத்தி வளர்த்த பொண்! உங்க அமெரிக்காவக்கு வந்து எல்லாம் கத்துண்டுடுவா பாருங்கோ... இப்போ கூட எனக்கு ஏதாவதுன்னா, இவதான் ஃபேமிலி மேட்டர்ஸ் எல்லாத்தையுமே பார்த்துப்பா!" என்றார். மகாதேவன்.

"ஐம் வெரி லக்கி..." என்றான் சுரேஷ்.

"இப்பவே பாருங்க... எங்காத்து பையன் உங்காத்துபக்கம் சாய ஆரம்பிச்சுட்டான்..." என்றாள் அந்த மாமி.



அனைவரும் பட்சணங்களை நாசூக்காக மென்ற போது, "கேசரி யார் பண்ணது?" என்றான் சுரேஷ்.

"கடைல வாங்கினது..." என்றார் மகாதேவன்.

"ரொம்ப டேஸ்ட்டா இருக்கே...."

"அனிதா கை பட்டுடுத்து இல்லையா?" என்று அந்த மாமி சிரித்தாள்.

அனிதா தன் அறைக்கு வந்து ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

'என்ன ஒரு முட்டாள்தனம்.... வைரவனுக்கு போன் செய்வதாம்-மதுவுடன் ஓடிப்போவதாம்-நல்லவேளை!'

"அனிதாம்மா..."

தெருவில், 'உசேனியா ஸ்டோர்ஸ்' காதர் நின்று கொண்டிருந்தான். அங்கிருந்து சைகையும் சப்தமுமாக அழைத்தான்.

"உங்களுக்கு போன் வந்திருக்கு... சீக்கிரம் வாங்க! வெளிநாட்லருந்து..."

அனிதா அவசரமாகப் பட்டுப்புடைவையைக் களைந்து விட்டு மாற்றிக் கொண்டு கீழே இறங்கிச் சென்றாள்.

"எங்க போறே" என்றார் அப்பா.

"போன் வந்திருக்கு"

"யார்கிட்டருந்து"

"தெரியலை. மதுன்னு நெனைக்கிறேன்"

"ஜிம்பு.... கூடப் போடா."

"ஜிம்பு, மாப்பிள்ளையாத்துக்குப் போயிருக்கான் வீடியோ பார்க்க என்றாள் சுகந்தி.

அப்பா கொஞ்சம் யோசித்துவிட்டு "ம்" என்று ஒரு வார்த்தை அனுமதி கொடுத்து விட்டு பேப்பரில் ஆழ்ந்தார்.

அவசரமாக 'உசேனியா' கடைக்குச் சென்று, காத்திருந்த போனை எடுத்து "ஹலோ" என்றாள். தொடர்பு அறுந்து 'ஷிர்ர்' என்று சப்தம்... 'டயல் டோன்' மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் அதுவும் அலுத்துப்போய், பீப்... பீப்' என்றது.

"யாரும் இல்லையே?" என்றாள் ஏமாற்றத்துடன். காதர் அதை எடுத்துக் கேட்டுவிட்டு "போய்ட்டாங்க போல இருக்கு" என்று ரிஸீவரை வைத்தவுடன் மறுபடி அடித்தது.

"உங்களுக்குத்தான் இருக்கும். மூணு வாட்டி பண்ணிட்டாரு."

அனிதா அதை எடுத்து "ஹலோ" என்றாள்.

"நான் வைரவன் பேசறேன், யாரு அனிதாவா?"

"ஆமாம். எங்கிருந்து பேசறீங்க?"

"இதெல்லலாம் விசாரிக்க டயம் இல்லை. பாதி மீட்டிங்கிலிருந்து வந்திருக்கேன் அனிதா. ஆபீஸுக்கு போன் பண்ணியிருந்தியாமே? சீதள் சொன்னா. என்ன பிரச்சனை?

"உங்களுக்கு போன் பண்ணி சொல்லலாம்னு கூப்பிட்டேன். நீங்க இல்லை!"

"நான் இல்லை தெரியுது. எதுக்காக கூப்பிட்டே சொல்லு?"

"நிச்சயதார்த்தம் ஆய்டுத்து!"

"இதைச்சொல்லவா கூப்பிட்டே?"

"எனக்கு கல்யாணத்தில் இஷ்டமில்லை."

"இஸ்டமில்லைன்னா உங்க அப்பா, அம்மாகிட்ட சொல்லு."

"சொல்ல தைரியமில்லை எனக்கு."

"அப்படியா? பையன் பேரு என்ன சொன்னே?"

"சுரேஷ்!"

"விலாசம்"

"அதெல்லாம் அப்பாவுக்குத்தான் தெரியும்"

"எங்கே வேலை செய்யறான்?"

"அமெரிக்காவில்!"

"இந்த விவரம் போதும் அனிதா, கவலையை விடு... நான் புதன்கிழமை அமெரிக்கன் விஸிட்டை கான்ஸல் பண்ணிட்டு வந்துர்றேன். அதுக்குள்ள எல்லாம் செட்டில் பண்ணிடலாம்."

"அப்படின்னா?"

"விவரம் கேக்காதே... எங்கிட்ட சொல்லிட்ட இல்லை... உன் ப்ராப்ளம் முடிஞ்சு போச்சு!"

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"எனக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லை... மேலே படிக்க ஆசை மிஸ்டர் வைரவன்!"

"அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். எங்கிட்ட சொல்லிட்ட, பிரச்சனை தீர்ந்துப் போச்சு அனிதா... எப்பவாவது உங்கிட்ட சொல்லியிருக்கேனா.. ஐ லவ் ய அனிதா! லவ் யு, லவ் யு, லவ் யு! ஒவ்வொரு 'லவ் யு'வும் இத்தாலிலேர்ந்து உனக்கு வருது... ஒரு வார்த்தைக்குச் சுமார் ஆயிரம்ரூபாயாவது மதிப்பிருந்தா சரி...!"

ஃபோனை வைத்ததும் 'என்ன காரியம் செய்து விட்டோம்' என்று பிரமிப்பாக இருந்தது. "என்னம்மா... பேசியாச்சா? யாரு ஃபாரின் பார்ட்டி?" என்றார் உசேனியா ஸ்டோர்ஸ் ஜமால்.

"தெரிஞ்சவங்க!"

"மாப்பிள வூட்டுக்காரங்களா?"

அனிதா மறுபடி அறைக்கு வந்தபோது குழப்ப நிலையில் இருந்ததால் புத்தகம் படிக்க முடியவில்லை... ஜன்னல் காட்சிகள் சுவாரஸ்யமாக இல்லை. இனம்புரியாத பயம்! தன் சலுகைகளின் எல்லைகளை மீறிவிட்டோமோ என்கிற கவலை ஆக்கிரமித்துக் கொண்டது. அம்மா, அவளுடைய தங்க வளையல்களை பாலீஸ் போட கழற்றிக் கொடுக்கச் சொன்னாள். தோடு பண்ணக் கொடுத்திருப்பதாகவும் சொன்னாள்.

"பெரிசா இல்லாட்டாலும் உன் காதுக்குப் பாந்தமா இருக்கும். தோஷமில்லாத வைரமா பார்த்து சீதாதான் ஆர்டர் கொடுத்திருக்கான். சுகி, கேட்டுக்கோ... ஏதோ உங்க ரெண்டு பேருக்கும் பண்ணாப் பலதான்மா எல்லாமே பண்றோம். டெல்லிக்கு கடுதாசி எழுதறப்போ சொல்லிடு! இவளுக்கு எதும் பெரிசா பண்ணலை... என்ன... ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்தில அமெரிக்க மாப்பிளையா கெடச்சிருக்கார். உங்களுக்கெல்லாம் வரன் பாக்கறப்ப இத்தனை பேர் அமெரிக்கா போகலை!"

"அய்யோ அம்மா... யாருக்கும் மனவருத்தமில்லை. எல்லாருக்கும் சந்தோஷம் தான்."

"அப்புறம் பேச்சு வரக்கூடாது பாரு. நான் என் பெண்களுக்குள்ள வித்தியாசமே பாக்கறதில்லை. மூணு பேருமே எனக்கு ஒண்ணுதான்" என்று அம்மா எதற்கோ அழ ஆரம்பித்தாள்.

"சரிம்மா... சரிம்மா... இப்ப யாரு கம்ப்ளெய்ண்ட் பண்ணா?"

இந்தச் சம்பாஷணை அனிதாவக்குச் சிரிப்பாக இருந்தது.

மாப்பிள்ளை சுரேஷ் அந்த வாரம் தினம் அவளுடன் சினிமா போக விண்ணப்பித்தான். 'நிச்சயம்தான் ஆகிவிட்டதே' என்கிற சலுகையுடன் அம்மா, ஜிம்ப துணையடன் ஒரு தடவை அனுப்பினாள். ஜிம்பு நடுவில உட்கார, அனிதா இந்தப் பக்கமும் சுரேஷ் அந்தப் பக்கமும் உட்கார்ந்து கொண்டிருக்க... ரஜினிகாந்த் சேஷ்டைகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ஜிம்ப. சுரேஷ் அடிக்கடி அவள் பக்கம் திரும்பி முத்தமிடுவது போல் உதடுகளைக் குவிப்பது சிரிப்பாக வந்தது.

மதுவின் அறைக்குச் சென்று கொஞ்ச நேரம் 'வாக்மன்'னில் இந்தி பாட்டுகள் கேட்டாள்.

"என்ன அனி... கல்யாணம் நிச்சயம் ஆயிருச்சில்லே... இப்ப எப்படி ஃபீல் பண்றே? பாஸ்போர்ட், விசா எல்லாம்அப்ளை பண்ணிட்டியா?"

"அதெல்லாம் தெரியாது மது... அது எதும் அவ்வளவு சுலபமில்லைன்னு சொல்வாங்க!"

"பம்பாய் ஒர்லில பாஸ்போர்ட் ஆபீஸ் இருக்கு. காலைல போய் அங்கே பார்த்தா பம்பாய் நகரமே வெளிநாடு போறாப்ல க்யூ நிற்கும்!"

"மது, ரொம்ப குழப்பமா இருக்கு!"

"என்ன குழப்பம்?"

"பண்ணிக்கிறதா வேண்டாமான்னு."

"கடவுளே! நிச்சயதார்த்தம் பண்ணிட்டு, புடவை மோதிரம் எல்லாம் வாங்கிக்கிட்டு.. இப்பப் போயி காலம் கடந்து இப்படிச் சொல்றியே..? நீ கடந்து வந்த பாலங்களை எல்லாம் எரிச்சாச்சு."

"இப்ப இந்தக் கல்யாணத்திலிருந்து தப்பிக்கணும்னா நான் என்ன செய்யணும்?"

"நான்தான் சொன்னேனே ஓடிடுரன்!"

"சே.. அதுக்கெல்லாம் எனக்குத் தைரியம் இல்லை... உசேனியா ஸ்டோர்ஸ்க்கு மேல போகமாட்டேன்... சிம்ப்பிளா ஏதாவது சொல்லேன் மது..!"

"பாரு.. நீ நல்லா மாட்ன! பேசாம கல்யாணம் பண்ணிக்கிட்டு நியூயார்க் போய் பிள்ளை பெத்துக்க! அதான் விதி உனக்கு. இல்லாட்டி... வைரவன்ட பேசேன்!"

"போன்ல பேச முயற்சி பண்ணி பார்த்தேன். இத்தாலி போயிருக்கிறதா சொன்னாங்க!"

"அப்படியா? அவர் இருந்தா ஏதாவது யோசனை சொல்லிருப்பாரு. அவரை நான் தாஜ் ஓட்டல்ல என் ஃப்ரெண்டு மூலம் 'கேட் க்ராஷ்' பண்ணிட்டேன் தெரியுமா? 'பார்ட் டைமா வேலை ஏதாவது வேணும்னா வா'ன்னு சொல்லிருக்காரு. ஹி இஸ் ஸோ ஸ்வீட் அந்தாளைத்தான் எப்படியாவது நான் வசியம் பண்ணணும் அனி... அதுக்காக தாயத்து, கியத்துன்னு யோசிச்சுக்கிட்டிருக்கேன். படிச்சா அப்படிப்பட்ட ஆசாமியைப் படிக்கணும். அவங்க வீட்டு நாய்க்குக்கூட மாருதி கார் தெரியுமில்லை...?"

[அனிதா வருவாள்...]

# பாப்பா முரசு சிறுகதை

# ஒரு பொற்காசு கடன்

ஒரு நாள் முல்லா மிகவும் சந்தோஷமாக இருந்தார். தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்து, தன் வீட்டிற்கு வந்திருந்த உறவினர்கள் மத்தியில் தன்னைப்பற்றித் தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது முல்லாவைத்தேடி பக்கத்துத் தெருவில் இருப்பவன் வந்தான்.

"முல்லா எனக்கு ஒரு பொற்காசு



கடன் வேண்டும். ஒரு வாரத்தில் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றான்.

அந்த மனிதனுக்கு கடன் வாங்குவது தான் வேலை. ஆனால் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கமாட்டான்.

அவனைப் பற்றி முல்லாவுக்கு நன்கு தெரியும். வேறு சமயமாக இருந்தால் அவனைத் திருப்பி அனுப்பியிருப்பார். உறவினர் முன்னிலையில் இவ்வளவு நேரமும் தம்பட்டம் அடித்து விட்டு, காசு கொடுக்காவிட்டால் நன்றாக இருக்காது என்று அவனிடம் ஒரு பொற் காசைக் கொடுத்தார்.

கொடுத்தகாசு திரும்பி வரப்போவதில்லை என்று நினைத்துக் கொண்டு இருந்து விட்டார் முல்லா ஆனால் ஒரு வாரம் கழித்து கடன் வாங்கியவன் முல்லாவிடம் ஒரு பொற்காசைத் திருப்பிக் கொடுத்தான்.

முல்லாவுக்கு ஒரே ஆச்சரியம்.

ஒரு வாரம் சென்றிருக்கும், மறுபடியும் அந்த ஆள் முல்லாவைத் தேடி வந்தான்.

"முல்லா எனக்கு 50 பொற்காசுகள் கடனாகக் கொடுத்துவிட்டால் ஒரு மாதத்தில் திருப்பித் தந்து விடுவேன்" என்றான்.

இம்முறை முல்லாவிடம் கடன் வாங்கிக் கொண்டு ஏமாற்றிவிட அவன் தீர்மானித்தான். அதற்காகத் தான் முதலில் வாங்கிய கடனை சொன்ன கெடுவிற்குள் திருப்பிக் கொடுத்தான்.

முல்லாவுக்கு அவனது கபடத்தனம் புரிந்துவிட்டது.


"உன்னை நம்பிப் பணம் தர மாட்டேன்" என்றார் முல்லா.

இதைக் கேட்டதும் அவன்.

"முல்லா! முன்பு தங்களிடம் வாங்கிய பொற்காசை நான் சொன்னபடி ஒரு வாரத்தில் திருப்பித்தரவில்லையா? இப்போது மட்டும் ஏன் நம்ப மறுக்கிறீர்கள்?" என்றான்.

"ஆம். முன்பு நீ கேட்ட பணத்தை நான் கொடுத்தபோது, வழக்கமாக எல்லாரிடமும் கடன் வாங்கி விட்டு ஏமாற்றுவது போல் என்னையும் ஏமாற்றுவாய் என்று நினைத்தேன். ஆனால் நீயோ ஒரு வாரத்தில் திருப்பித் தந்து என் நம்பிக்கையை நாசமாக்கி விட்டாய். என் நம்பிக்கையை நாசமாக்கிய உன்னை எப்படி நம்பிக்கடன் கொடுப்பேன்?" என்றார் முல்லா.

முல்லாவிடம் தனது பாச்சா பலிக்காமல் போகவே, வெட்கித் தலைகுனிந்தபடி சென்றான் கடன் கேட்டவன்.





1 முதல் 19 வரையுள்ள புள்ளிகளை இணைத்தால் இந்தக் குழந்தை பயப்படுவதற்கான காரணம் என்னவென்று தெரியும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **29.09.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **413**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 411

**பரிசுக்குரியவர்:**
ச. சுதர்சன்,
புனித சவேரியார் மகா வித்தியாலயம், திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| என். சமீனா,<br>இராஜவல தமிழ் தேசிய கல்லூரி, திகன. | சறூக் பாத்திமா ஷயீரா,<br>குட்டிக்கராச்சி கிண்ணியா-05. |
| அ.ஏ. காந்தரூபன்,<br>மக்கள் வங்கி ஒழுங்கை, செங்கலடி. | க.யோகசாந்தினி,<br>தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| எஸ். கவிதா,<br>இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | எம். ஷாமில் கைஸர் தீன்,<br>புனித சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. |
| கே. சகானா,<br>பெல்பாஸ்ட் சர்வதேச பாடசாலை, திருமலை. | பிரபு செல்வநாதன்,<br>சென் மாகிரட் தமிழ் வித்தியாலயம், உடப்புஸல்லாவ. |
| ஜி. வாசுகி,<br>ராமகிருஷ்ண மத்திய கல்லூரி, கலஹா. | இரா. விகாஷினி,<br>ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். |

# பாம்புகள் பலவிதம்

★ உலகில் சுமார் 2500 வகையான பாம்புகள் இருக்கின்றன. அதில் சுமார் 100 வகையான பாம்புகளுக்கு மட்டுமே கொடிய விஷத்தன்மை உண்டு.

★ எமது அண்டை நாடான இந்தியாவில் 250 வகையான பாம்புகள் உள்ளன. இவற்றில் சுமார் 4 வகையான பாம்புகளுக்கு மட்டுமே கொடிய விஷத்தன்மை உண்டு.

★ இந்தியாவில் காணப்படும் நாகப்பாம்பு வகையைச் சேர்ந்த ராஜநாகம் மிக நீளமான பாம்பு ஆகும். இதன் நீளம் சுமார் 20ல் இருந்து 40 அடிவரை இருக்கும். இது அதிக விஷத்தன்மை கொண்டது.

★ உலகிலேயே அதிக விஷமுள்ள பாம்பு அவுஸ்திரேலியாக் காடுகளில் உள்ள பாலைவனப் பாம்பு ஆகும். இதன் விஷத்தில் இலட்சத்தில் ஒரு பங்கு விஷத்தால் மரணம் நேரிடும்.

★ அமெரிக்கக் காடுகளில் காணப்படும் 'காபூர் வைப்பர்' என்ற பாம்புதான் நீளமான பற்களைக் கொண்ட பாம்பாகும்.

★ மலைப்பாம்புகள் 50 முதல் 100 முட்டைகள் வரை இடும். மேலும் மலைப்பாம்புகளுக்கு விஷம் கிடையாது.

★ உலகிலேயே மிகப் பெரியபாம்பு 'அனகொண்டா' ஆகும். இது சுமார் 50 அடி நீளம் கொண்டதாகும். அனகொண்டா குட்டிகளையே ஈனும்.

★ பாம்பின் உமிழ்நீரே விஷமாக மாறுகிறது. மேலும் பாம்பின் பற்கள் இரையைக் கடிக்க உதவுவதில்லை.

★ பாம்புகள் பல மாதங்கள் வரை உணவில்லாமல் உயிர் வாழக் கூடியவை.

# விசித்திரத் தீர்ப்பு



சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு 1840ம் ஆண்டு நிறையப் பணம் தேவைப்பட்டது. தனது உடலை அறுத்து ஆராய்ச்சி செய்ய பயன்படுத்துமாறும் அதற்குப் பதிலாகப் பணம் கொடுக்கும்படியும் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டார். இதில் விசித்திரம் என்னவென்றார், ஆராய்ச்சி முடிந்ததும் தன் உடலை மீண்டும் பெற்றுக்கொள்வதாகக் கூறினால் இதனால் பிரச்சனை ஏற்பட்டு நீதிமன்றத்திற்கு இந்த வழக்குபோனது. நீதிமன்றமும் பணத்திற்காகத்தானே உடலைத் தருகிறார். ஆராய்ச்சி முடிந்ததும் அவரிடமே உடலைக் கொடுத்துவிடும்படி விசித்திரமான தீர்ப்பைக் கூறியது.

கிரேக்க தத்துவஞானியான சோக்கிரட்டீஸை கி.மு. 339ம் ஆண்டு விஷமருந்தித் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.





ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹீயூபாட் என்பவருக்கு 1863ம் ஆண்டு ஒரு கொலைக் குற்றத்திற்காக வாழ்நநாள் முழுவதும் சிறையில் கழிக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஹீயூபாட் 21 வருடங்களை சிறையில் கழித்த பின், அவருடைய வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது ஹீயூபாட் கொன்றதாகக் கூறப்பட்டவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டது.



# சிகரம் ஏறிச் சாதனை

நியூஸிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியும் நேபாள நாட்டைச் சேர்ந்த டென்சிங் நார்கே ஆகிய இருவரும் தான் எவரெஸ்ட் சிகரத்தில் முதல் முதலில் ஏறிச் சாதனை படைத்தவர்கள்.

1953ம் ஆண்டு மே மாதம் 29ம் திகதி எவரெஸ்ட் சிகரத்தில் ஏறினர். 'சாகர்மாதா' என்று நேபாளிகளாலும் 'உலகைக் காப்பாற்றும் கடவுள்' என்று திபெத்தியர்களாலும் அழைக்கப்படும் எவரெஸ்ட் சிகரம் 8848 மீட்டர் உயரம் கொண்டது.

நேபாளத்தலைநகர் காட்மண்டுவில் இருந்து புறப்பட்ட ஹிலாரி-டென்சிங் இருவரும் எவரெஸ்ட் சிகரத்தில் 15 நிமிடங்கள் நின்றனர். அங்கு நேபாள, இங்கிலாந்து மற்றும் ஐக்கிய நாடுகள் கொடிகளை அவர்கள் ஏற்றினார்கள்.

# வெப்தளம்



ஜெ. சூரியன்

"ஹாய்!"

ஏதோ சிந்தனை வசப்பட்டவளாக அந்த பிரபல மான கடைத்தெரு வழியே நடந்து கொண்டிருந்த ஷோபனாவின் தோளில் விழுந்த கையழுத்தத்தில் திடுக் குற்று விழித்த ஷோபனா சடுதியில் மலர்ந்தாள்.

"ஏய்! நீ.. நீயாடி..?!"

"என்ன நீயாடி, நானேதான். அதே அம்ருதாதான். எப்போ இங்கே வந்தாய்? ஆமா! என்ன அப்படியொரு ஆழ்ந்த யோசனை. எதிரே வர்றவங்களையும் கவனிக் காது..?"

"த்சொ. அது. அது ம். ஒண்ணுமில்லை."

"இந்தா நீ என்னோட நீண்ட நாளைய நண்பி. உன்னை எனக்குத் தெரியாது. துளியென்றால் பெரு வெள்ளமெடுத்த மாதிரி சிந்திச்சு, சிந்திச்சே அடியுண்டு போறவள்."

"வெள்ளத்தோடுதான் அள்ளுண்டு போறாப்போல வந்து நிற்கிறேன்!" சலித்தாள் ஷோபனா.

ஒருகணம் நிதானிந்த அம்ருதா மணிகட்டைப் பார்த்தாள்.

"ஷோபனா எண்ட வேலைக்கு நேரமாகிறது. இந்தா என்னுடைய. விஸிட்டிங்கார்ட். பத்து மணி பிந்தி நீ எப்ப வேணுமானாலும் வந்து பார்க்கலாம். வருகிறாய் சரியா." அம்ருதா தந்துவிட்டுப்போன கார்டைப் பார்த் தாள். கொழும்பு நகரில் பிரபலமான கொமினிகேஷன். கொம்பியூட்டர் சேர்ந்த நிறுவனமொன்றின் முகவரி இருந்தது.

மணி மாலை ஐந்து.

உள்ளே நுழைந்த ஷோபனா 'திரு.திரு'வென முழித்த படி சுற்றிப் பார்த்தாள். அம்ருதாவைக் காணவில்லை. ரிஸப்ஷனில் கேட்டாள்.

தனியானதொரு பகுதியில் கொம்பியூட்டர் முன்னால் அம்ருதா வேலையில் மூழ்கியிருப்பது தெரிந்தது. விஸிட்ட ஸுக்காக போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

சற்று நேரத்தில் அம்ருதா வந்தாள்.

"நேரம் பார்த்துத்தான் வந்திருக்கிறாய். இனி அதிகம் வேலையிருக்காது. வா. ஏதாவது சாப்பிடு!"

தன் பகுதிக்கு அழைத்துப் போனாள். எதிரில் உட்கார்ந்த ஷோபனாவை பார்த்தாள். நிறைய குழப்பமாக தெரிந்தாள் அவள்.

"என்ன ஷோபனா எதுக்காக இப்படி குழப்பிப் போயிருக்கிறாய். எதுவானாலும் வெளியே சொல்லு. அப்பதான் ஆராவது செய்ய முடியும்."

நண்பியை ஊடறுத்துப் பார்த்தவண்ணம்,

"எனக்குக் கல்யாணம். வெளிநாட்டு மாப்பிள்ளை!" என்றாள் ஷோபனா.

"அடி சக்கை. சந்தோஷ வாழ்த்துக்கள். அதுக்கேன் இத்தனை சோகமாக இருக்கிறாய்."

"எனக்குப் பிடிக்கவில்லை."

"என்ன ஊரிலிருந்து கொழும்புவரை வந்து போவ தற்கும் தயாரான பின்னர் பிடிக்கவில்லை என்றால்.. முதலிலேயே சொல்வதற்கு என்ன?"

"என் வார்த்தையை வீட்டிலுள்ளவர்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அதோடு குடும்ப நில வரம். நாட்டின் தற்போதைய நிலையில் பெண்களாகிய நாம் அவர்கள் மடியில் கனக்கும் கன்னிவெடிகள். எங்காவது எவர் கையிலாவது ஒப்படைத்தால் போதும் என்கிற தவிப்பு. அவர்களை மனம் நோகவும் முடிய வில்லை." வேதனையுடன் கூறிய ஷோபனாவின் விழிகளில பயவரிகள் பளிச்சிட்டன.

"சரி உங்கப்பா. அண்ணன் இவர்கள் உனக்கு கெடுதல் பண்ணமாட்டார்கள். நல்ல இடமாகத்தானே பார்த்திருப்பார்கள்."

"கைநிறைய காசு. காசுதான் வாழ்க்கையா?"

"ஏய். என்ன வேதாந்தமா? 'உயிரிலும் மேலாக காதலிக்கிறேன்' என்பவர்களும் பணமென்றதும் உயி ரைக் காப்பாற்றணுமென்று சொல்லி புரண்டு போகி றார்கள். உண்மையில் பணம்தான் மனிதனை நிர்ண யிக்கிறது. தரம் பிரிக்கிறது. யாரென்பதை சமயத்தில் புரியவைக்கிறது."

"தப்பு அதுக்கு மேலேயும் ஒன்றிருக்கிறது. வாழ்க்கை. அதை வாழ பணம் மட்டும் போதாது மனசு வேணும்!"

அம்ருதா புதிராகப் பார்த்தாள்.

"என்னதான் நினைச்சு குழம்புகிறாய். விவரமாகச் சொல்லு?"

"அம்ருதா இன்றைக்கு எத்தனை பெண்கள் வெளி நாட்டு மாப்பிள்ளைகளைக் கல்யாணம் செய்து சீர ழிந்து போய் நிற்கிறார்கள் தெரியுமல்லவா.?"

"ஒரு சிலருக்கு நேர்ந்ததுக்காக எல்லோரையும் சந்தேகிக்கிறாயா தப்புடி"

"ஏன் அந்த ஒரு சிலரில் ஒருத்தியாக நானும் இருந்துவிட்டால்..?"

"ச்சே. அபசகுனம் மாதிரி பேசாதே!" சட்டென்று வெட்டினாள் அம்ருதா.

"இல்லையடி, எத்தனை பேருடைய வாழ்க்கை முறிந்து முடமாகிப் போய்விட்டதை பார்க்கிறோம். தெரியுமா? வெளிநாடுகளில் பணம் சேர்த்து குடியும், குடித்தனமுமாக வாழ்பவர்கள். வேண்டாத வியாதிகளை யும் சேர்த்து விடுகிறார்கள். சொந்த நாட்டுக்கு உறவின ரைப் பார்க்க நீண்டகால விடுமுறையென்று வரும்போது தான் பிரச்சனைகளை ஆரம்பிக்கிறார்கள். இங்கு தங்கும் போது துணை தேவைப்படுகிறது. பணமிருக்கும் திமிர். யாரையாவது பிடித்து, பெரிதாக எதுவும் எதிர்பார்க்காத பரோபகாரிபோல பெண்பார்த்து, சட்டுப் புட்டென்று கல்யாணத்தை முடிப்பது. ஒரு மூன்று, நான்கு மாசத் துக்கு சுற்றி, அநுபவித்து ஆசையைத் தீர்த்துக் கொண்ட தும் போய் விசா ஒழுங்கு செய்து அழைத்துக் கொள்ளு கிறேன்' என்று கையைக் காட்டிவிட்டுப் போய் விடு கிறார்கள். போனது போனதுதான். அவள் வாழ்க்கையை இழந்து, வாழாவெட்டியாக தன்னை அழித்துக் கொள்ள வேண்டியதுதான்.!

மூடி மூடி வைத்திருந்த முடிச்சை அவிழ்த்துக் கொட்டினாள் ஷோபனா ஒரே மூச்சில்.

"அம்மாடி நீ. நீ ஷோபனாவா. இத்தனை தெரிஞ்சு வைச்சிருக்கிறாயே." அம்ருதா அவள் சொன்னவற்றின் ஆழ்ந்த பொருளில் ஈர்க்கப்பட்டவளானாள்.

"தெரிஞ்சு வைச்சு என்ன செய்ய முடிஞ்சுது?"

"ம். நீ சொல்றதும் இப்ப பரவலாக நடக்கிற சம்ப வங்கள்தான். உனக்கு ஞாபகமிருக்கா நிர்மலாவை. அவளை கல்யாணம் பண்ணி அழைத்துப் போனவன் அங்கே போனதும் கொடுமைப்படுத்தத் தொடங்கி விட்டான். காரணம் முதல் மனைவி அந்தப் பிரெஞ்சுக் காரி வந்ததுதான். பொறுக்க முடியாத நிர்மலா 'டைவர்ஸ்' பண்ணிக்கொண்டாள். நாட்டின் கெடுபிடிகளின் மத்தியில் இதுவும் ஒரு சாபக் கேடாகிக் கொண்டிருக்கிறது."

"அம்ருதா அதனால்தான் நானும் பயப்படு கிறேன். இப்படிப்போய் அலையுண்டு. அழிஞ்சு போய் விடுவதிலும், கூழோ கஞ்சியோ.உள்நாட்டுக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டால் வாழ்க்கையை வாழ்ந்ததாக திருப்தி இருக்கும். பணத்தாசை பகட்டு நம்மவர்களை கொஞ்சமும் சிந்திக்க விடுறதில்லை."

ஷோபனாவின் பொருமலை கவனித்த அம்ருதா வெடுக்கென்று கேட்டாள். "அப்போ யாரையாவது விரும்புகிறாயா இங்கே.?"

"ச்சே. ச்சே. அதுமாதிரி எதுவும் கிடையாது. வாழ்க்கையை நிம்மதியாக வாழணும். கேவலம் அவ மானங்களை தெரிந்தும் ஏன் வலிய வாங்கி அவஸ்தைப் படணும்?"

"இந்த வெளிநாட்டு மாப்பிள்ளை வேண்டாம் என்பதில் தெளிவாகத்தானிருக்கிறாய்."

"ஆமா"

"மாப்பிளை இப்போ எங்கே?"

"ஊரிலை அம்மா சகோதரிகளுடன் அடுத்த வார ம் வருகிறார்."

"பெயர் விபரம் வெளிநாட்டு அட்ரஸ் இருக்கா."

"இருக்கு!"

"சரி கொஞ்சம் இரு!"

ஷோபனா கொடுத்த விவரங்களை கொம்பியூட்டரில் பொருத்தி டிஸ்க்கைப் போட்டாள் அம்ருதா. வெப் தளத்தில் தேடினாள். சுவிஸ் எம்பஸி தெளிவாகியது. 'பட், பட்'டென்று விரல்கள் பட்டன்களில் ஓடி ஓடி நகர்ந்தன. விவரங்களை திரட்டத் திரட்ட அவளது முகம் இருண்டுபோனது.

'டக்' என்று முற்றுப் போட்டு, டிஸ்க்கை எடுத்தாள். திரட்டிய விபரத்தாளை ஷோபனாவின் கரத்தில் வைத்தாள். பார்த்த ஷோபனாவுக்குள் நடுக்கம் எழுந்தது.

"இது. இது எப்படி. உண்மையானதா நம்பலாமா?"

"நம்பலாம். அத்தனையும் அச்சுப்பிழையற்ற உண்மை. இம்மாதிரியானவர்களால் வெளிநாட்டு அர சாங்கங்களுக்கு நிறையவே தலையிடி. பணவிரயம், அவப்பெயர்கள். சுகாதார சீர்கேடுகள். இதனால் அவர் கள் எம்பஸி மூலம் சொந்த நாட்டுக்கு திரும்புவதற்கு அனுமதி கோருபவர்களிடம் முழு விபரங்களையும் கேட்கிறார்கள். கொடுத்தேயாகணும். அதை வைத்து அலசி ஆராய்ந்து முழு டீற்றெயிலையும் வெப் தளத்தில் பதியவைத்த பின்னர் விசாவை வழங்குகிறார்கள். இது தெரியாத நம்மவர்கள். இங்கே வந்து தம் வாண வேடிக் கையை காட்ட நினைக்கும் போது புஸ்வாணமாகிப் போக வைக்கிறது. அந்த எம்பஸிகளின் இப்புதிய முறை. இனி இவர்களைப் போன்றவர்களது ஜம்பம் பலிக்காது. "இந்தா இதைக் கொடு உங்கப்பாவிட்ட. அவர் அந்த விலாசத்தில் கேட்டால் சொல்லப் போகிறாள் மாப்பிள்ளையின் முதல் மனைவி" என்றாள் அம்ருதா.

நன்றி சொல்ல வார்த்தையின்றி தவித்த ஷோபனா மானசீகமாக தொட்டுக் கும்பிட்டாள் அந்த கொம்பியூட் டரை. ■

# தாலி



ஆரையம்பதி- பூ.இதயரெத்தினம்

நிலாவின் வெளிச்சம் வாசலெல்லாம் பரவிக்கிடக்க, குடிசையின் முற்றத்தில் குந்தியிருந்த கவிதாவின் மனதில் சோக இருள் சூழ்ந்து கிடந்தது. தன்னருகே பாயில் படுத்திருக்கும் மகள் சாந்தினியை துணிகொண்டுவந்து போர்த்திவிட்டு, கன்னத்துக்குக் கைகொடுத்து கவலையில் மூழ்கியிருந்தாள் கவிதா. அதே தெருவிலிருக்கும் கண்மணியின் கல்யாண வீட்டிலிருந்து ஒலிபெருக்கியில்

"நிலவே நீதான் யாருக்கு சொந்தமடி..." பாடல் காற்றலையில் தவழ்ந்து வர, அப்பாடல் தனக்காகவே ஒலிப்பதாக எண்ணியவளின் விழிகளில் கண்ணீர் சுரந்தது.

ஆம்! அவளுக்கு யார் சொந்தம்..? சின்னவயதிலேயே தந்தையை இழந்தவள். தாயின் அரவணைப்பிலேயே வாழ்ந்து குமரியாகி காதலித்தவனையே கைபிடித்து இல்லறத்தில் கால்பதித்த இரண்டே மாதத்தில் 'இனி நான் உனக்கெதற்கு' என்று அவள் அம்மா இந்த உலகத்தையே விட்டுப்போக ஓயாது அழுதுபுரண்டவள், அன்புக் கணவரின் ஆறுதல் வார்த்தையிலும் அர வணைப்பிலும் தேறுதல் அடைந்தாள்.

ஆண்டொன்று கடந்தபோது அழகான பெண் குழந்தையொன்றுக்கு தாயாகி கணவனும் மனைவியுமாய் ஆனந்தத்தில் திளைத்து தாலாட்டுப்பாடி குழந்தையை தூங்க வைக்க போட்டி போட்டுக்கொண்டு போராடிய சுகம் நீண்ட நாள் நிலைத்திருக்கவில்லை. ஏழைகளின் வாழ்வோடுதான் இறைவனுக்கும் விளையாட்டு. பக்கத்து ஊருக்கு மேசன் வேலைக்கு போய்வருவதாக கூறி புறப்பட்டுப்போனவனை மறுநாள் காரில்தான் கொண்டு வந்து இறக்கினார்கள் பிணமாக. மோதலின் இடையில் அகப்பட்டு இறந்ததாக சொன்னார்கள் பாதகர்கள்.

யாரிடம் நீதி கேட்பது? அவளும் ஒரு கண்ணகியாய் இருந்திருந்தால் போரரக்கன் பெயர் சொல்லி தன் கணவனை பலி கொண்ட இந்தப் பாதகர்களுக்காய் பாரெல்லாம் எரித்திருப்பாள். ஆனால் பாவம் அவள். தாலியறுத்து, பொட்டழித்து, பூச்சூட மறந்து, விதவைப் பட்டம் சுமந்து வாழத்துணிந்த புது அத்தியாயத்தில்தான் அவள் இந்த சமூகத்து போலிமுகங்களை புரிந்து கொள்ள ஆரம்பித்தாள். அன்புக் கணவனின் நினைவி லேயே காலமெலலாம் வாழ நினைத்தவளுக்கு களங்கம் சுமத்தும் காரியங்கள்தான் நடந்தேறின.

மங்கள நிகழ்வெதையும் மறைந்து நின்று பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டாள். ஆதரவு காட்டும் ஆண்கள் யாரிடமும் சிரித்துப் பேசப்பயந்தாள். ஆசைக்ககூட அணிகலன் ஏதும் அணியமறந்தாள். புதுச்சேலை கட்டிக்கொண்டால் கூட புறுபுறுத்தார்கள் பக்கத்துவீட்டுப் பழசுகள்.

"புதுப்பொண்ணு போறாவு. புருசன தொலைச்ச பின்னும்" என. வறுமையென்று வாயிழந்து யாரிடமாவது கையேந்தினாலும் வசை வம்பு கூறும் கூட்டம் ஒன்று. கூலிவேலை செய்யப்போனால் முதலாளி முதலைகளின் வக்கிரப்பார்வையால் சுட்டெரிக்கப்பட்டாள். அது போதாதென்று,

"அவனோட இவளுக்கு தொடர்பாம்" இது கூட வேலை செய்யும் குரங்குக் கூட்டத்தின் பேச்சு. வேலியே பயிரை மேய்கின்ற இந்தக் காலத்தில் தாலி சுமந்த பெண்களும் பாதுகாப்பின்றி தவிக்கும்போது இளமையும் அழகும் கொண்ட கவிதாவின் நிலை எப்படியிருக்கும். அவள் மட்டும் என்ன செய்வாள். தன் தலைவிதியை நொந்து கொண்டவள் மனதுக்குள் அழுதாள். கடவுள்களையெல்லாம் திட்டித் தீர்த்தாள்.

வருடங்கள் இரண்டு ஓட சாந்தினிக்கும் வயது ரெண்டாக,

"அப்பா எங்கம்மா?" என அவள் பிராண்டத் தொடங்க பதில் சொல்லத்தெரியாது தவித்தவள் வேதனைகளின் முடிவாய் தன் வாழ்வையே முடித்துக் கொள்வோமென நினைத்தபோதுதான்,

"உன் வாழ்வில் விடியல் உண்டாக்குகிறேன். உன்முடிவை மாற்றிக்கொள்" என உறுதியளித்தான் ராமன். அவன்கூட பகுதி யுத்தத்தின் கரங்களுக்குள் சிக்கி உறவுகளையிழந்து வாழ்வை தொலைத்து அகதிப்பட்டத்தோடு ஐந்து வருடங்களுக்கு முன் இந்த ஊரில் கால்பதித்தவன் அவன். வார்த்தைகளில் உறுதி தெரிந்தாலும் கவிதாவின் மனதில் நம்பிக்கை ஏற்பட வில்லை. விதவைக்கும் மறுவாழ்வு கொடுத்து தாலி கட்டி இவள்தான் என் தாரமென சமூகத்துக்கு காட்ட திராணியற்று நிற்கும் ஆண்கள் கூட்டத்தில் அவள் யாரையும் நம்புவதற்கு தயாராக இல்லை. ராமனின் வற்புறுத்தலாலும் தன்கொரு பாதுகாப்பு தேவையென்ப தாலும் அவள் முடிவுக்கு சாதகமாய் பதில் சொல்ல எண்ணியவள் "ராமன் உங்களோட தைரியத்த, எனக்கு மறுவாழ்வு கொடுக்க நினைச்ச உங்க தியாக குணத்த, பாராட்டுறன். உங்களப்போல பலபேர் இதே வார்த்தைய சொன்னாங்க. ஆனால் அதெல்லாம் கானல் நீராத் தான் போச்சி. இப்போ உங்ககிட்ட சொல்றன் உங்க மனைவியாக என்னய ஏற்றுக்கொள்ள விரும்பினா என் கழுத்துல மூணு முடிச்சுப்போட்டு இந்த சமூகத்துக்கு முன்னால உங்க மனைவி நான் என்கிற அந்தஸ்த கொடுங்க" அவள் கூறி முடிக்க,

"கவிதா அடுத்த தடவ சந்திக்க தாலியோடதான் வருவன்" என்று கூறிப்போன ராமனை அனுப்பிவிட்டு காத்திருக்கிறாள் கவிதா. தூரத்தே நாய்குரைக்கும் ஓசை கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டவள் வெளிப்பக்கமாய் பார்வையை செலுத்தினாள். தூரத்தே ராமன் வருவது மங்கலாக தெரிய இருள் சூழ்ந்திருந்த அவள் மனதில் தூரமாய் ஓர் ஒளிக் கீற்று தென்படுவது போலிருந்தது. தாலியோடு ராமன் வரும் இன்றைய நாள் திருமண நாள்தானே? ■

# பிழை



ஆரையம்பதி~சி.நாகேந்திரன்

உச்சி வெயிலில் தலையில் அடுப்பு மூட்டியது போலவே இருந்தது. ஒடுங்குவதற்கு அந்த வீதியில் மர நிழலும் இல்லை. மட்டக்களப்புக்கு செல்ல வந்த நான் வியர்த்து விறுவிறுக்க வீதியில் அவஸ்தைப்பட்டுக் கொண்டு நின்றேன்.

தனியார் வேன் ஒன்று வந்தது. கையை நீட்டி நிறுத்தினேன். அதற்குள் நிறையவே பிரயாணிகள்.

"ஏறுங்கண்ண இதில கொஞ்சப் பேர் இடையில இறங்கிடுவாங்க!" என்று கூறி என்னை ஏற்றுவதில் முனைப்பாக நின்றான் அந்த வேனின் நடத்துநர் பொடியன்.

'இந்த வெயிலில அவஸ்தைப் படுவதை விட இந்த நெரிசல் மேல்' என்று நினைத்துக் கொண்டு வேனில் ஏறிக்கொண்டேன்.

நெரிசலுக்குள் நெரிசலாக நின்றவாறு வேனின் பின் ஆசனப்பக்கம் திரும்பிப் பார்த்தேன். ஓர் அழகிய இளம் பெண்ணொருத்தி என்னைப் பார்த்து விட்டு, நான் அவளைப் பார்த்ததும், அவள் பார்வையை மறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அவளை பார்க்காது நானும் மறு பக்கம் திரும்பிக் கொண்டேன். அவளை மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும் போல் இருந்தது. மெல்ல அவள் பக்கம் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னை பார்த்து விட்டு, மீண்டும் மறுபக்கம் திரும்பிக் கொண்டாள்..

' யாராய் இருக்கும் என்னையே திரும்பத் திரும்ப பார்க்கிறாள். இதற்கு முதல் அவளைக் கண்டதில்லையே' என்று நினைத்துக் கொண்டு மீண்டும் அவள் பக்கம் திரும்பினேன். என்னைப்பார்த்துப் புன்னகை செய்தாள். அந்தப் புன்னகை என்னை மின்சாரம் தாக்கியது போலவேயிருந்தது.

'முன்னப்பின்னத் தெரியாத என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்' இவள் அந்த மாதிரியான ஆள் போல, அதுதான் இப்படிப் பல்லிளிக்கிறாள் மயக்கிப் போடலா மென்று' என்று எனக்குள் சொல்லிக் கொண்டாலும் என் மனம் அவள் பால் ஈர்ந்து விட்டது.

'மட்டக்களப்புக்குப் போகும் மட்டும் இவளோட நேரத்தை கழிச்சிடலாம். பிறகு இவள எங்க காணப் போறம்' என நினைத்தவாறு மீண்டும் அவள் பக்கம் திரும்பினேன். என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

ரஜனி ஸ்ரைலில் தலை முடியைக் கோதிவிட்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தேன். மீண்டும் புன்ன கைத்தாள். அந்தப் புன்னகை என்னை வசீகரித்து விட்ட சந்தோசத்தில் அவள் செய்த புன்னகை போலிருந் தது. மெல்ல நெரிசலுக்குள்ளாக நுளைந்து நுளைந்து அவளிருந்த ஆசனத்துக்குப் பக்கத்தில் போய்விட்டேன். அவளுக்குப்பக்கத்து ஆசனத்தில் ஒரு நடுத்தரப் பெண் அமர்ந்திருந்தாள்.

'இவ இறங்கிவிட்டால் அதிஷ்டம் தான்' என்று நினைத்துக் கொண்டேன். வேன் நாவற்குடாவால் போய்க் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் அவள் என்னைப்பார்ப்பதும், புன்னகைப்பதும் நான் அவளைப் பார்ப்பதும் புன்னகைப்பதுமாயிருந்தோம்.

"வேனை நிப்பாட்டுங்க?" அந்த நடுத்தர வயது பெண்ணின் குரல், வேன் நிறுத்தப்பட்டது. அவள் இறங்கிக் கொண்டாள். அவளுக்கு மனதுக்குள் நன்றி தெரிவித்தவாறு, அந்த ஆசனத்தில் அமர நினைத்தேன். தயக்கமாயிருந்தது.

அவளைப்பார்த்தேன். என்னைப்பார்த்துக் கண்க ளால் ஆசனத்தைக்காட்டினாள். அது அந்த ஆசனத்தில் அமரச் சொல்லும் சமிக்ஞை என்பதைப் புரிந்துகொண்டு, அவளில் உரசுவது போல் ஆசனத்தில் அமர்ந்தேன்.

'இனி என்ன பேச்சுக் கொடுக்க வேண்டியது தான்'. மனம் சொல்லிக் கொண்டது

"நீங்கள் எங்க போக?" என்றேன்.

"கிளாசுக்கு!" என்றாள். 'இப்படி எத்தனை பேர் சொல்லித்திரிகிறீர்கள் எங்களுக்குத் தெரியாதா?' எனக்குள் சொல்லிக் கொண்டேன். "நீங்கள் தங்கேஸ்வரனின் அண்ணன் தானே?" அந்த இளம் பெண் கேட்டாள்

"ஆமாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன் சற்று மௌனமாக இருந்த அவள் தயக்கத் துடன், "என்னைப்பற்றி அவர் உங்களிட்டச் சொல்ல வில்லையா. உங்களிட்டச் சொன்னவராம். நீங்க தானாம் எங்க காதலுக்கு வீட்ட சம்மதம் வாங்கித்தந்ததாம்!" என்றாள்.

சட்டென்று ஞாபகத் துக்கு வந்தது. தம்பி ஒரு பெண்ணைக் காதலிப்ப தாகவும், நல்ல ஒழுக்கமான வள் என்றும் பெண் வீட் டார்கள் விரும்பிவிட்டார்கள் அம்மாவிடம் சம்மதம் கேட்டுத் தரும்படி கூறியதும், அவளில் உரசுவது போலி ருந்த நான் சட்டென்று ஆசனத்தின் விளிம்புக்கு வந்து விட்டேன்.

"தம்பி உங்களைப் பற்றிச் சொன்னவன்" வேறு வார்த்தை பேச முடிய வில்லை. மனம் வேதனை பட்டுக் கொண்டது.

'சீச்சீ... ஒருவரை சரியாகப் புரிந்து கொள்ளா மல் எப்படியெல்லாம் கற் பனை பண்ணிவிட்டேன். என்னைப் பற்றி என்ன நினைத்தாளோ?' என்று எனக்குள் திட்டிக் கொண்டேன். அவளைப் பார்க்கவே வேதனையாக இருந்தது.

"இங்க தான் இறங்க வேண்டும். நான் இறங்கு கிறேன்" எனக் கூறிவிட்டு மட்டக்களப்புக்குப் போகாது. இடையில் இறங்கிக் கொண்டேன். மற்றொரு வாகனத்தில் மட்டக்களப்பு செல்வதற்காக. ■

# ஓடாதே! ஒளியாதே!

அசத்தல் தொடர் 03

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

துப்பாக்கியைப் பார்த்து அதிர்ந்துபோய் நின்றிருந்தார் சந்திரமோகன்.

காரை ஓட்டி வந்தவன் சிரித்துக் கொண்டே வேனின் பக்கவாட்டில் "ஆல்வா ஆஸ்பிட்டல்" என்று எழுதியிருந்த ஸ்டிக்கரை சுரண்டினான். அந்த ஸ்டிக்கர் வாழைப் பழத்தோல் உரிந்து வருவதைப் போல சுலபமாக கழன்று வந்தது.

"இதெல்லாம் செட்டப் டாக்டர்! உங்களை இங்கே கூட்டிட்டு வர்றதுக்காக ஏற்படுத்தின செட்டப்."

சந்திரமோகன் பயப் பார்வை பார்க்க- அவன் தொடர்ந்தான்.

"ஆல்வா ஆஸ்பிட்டல்ல இருந்து பேசற மாதிரி நாங்கதான் ஃபோன் பண்ணினோம். உங்க பேஷண்ட் தேவநாதனுக்கு எபிலெப்சி எதுவும் இல்லை. அங்கே ஆஸ்பிட்டலல சுகமா படுத்திருக்கார்."



"எதுக்காக என்னை ஏமாத்தி இங்கே கூட்டிட்டு வந்தீங்க?"

"உள்ளே நடங்க. எங்க தலைவர் எல்லாத்தையும் விவரமா சொல்லுவார்."

அவன் பிஸ்டலை அசைத்து அவரை வழி நடத்தினான்.

மொசைக் படிகளைக் கடந்து செல்ல ஒரு ஹால் விரிந்தது. ப.வடிவில் ஸோபா, டி.வி. பெட்டி, ப்ளவர் வாஷ், லஸ்தர் விளக்கிலிருந்து மங்கலான வெளிச்சம்.

அந்த ஹாலைத் தாண்டி சில அறைகளை ஊடுருவிக் கூட்டிப்போனான்.

சாத்தியிருந்த அந்தக் கதவின் முன்னே நின்று அங்கிருந்த காலிங்பெல் சுவிட்சை அழுத்தினான்.

மெல்லிய சப்த அலைகள் கிணற்றுக் குள்ளிருந்து வருவது போல் கேட்டது.

சில விநாடிகளுக்குப்பின் கதவு திறந்தது.

காட்டன் சேர்ட்டும், ஜீன்ஸும் போட்ட இளம் பெண் பார்வைக்கு கிடைத்தாள். வெட்டி விடப்பட்ட அலை அலையான கேசம் தோள்வரை வழிந்தது. ரத்த ஓட்டம் துல்லியமாய்த் தெரியும் சிவந்த நிறம். அவள் சிரித்தபோது ஒரு வெள்ளைக்கோடு மாதிரி ஒழுங்கான பல்வரிசை பளிச்சிட்டது.

"ஹலோ டாக்டர். வெல்கம்... வெல்கம்."

உட்சாகமாய்ச் சொன்னவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"டாக்டர் ஏதாவது தொந்தரவு கொடுத்தாரா?"

"எந்த தொந்தரவுமில்லை... புவன்யா. நீ சொல்லிக்குடுத்த மாதிரி ஃபோன் பண்ணினேன். நம்பிட்டார். காரைக் கொண்டுபோனேன். ஏறி உட்கார்ந்துகிட்டார். இங்கே வந்து சேர்ற வரைக்கும் நல்ல பிள்ளையா புஸ்தகத்தைப் படிச்சுக்கிட்டு வந்தார்!"

"கையில் பிஸ்டல் வெச்சிருக்கியே! அதான் கேட்டேன்."

"பங்களாவுக்கு வந்தபிறகு உள்ளே வர லேசா முரண்டு பிடிச்சார். அதனால பிஸ்டலைக் காட்ட வேண்டியதாப் போச்சு."

"அவன் சொல்லிக் கொண்டிருந்த விநாடி,

உள்ளறைக் கதவைத் திறந்து அந்த உயரமான பெண்மணி வேகமாய் வர- புவன்யாவும், காரை ஓட்டி வந்த இளைஞன் இருவருமே சட்டென்று பயம் கலந்த பவ்யத்துக்குப் போனார்கள்.

"குட் ஈவினிங் மேடம். நீங்க குடுத்த வேலையைக் கச்சிதமா பண்ணிட்டேன். இதோ டாக்டர் சந்திரமோகன்."

மேடம் என்று மரியாதையுடன் அழைக்கப்பட்ட லீமா ஆஜானுபாகுவாய் இருந்தாள். மிடி அணிந்திருந்தாள். குறைந்தபட்சம் அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும் குட்டை முடியை ரப்பர் பான்டால் பிணைத்திருந்தாள். சரிசமமாய்க் கலந்திருந்த நரையைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தாள். அகலமான நெற்றியில் ஒரு புத்திசாலித்தனம் பளிச்சிட்டது.

உயரமான நாற்காலியில் கம்பீரமாய்க் கால் மேல் கால் போட்டு அமர்ந்தாள் லீமா. அவள் பார்வை டாக்டர் சந்திர மோகனின் முகத்தில் போய்க் குவிந்தது.

சந்திரமோகன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு ஏறிட்டார்.

"இதுக்கு முந்தி உன்னை... எங்கோ பார்த்த மாதிரி... ஞாபகம்."

லீமா உதடு பிரியாமல் புன்னகைத்தாள்.

"மெடிகல் ஜர்னல்ஸில் என் ஃபோட்டோவை நீங்க பார்த்திருக்கலாம். கண்கள் சம்பந்தமா பல ஆட்டிகள்ஸ் எழுதியிருக்கேன். என் பேர் லீமா."

"ஸைட். இம்ப்ரூவர்'ன்று ஒரு பேட்டர்ன் டிசைன் பண்ணியிருந்தே. பலபேர் அந்தக் கண்டுபிடிப்பைப் பாராட்டினாங்க."

"உங்களுக்கு நல்ல ஞாபகசக்தி டாக்டர்!"

"லாஜிக்கலா உன்னோட கண்டுபிடிப்பு சரிதான். ஆனா அதை ப்ராக்டிகலா உபயோகத்துக்கு கொண்டுவர முடியுமா?"

"இன்னும் கொஞ்சம் எளிமைப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வர சாத்தியமிருக்கு டாக்டர். அந்தக் கண்டுபிடிப்பும், அதுக்குக் கிடைச்ச பாராட்டும் தந்த உற்சாகத்தில் இன்னும் ஒரு படி மேலே போயிருக்கேன்..."

"எப்படி?"

"எலக்ட்ரோ ஐங்கிற கான்செப்ட்டுக்கு உயிர் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கேன்."

"எலக்ட்ரோ ஐ?"

"எஸ். இன்னும் கொஞ்சம் புரியும்படி சொன்னா.... மின்சாரப் பார்வை."

"சரி! என்னை எதுக்காக இங்கே....?"

பேச முயன்றவரை கையமர்த்தினாள் லீமா. சொல்றேன்! வாங்க என்கூட" என்று சொன்னவள் எழுந்தாள்.

அந்த விஸ்தாரமான பரிசோதனைக் கூடத்துக்கு அழைத்துப் போனாள்.

ஆராய்ச்சி மேஜைகள். சிக்கலான வயர் நடமாட்டங்கள். குரோமியம் பூசப்பட்ட சி.ஆர்.டி. திரைகள். டெஸ்ட் பெஞ்ச்சை உற்றுப் பார்க்கும் மைக்ரோஸ் கோப் ஒன்றைக் கண்கள்.

"**PET** கூட வெச்சிருக்கியே!" பாஸிட்ரான் எமிஷன் டோமோ க்ராஃபியைப் பார்த்துக் கொண்டே கேட்டார் சந்திர மோகன்.

"எல்லாம் இருக்கு! டாக்டர்! நீங்க பயப்படாமே என்கிட்ட பேசலாம்..."

"இத்தனை வசதியான ஒரு லெபாரட்டரி அரசாங்கத்தில் கூட இருக்குமான்னு சந்தேகமா இருக்கு. இதை நிர்மாணிக்க பல இலட்சங்கள் செலவாகுமே!"

"எனக்காக நிர்மாணிச்சுத் தந்திருக்காங்க..."

"யாரு...?"

"எலக்ட்ரோ ஐ கான்ஸப்டில் எனக்கு ஊக்கம் தர்றவங்க."

"யார் அவங்க?"

"சில அந்நிய நிறுவனங்கள்..."

"எலக்ட்ரோ ஐ பத்தி எனக்கு கொஞ்சம் விளக்கமா சொல்றியா...?"

"ஷ்யூர் டாக்டர்... சாதாரணமா நம்ம கண்கள் எப்படிப் பார்க்கிறது...."

"காட்சிகள் ஒளிக்கதிர்களா கண்ணில் உள்ள ரெட்டினா திரையில் விழுது. அங்கே காட்சிகள் கோடிக்கணக்கான போட்டோ ரிஸப்டர்கள் மூலமா மின் ரசாயனத் துடிப்புகளாய் உணரப்பட்டு அந்த மின்துடிப்புகள் ஆப்டிக் நெர்வ்ஸ் மூலமாக மூளையில் உள்ள விஷுவல் கார்ட்டெக்ஸ் பகுதிக்குப் போகிறது. விஷுவல் கார்ட்டெக்சில் மின் துடிப்புக்கள் பிம்பங்களா உணரப்படுது."

"யுவார் எக்ஸாக்ட்லி ரைட். ஸோ, இந்த பார்வை சிஸ்டத்தின் அடிப்படை என்ன?"

"என்ன?"

"ட்ரான்ஸ்ட் யூஷர். காட்சி-மின் துடிப்புக்கள் மறுபடி காட்சி. அதாவது ஒரு காட்சியை மின் துடிப்புக்களா மாத்தி மூளையில் உள்ள விஷுவல் கார்ட்டெக்ஸ் பகுதிக்குத் தரக்கூடிய ஒரு கருவி இருந்தா குருடர்கள்ங்கற வார்த்தையையே அகராதியில் இருந்து எடுத்துரலாமே!"

"இது பேத்தல்!" என்றார் சந்திரமோகன்.

லீமா கோபத்துடன் அவரை ஏறிட்டாள்.

"இதைப்பார்த்தீங்களா? பெரிய சைஸ் மூக்குக் கண்ணாடின்னு நினைச்சிக்காதிங்க. பல நாள் ஆராய்ச்சியில் நான் உருவாக்கியிருக்கும் ட்ரான்ஸ்ட்யூஸர் இது. அதாவது காட்சிகளை மின் துடிப்புக்களா மாத்தக் கூடிய காரியத்தைக் கச்சிதமா இது செய்யும்."

சந்திரமோகனின் தலை மறுத்தலாய் ஆடியது.

"நீ உருவாக்கியிருப்பதா சொல்லும் இந்த ட்ரான்ஸூஸ்ட்யூசர் ஒரு சாதாரண விஷயம்தான். டெலிவிஷனை எடுத்துக்க. டி.வி. ஸ்டேஷனில் படங்கள் மின் சமிக்ஞைகளா மாற்றப்பட்டு காற்றில் அனுப்பப்படுது. அந்த மின் சமிக்ஞைகளை டிவி ரிசிவ் பண்ணி படங்களா மாத்தறதில்லையா?"

"நீங்க சொல்றது வாஸ்தவம்தான். ஆனா இரண்டுக்கும் ஏராளமா வித்யாசம் இருக்கு..."

"என்ன வித்யாசம்...?"

"உளியால ஒரு பெரிய கல்லில் சிலையைச் செதுக்கறதுக்கும்-அதே உருவத்தை அரிசியில் சின்ன ஊசி வெச்சு உருவாக்கறதுக்கும் உள்ள வித்யாசம்..."

சந்திரமோகனின் விழிகள் விரிந்தது.

லீமா தொடர்ந்தாள். "நீங்க குறிப்பிடற டி.வி மின்சமிக்ஞைகள் வேறு. இந்த ட்ரான்ஸ்ட்யூசர் உருவாக்கும் மின் துடிப்புக்கள் வேறு. இது மனித மூளை புரிந்து கொள்ளக்கூடிய மிக நுண்ணிய மின்சார பாஷை டாக்டர்! இயற்கையா நம்ம மூளைக்கு போற மின் அலைகளுக்கும் இதுக்கும் வித்யாசமே இருக்காது. ஃப்ரீக் வன்சி பார்க்கறிங்களா..?"

கேட்டுக் கொண்டே லீமா அந்த ட்ரான்ஸ்ட் யூசர் கருவியை உயிர்ப்பித்து ஒரு ஆஸிலாஸ்கோப்புடன் வயர்களை இணைத்தாள். ஆஸிலாஸ் கோப் திரையில் சிவப்புக் கோடுகள் நெளிந்து அலை நீளம் காட்டின.

(வரும்)

# ஒசாமாவைத் தேடும் அமெரிக்கா

அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் தனக்கு மிடையில் எவ்வித சம்பந்தமுமில்லை என்று ஒசாமாபின் லேடன் திரும்பத்திரும்ப கூறிவந்தாலும் அதை நம்பக்கூடிய நிலையில் வாஷிங்டன் இல்லை.

கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலுக்கு முன்னரே ஒசாமாவின் தலைக்கு அமெரிக்கா விலை வைத்திருந்தது. இவரை உயிருடன் பிடித்துத் தருபவருக்கு அல்லது இவரது இருப்பிடம் குறித்து சரியான தகவலை வழங்குபவருக்கு 50 இலட்சம் டொலர். நம் நாட்டு மதிப்பில் 45 கோடி ரூபா தருவதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை வாக்களித்திருக்கிறது இன்று வரையிலும் அந்த பரிசுத் தொகையை பெறும் முயற்சியில் எவரும் வெற்றி பெறவில்லை.



சவுதி அரேபிய கோடீஸ்வரக் குடும்பம் ஒன்றின் 52 சகோதர சகோதரிகளுக்கு மத்தியில் 17வது நபராகப் பிறந்த ஒசாமா சிறு வயதிலேயே ஆயுத கலாசாரத்தில் ஆர்வம் காட்டியவர்.

சவுதியில் பிறந்தாலும் அந்த நாட்டில் குடியுரிமையை இழக்க வேண்டி ஏற்பட்ட ஒசாமா ரஷ்யர்கள் ஆப்கானிஸ்தான்மீது படையெடுத்த போது அதை எதிர்த்துப் போராடிய இஸ்லாமிய தீவிரவாதக்குழுவான முஜாஹிதீன் இயக்கத்துடன் இணைந்தார்.

1979ம் ஆண்டு முஜாஹிதீன்களுடன் சேர்ந்து கொண்ட இவர் ஆரம்பகாலத்தில் அந்த இயக்கத்துக்கு நிதி சேகரிக்கும் உறுப்பினராக பாகிஸ்தானிலிருந்து செயற்பட்டார். ரஷ்யர்களுடனான போரின் இறுதிக் கட்டத்தில் ஆப்கானிஸ்தானுக்கு சென்று நேரடி ஆயுத மோதலில் பங்கேற்றார். ரஷ்யாவுக்கு எதிரான யுத்தம் என்பதால் முஜாஹிதீன்களுக்கு அமெரிக்கா ஆயுதமும், பயிற்சியும் வழங்கியது. இதில் பின்லேடனும் பயிற்சி பெற்றார்.

1991ம் ஆண்டு வளைகுடா போர் வரையிலும் ஒசாமாவுடன் பகையை விரும்பாத அமெரிக்காவுக்கு அதன் பின்னர் கசக்க ஆரம்பித்தது.

மத்திய கிழக்கில் பெருந்தொகையான அமெரிக்கத் துருப்புக்கள் குவிக்கப் பட்டதை கடுமையாக எதிர்த்த ஒசாமா முஸ்லிம்களின் புனித பூமியில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற வேண்டுமென குரல் கொடுக்க ஆரம்பித்தார்.

1991ம் ஆண்டு ஜித்தாவில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட ஒசாமா அங்கிருந்து வெளியேறி மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குச் சென்றார். பிறகு சூடானின் தலை நகரான காட்டூமில் சிறிது காலம் வசித்த இவர் அங்கு இரசாயன கதிரியக்க ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது.

சூடானிய அரசாங்கத்துக்கு மேற்குலகம் கொடுத்த கடும் நெருக்குதல் காரணமாக அங்கிருந்து வெளியேறிய ஒசாமா இறுதியில் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கே வந்து சேர்ந்தார். அங்கு தலிபான் ஆட்சியாளர்களின் பூரண ஆதரவுடன் பிரமாண்டமான தீவிரவாத வலையமைப்பொன்றை உலகம் முழுவதிலும் கட்டி வளர்த்த ஒசாமா தனது ஆயுதத்தை அமெரிக்காவுக்கு எதிராகத் திருப்பினார். 1993ம் ஆண்டு நியூயோர்க்கில் நடந்த கார் குண்டு வெடிப்பு, 1998ம் ஆண்டு கென்யா மற்றும் தன்சானியா நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் முன்னால் வெடித்த குண்டுகளுக்கும் இவரே பொறுப்பாளி என வாஷிங்டன் குற்றஞ்சாட்டி வருகின்றது.

ஒசாமா தனது மனைவிமார் பிள்ளைகள் சகிதம் ஆப்கானிஸ்தானிலேயே வாழ்ந்து வருகிறார். தெற்கு ஆப்கானில் உள்ள கந்தஹார் என்ற இடத்திலேயே அவர் அதிக காலத்தை செலவிடுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒசாமா இயந்திரப் பொறியியல் துறையில் பட்டம் பெற்றவர். சி.ஐ.ஏ.யின் ஆயுதப் பயிற்சி பெற்றது மட்டுமன்றி அமெரிக்காவுக்காக ஒரு காலத்தில் ரஷ்யாவில் உளவு பார்த்தவர்.

அவர் தனது குடும்பத்தினரைப் பிரிந்து சவுதி அரேபியாவில் இருந்து வெளியேறிய போது சுமார் 3000 கோடி ரூபாவை தன்வசம் எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா மீதான தாக்குதலை முழு உலகமும் கண்டித்த போதும் ஒசாமாவுக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கும் நாடுகளும் இல்லாமல் இல்லை. நேரடியாக அமெரிக்காவுடன் மோதப்பயப்படும், ஆனால் உள்ளூர ஆத்திரத்துடன் இருக்கும் பல நாடுகள் ஒசாமாவை இரகசியமாக ஆதரிக்கின்றன. இதன் காரணமாகவே இவரது குவாதா அமைப்பு எகிப்து முதல் காஷ்மீர் வரையிலும் வியாபித்து காணப்படுகின்றது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்கூட இவர்களது அலுவலகங்கள் இயங்குகின்றன. உலகெங்கிலும் சுமார் 60 நாடுகளில் இந்த அமைப்பினர் செயற்படுவதாக அறியப்பட்டுள்ளது.

ஒசாமாவின் அமைப்பு சரியாக ஒரு அரசாங்கத்தைப் போன்றதென ஹாவாட் பல்கலைக் கழகத்தின் பேராசியர் ஜெஸிகா ஸ்டேர்ன் கூறுகிறார்.

2500க்கும் மேற்பட்ட மெய்பாது காவலர்கள் சகிதம் வெவ்வேறு மறைவிடங்களில் ஒளிந்திருக்கும் ஒசாமா உலக வல்லரசின் முழுப்பலத்துக்கும் எதிராக முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார். அமெரிக்கா ஒரு தனி மனிதனைக் கொல்ல தனது பிரமாண்டமான படைப்பலத்தை பிரயோகிக்க தயாராகி வருகிறது.

# எஸ்.டி.எஸ். தொடர் 69

**இலங்கையில் முதலாவது இனக்கலவரம் 1956ல் தான் ஏற்பட்டது என்பதை ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதற்கான பின்னணிகளை அப்போது முழுமையாகத் தெரிவிக்கவில்லை. கல்லோயத் திட்டக் குடியேற்றம் பற்றி முன்னரே குறிப்பிட்டிருந்ததையும் வாசகர்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். அது தொடர்பான மேலதிக விவரங்கள் இப்பொழுது தரப்படுகின்றன. வாசகர்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும் என்பதற்காகவே இதனை விரிவாக எழுதுகிறேன். அரைத்தமாவையே மீண்டும் கட்டுரையாளர் அரைக்கிறார் என்று குறை கூற வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

# கல்லோயாக் குடியேற்றம்

## இரா.பத்மநாதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதியன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட போதும், கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும், கட்சிக் கொள்கைகளை வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களிடம் எடுத்துக் கூற கட்சித் தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது எத்தகைய இன்னல்களை எதிர்கொண்டனர் என்பதை ஏற்கனவே இத் தொடரின் ஆரம்பக்கட்டங்களில் விவரமாகக் கூறியிருந்தேன்.

கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் எதிர்ப்புக்கணைகள் ஓய்ந்தபாடில்லை. முன்னரைவிட பன் மடங்கு அதிகமாகவே இருந்தது என்று தான் சொல்ல வேண்டும். சொல்லடியும் பொல்லடியும் கல்லடியும் பட்டே தலைவர்கள் கட்சியை வளர்த்தெடுத்தனர்.

இலங்கையின் வெப்ப மண்டலமான வடக்குக் கிழக்கிலுள்ள காட்டு நிலங்களை பயிர் விளையும் காணிகளாக்க வேண்டும். உணவு பெறுவதில் நாடு தன் நிறைவு பெற வேண்டும் என்று முதலாவது பாராளுமன்ற அதிகார பீடத்திலிருந்தோர் ஆலோசித்தனர். 1948வரை இலங்கையை ஆட்சி புரிந்த பிரிட்டிஷார். தாங்கள் ஆட்சி புரிந்த நாட்டுக்குப் பிரதி உபகாரமாக ஏதாவது செய்ய வேண்டுமே என்று கருதி பிரதமர் டி.எஸ்.சென நாயக்க அவர்களிடம் எத்தகைய உதவி ஒத்தாசை புரியவேண்டும் என்று கேட்டபோது, வரண்ட பிரதேசத்தை வளமுள்ள பூமியாக மாற்றித்தர வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பிரிட்டனிலிருந்து பூர்வாங்க ஆய்வினை மேற்கொள்வதற்காக வந்த நிபுணர்கள் குழு, வடமத்திய மாகாணத்திலுள்ள மின்னேரிக் குளத்தை விரிவாக்கினால் கிழக்கில் ஒரு பகுதியையும் வடக்கில் ஒரு பகுதியையும் பாசனம் செய்ய ஏதுவாக இருக்கும் என்று கூறினர். ஆனால் விவசாயத்துறையில் சிறு வயதிலிருந்தே ஈடுபாடு கொண்டிருந்த பிரதமர் டி.எஸ்.சென நாயக்கா இதற்கு உடன்படவில்லை.

மின்னேரித் திட்டம் ஒரு மிகச் சிறிய திட்டம். பிரிட்டனிடமிருந்து இந்த மிகச் சிறிய திட்டத்தை உதவியாகப் பெற அவர் மனம் ஒப்பவில்லை. அவருடைய கண்ணோட்டம் பரந்து விரிந்ததொன்றாக இருந்தது.

மட்டக்களப்புக்குத் தெற்கேயும் தென் மேற்கேயும் பரந்து கிடந்த காட்டு நிலங்களைச் சுற்றி அவருடைய பார்வை அகன்றது. ஒரே கல்லில் பல காய்களை அடித்து வீழ்த்தும் திட்டத்தை வரைந்தார். இதன் பயனாகவே 'கல்லோயத் திட்டம்' பிறந்தது.



**பட்டிருப்புத் தொகுதியில் படுவாங்கரையில் நடைபெற்ற ஒரு வரவேற்பில் திரு.எஸ்.எம்.இராசமாணிக்கம். (இடமிருந்து நாலாவது) செனட்டர் மு.மாணிக்கம் ஆகியோர்.**

**தமிழரசுக் கட்சியில் முக்கியமான பங்கேற்றுத் தொண்டாற்றிய மகிழடித்தீவு திரு.சிவ சுப்பிரமணியம் (மணியம் மாஸ்டர்) இடமிருந்து மூன்றாவதாகக் காணப்படுகிறார்.**

பட்டிப்பளை என்ற பழம் பெயருடன் ஊவா மலைத் தொடரிலிருந்து பீறிட்டு வந்த சிற்றருவியை மையமாக வைத்து, இங்கினியாகலைப் பள்ளித் தாக்கை மேடுறுத்தி அணையைக் கட்டி நீரைத் தேக்க ஏற்பாடு செய்து தரும்படி, நிபுணர்களையும், அவர்கள் மூலம் பிரிட்டிஷ் அரசையும் கேட்டார்.

மின்னேரித் திட்டம் மிகவும் சிறிய திட்டம்; பணச் செலவும் அதிகம் இருக்காது. ஆனால் கல்லோயாத் திட்டமோ மிகப் பெரும் பணச் செலவில் உருவாக்க வேண்டிய மிகப் பாரியதிட்டம்.

எப்படியோ பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இதற்கு ஒப்புக் கொண்டுவிட்டனர். கிழக்கில் தமிழ்பேசும் இரு இனத்தவர்களுக்கும் சொந்தமாக இருந்த பிரதேசத்தில் தென் இலங்கையிலிருந்த காணியற்ற விவசாயிகளைக் கொண்டு வந்து குடியேற்றி, அப்பிரதேசத்தை சிங்கள மயமாக்கவே அவர் திட்டமிட்டிருந்தார். அந்தரங்கமான அவருடைய திட்டம் மெல்ல மெல்ல நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பித்தது.

காடுகளை வெட்டி அழிப்பதற்கும் பாதைகள் போடுவதற்கும் அணை கட்டுவதற்குமாகப் பல இயந்திர சாதனங்களும் பாரிய அளவிலான நிலத்தைத் தோண்டுவதற்கான கிரேன்கள், டிராக்டர்கள் ஆகியன வந்து சேர்ந்தன.

இவையெல்லாம் ரயில்மூலம் மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடைந்து, அங்கிருந்து கல்முனைக்குச் செல்லும் பாதையில் பயணம் செய்யும் போதெல்லாம், அவற்றின் பிரம்மாண்டமான தோற்றங்களையெல்லாம் கண்ட மட்டக்களப்பு தெற்குப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் வியப்படைந்தனர்.

கனவேகத்தில் நடைபெற்ற பலதரப்பட்ட வேலைகளுக்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழ்ந்த தமிழ் முஸ்லிம் மக்கள் தொழில்வாய்ப்புப் பெற்றனர். அணைக்கட்டு வேலைகளும் குடியேற்ற வீடுகளையும் கிராமங்களையும், காடுகளை வெட்டி வயல் வெளிகளாக்கும் பணிகளும் ஒரே காலத்தில் மேற்கொள்ளப் பட்டமையினால் சகல பணிகளும் கன வேகத்தில் நிறைவேறிவிட்டன.

இக்கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில், தென் இலங்கையில் காணிக் கச்சேரிகள் நடைபெற்று கல்லோயாப் பள்ளத்தாக்கில் அவர்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதற்கான திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

(பட்டிப்பளை ஆற்றைத்தான் 'கல்லோயா' என்று பெயர் மாற்றி குடியேற்றத்திட்டத்துக்கும் 'கல்லோயாத் திட்டம்' என்று பெயரிட்டனர். பட்டிப்பளை ஆறு என்ற தமிழ்ப்பெயர் 'கல்லோயா' என்ற சிங்களப் பெயரைப்பெற்றது.)

தென் இலங்கையிலிருந்து தினசரி ஆயிரக் கணக்கில் குடியேற்றக் காரர்கள் ரயில் மார்க்கமாக, தங்கள் பாவினைப் பொருட்களுடன் மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடைந்தனர். அங்கு அவர்களுக்கு அரச அதிகாரிகள் காலை உணவை அளித்து பாரிய லொறிகளிலும் ட்றக் வண்டிகளிலும் ஏற்றி, அவரவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குடியேற்றக் கிராமங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

கல்லோயாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் நிர்மாணப் பணிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட பாரிய இயந்திர சாதனங்கள் கல்முனை செல்லும் பிரதான வீதிவழியாகச் செல்வதையும் தொடர்ந்து குடியேற்ற வாசிகளான பெரும்பான்மையின மக்கள் சாரிசாரியாகச் செல்வதையும் வீதியின் இருமருங்கிலும் நின்று தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தனர். தங்கள் பூர்வீக உரித்துடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்ற சிந்தனை அதுவரை எவருக்கும் எழுந்ததாகத் தெரியவில்லை.

ஓரளவு தெளிவு பெற்ற கிழக்கு மாகாணத் தலைவர்கள் தூக்கம் கலைந்து கண் விழித்துப் பார்த்த போதுதான் தங்கள் பாரம்பரிய பூமி பறிபோய்விட்டதை உணர்ந்தனர். எதிர்ப்புக் கோஷங்களைக் கிளப்பினார்கள். இதன் பயனாக சில கிராமங்கள் (குடியேற்றங்கள்) தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒதுக்கப்பட்டன.

இக்குடியேற்றங்களிலாவது தமிழ் மக்களைக் குடியேற்றுவது பெரும்பாடாகி விட்டது. பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தவரான திரு.எஸ்.எம்.இராசமாணிக்கம் அவர்கள் தமிழர்களுக்கான சில காணிக் கச்சேரிகளை ஏற்பாடு செய்தார். ஆனால் அங்கெல்லாம் சென்று குடியேறுவதற்குப் பெரும் பாலான தமிழ் விவசாயிகளுக்கு நாட்டம் இருக்கவில்லை. மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கு தாங்கள் வாழ்ந்து வந்த ஊரையும் உற்றார் உறவினரையும் விட்டுப் பிரிந்து செல்ல மனம் விருப்பமில்லை. எத்தனை கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தாலும் தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணிலேயே கிடக்க வேண்டும் என்ற மனப்பான்மைதான் இருந்தது. இதனால் கல்லோயாத் திட்டக் குடியிருப்புகளில் குடியேறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெரும் பாலானோர் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல மறுத்துவிட்டனர்.

வேறு குடியிருப்பாளர்களைப் பொறுக்கி எடுத்து தமிழ் விவசாயிகளுக்குரிய குடியிருப்புகளில் கொண்டுபோய்க் குடியேற்றுவதற்கு திரு.இராசமாணிக்கம் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் பெரும்பாடு பட்டார்.

அவ்வாறு குடியேறி, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்தோர் ஓரிருவருடங்களில் கணிசமான வருவாய் பெற்று உயர்வடைந்தார்கள்.

இக்கால கட்டத்தில் தமிழரசுக் கட்சி நியாயமான அளவு மட்டக்களப்பு மாநிலத்தில் வேர்விட்டுத் தளைத்துவிட்டது.

இலங்கையின் அரச மொழி எது என்பதனையிட்டு சிங்கள அரசியல் வாதிகளிடம் எழுந்த வாதப்பிரதிவாதங்களை ஓரளவு அறியத் தொடங்கிய மக்கள், தங்கள் எதிர்காலத்தையிட்டு அப்போதுதான் உணரத் தலைப்பட்டனர். இப்போது தான், 'தமிழரசுக் கட்சிக்காரன் சொல்லுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது' என்ற உணர்வு தலை எடுத்தது.

தென் கிழக்காசிய நாடுகளில் பல்துறை அபிவிருத்திகளுக்கு ஒத்தாசை புரிவதில் நாட்டங் கொண்ட மேலை நாடுகள் கொழும்புத்திட்டம் என்ற ஓர் அமைப்பை உருவாக்கின. இதன் அடிப்படையில் கொழும்பு விக்டோரியா பூங்காவில் (இன்று விகரமாதேவி பூங்கா) கொழும்புத் திட்டக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பிரமாண்டமான முறையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்புத் திட்ட கண்காட்சியில் பல மேலை நாடுகளும் காட்சி அரங்குகளை அமைத்திருந்தன. சர்வதேச மட்டத்தில் கொழும்பில் நடத்தப்பட்ட இத்தகைய சிறப்பான கண்காட்சி 1952ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கியது. இக்கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில்தான் நாட்டின் முதலாவது பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றிருந்த திரு.டி.எஸ்.சென நாயக்கா அவர்கள் காலமானார்.

திரு.டி.எஸ்.சென நாயக்கா அவர்கள் ஒவ்வொரு நாட்காலையிலும் காலிமுகத்திடலில் குதிரைச் சவாரி செய்வது வழக்கம். அன்று காலை அவர் சவாரி செய்த குதிரை அவரை தரையில் வீழ்த்திவிட்டது. உடனடியாக மருத்துவனை கொண்டு செல்லப்பட்டு, அவசர சிகிச்சைகள் கொடுக்கப்பட்டபோதும் திரு.சென நாயக்காவின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

திரு.சென நாயக்கா அவர்கள் மறைந்ததும் அவருக்குப் பதிலாக, விவசாய அமைச்சராகப் பதவியிலிருந்த அவருடைய மகன் திரு.டட்லி சென நாயக்கா அவர்களை ஐ.தே.கட்சி தற்காலிக பிரதமராகத் தேர்ந்தெடுத்தது.

அக்கால கட்டத்தில் ஐ.தே.கட்சியில் முன்னணித் தலைவர்களாகக் கருதப்பட்ட திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் சேர் ஜோன் கொத்தலாவல போன்றவர்களுக்கு திரு.டட்லி சென நாயக்கா அவர்கள் தற்காலிகப் பிரதமாகவும் கட்சியின் தலைவராகவும் உயர்த்தப்பட்டமை மனவருத்தத்தைக் கொடுத்தது. சேர்ஜோன் இதனை அதிகம் பொருட்படுத்தாமல் இருந்துவிட்ட போதிலும் திரு.பண்டார நாயக்காவை இது அதிகம் பாதித்தது.

இந்நிலையில் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்த வேண்டியநிலை உருவானது. திரு பண்டாரநாயக்கா அவர்கள் 'சிங்கள மகாசபை' என்ற ஓர் அமைப்பினை ஏற்கனவே உருவாக்கியிருந்தார். இவ்வமைப்பில் பௌத்த சங்கத்தினர், சுதேச வைத்தியர்கள் மற்றும் ஆசிரியப்பெருமக்கள் பெருவாரியாக இணைந்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு தனக்குத் தரப்படப் போவதில்லை; எனவே பிரதமராகும் வாய்ப்பும் தனக்குக் கிட்டப்போவதில்லை, என்ற எண்ணம் திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்கா அவர்களுக்கு உதயமானது. இந்நிலையில் தன்னுடைய தலைமையில் இயங்கிய சிங்கள மகாசபைத் தலைவர்களை அழைத்து ஆலோசனை நடத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நிறுவினார். இருப்பினும் 1952ம் ஆண்டுத் தேர்தலில் தன்னுடைய இலட்சியத்தை அடைய முடியாது போய் விடும் என்பதை உணர்ந்தே இருந்தார். டி.எஸ்.சென நாயக்கா மறைந்ததும் அவருடைய அவை ஐ.தே.கட்சிமீதும் அவர் மகன் டட்லி சென நாயக்கா மீதும் வீசுவதை உணர்ந்துகொண்டார்.

**(வளரும்)**

---

# வாரம் ஒரு வார்த்தை!

**34. காப்பி குடிக்கலாமா?**

"வாங்கசார்... ஒரு காப்பி சாப்பிட்டுப் போகலாம்!"

யாரைப் பார்த்தாலும் இப்படி சகஜமா சொல்லிக்கிட்டிருக்கோம். ஒருத்தரை உபசரிக்கணும்-ன்னு நினைச்சா உடனடியா நாம செய்யறது காபி சாப்பிடச் சொல்றதுதான்.

இதனாலே காபி வேணாம்ன்னு நினைக்கறவங்க கூட ஒரு கட்டாயத்துக்காக அதை சாப்பிட வேண்டியிருக்கு!

காப்பி அதிகமா குடிக்கறது கெடுதல் தான். அதனாலே அதை ஒரு அளவோட நிறுத்திக்கறதுதான் நல்லது.

நாம குடிக்கிற காப்பியிலே காஃபின்-ங்கற நச்சுப் பொருள் இருக்கு. இது ஒரு அஞ்சு நிமிஷத்துலே உடம்பு பூராவும் பரவிடும்.

ஒரு நாள்லே 300-லேயிருந்து 350 மில்லி கிராம் காஃபின் நம்ம உடம்புக்குள்ளே போச்சுன்னா... அத நம்மளை காப்பிப் பழக்கத்துக்கு அடிமையாக்கக் கூடிய அளவுன்னு அர்த்தம்.

நமக்குத் தெரியாமலேயே காப்பிப் பழக்கத்துக்கு நாமஅடிமை ஆயிருப்போம். அதை எப்படிக் கண்டுபிடிக்கறது தெரியுமா? ஒரு ரெண்டு மூணு நாளு காப்பி சாப்பிடறதை நிறுத்துங்க. என்ன ஆவுதுன்னு பாருங்க. அந்த சமயத்துலே உங்களுக்கு அடிக்கடி எரிச்சல் வருதா? கொட்டாவி வருதா? தூக்க மயக்கமா இருக்கா? தலைவலி வருதா? அடிக்கடி உணர்ச்சிவசப்படுறீங்களா? கோபத்தை அடக்க முடியலையா?

அப்படின்னா அனேகமாக நீங்க காஃபீனுக்க அடிமை ஆயிருப்பீங்க!

ஒரு நாளைக்கு மூணு முதல் நாலு குவளை காப்பி குடிக்கற பழக்கம் உள்ளவங்க காஃபீனிசம் (Coffeinisom)-ங்கற கோளாறுக்கு ஆளாகக் கூடும்.

அது எப்படிப்பட்ட கோளாறுன்னா... மனசுலே ஒரு ஏக்கம் இருக்கும். அமைதி இருக்காது. ராத்திரியிலே சரியா தூங்க முடியாது-ரொம்ப நேரம் கழிச்சி தூக்கம் வரும். அல்லது தூக்கம் கெட்டுப் போயிடும்.

உங்களுக்குத் தூங்கறதுலே சிரமம் இருக்கா? தலைவலியோ உடல் நடுக்கமோ இருக்கா?

அப்படின்னா காப்பியைக் குறைச்சிக்கறது நல்லது. கொஞ்சங் கொஞ்சமா குறைச்சிக்கிட்டே வந்துடலாம்.

தலையை வலிக்குது-காப்பி குடிச்சா தேவலைன்னு சொல்றோம்லே..

தலை வலிச்சா காப்பி குடிக்கறதுக்குப் பதிலா அதை நிறுத்தறது நல்லது. காப்பி குடிக்கற பழக்கமே அடிக்கடி தலைவலி வர்றதுக்குக் காரணம்-ன்னு சில ஆராய்ச்சி முடிவுகள் சொல்லுது.

வயிற்றுப் புண் உள்ளவங்க காப்பி சாப்பிடறதை விட்டுடறதுதான் நல்லது.

ஒருசில நடத்தைக் கோளாறுகளுக்கும், அளவுக்கு மீறிய செயல்பாடுகளுக்கும் காஃபீன் காரணமா இருக்கு-ன்னு சில பேர் சொல்றாங்க. இருந்தாலும் அது இன்னமும் முழுமையா நிரூபிக்கப்படலே!

கருவுற்ற பெண்கள் அதிகமா காப்பி குடிச்சிக்கிட்டிருந்தா கருச்சிதைவு- உதடு பிளந்த குழந்தைகள் உருவாகறது-கை ஊனத்தோட உருவாகறது-இது மாதிரி சில பிறவிக் கோளாறுகள் ஏற்படலாம். அதுக்காக காப்பி அதிகமா குடிச்சா கண்டிப்பா இப்படி ஆயிடும்ன்னு யாரும் பயப்பட வேண்டாம். இப்படி ஆகறதுக்குச் சான்ஸ் உண்டுன்னு சொல்றாங்க... அவ்வளவுதான்.

வழக்கம்போல எலிகளை வச்சி சில ஆராய்ச்சிகளைப் பண்ணிப் பார்த்துட்டு இப்படி சொல்றாங்க... அந்த ஆராய்ச்சி எப்படின்னா...

சில எலிகளுக்கு.. தினமும் காபி குடுத்தாங்க...

காப்பின்னா நாம் சாப்பிடற காப்பியையே கொடுத்து குடிக்கச் சொல்றதில்லே...!

நாம சாப்பிடற 18 குவளை காப்பியிலே எவ்வளவு காஃபின் இருக்குமோ அவ்வளவு காஃபீனை தினமும் எலிக்குக் கொடுத்துகிட்டு வந்தாங்க. கடைசியிலே அதெல்லாம் ஊனமுற்ற குட்டிகளா போட்டுதாம்.

அதனாலே நமக்கும் அது இடைஞ்சல்தானே-அப்படிங்கற ஒரு பயம்தான். வேறே ஒண்ணுமில்லே!

இப்படி இதையெல்லாம் சொல்லி உங்களைப் பயமுறுத்தணும்ங்கறது நம்ம நோக்கமில்லே.

மருத்துவ நிபுணர்கள் இப்படியெல்லாம் சொல்றாங்க...

அதனாலே தேவைக்கு அதிகமா அல்லது அனாவசியமா குடிக்கிற காப்பியைக் குறைச்சிக்கலாமே! அது நல்லதுதானே! அதுக்காகத்தான் இந்தத் தகவல்.

என்கூட வேலை பார்க்கற ஒருத்தர் சாயந்தரம் அஞ்சுமணி ஆனா போதும்... அவசரமா வீட்டுக்குப் புறப்படுவார்.

"ஏங்க இவ்வளவு அவசரம்?" என்பேன்.

"என் சம்சாரம் எனக்காக காப்பி குடிக்காம காத்துக்கிட்டிருப்பா சார்!" -ம்பார்.

"உங்க பேர்லே அவ்வளவு மரியாதையா?" -ம்பேன்.

"அப்படியில்லேசார்... நான் போயிதான் காப்பி போட்டு அவளுக்கும் கொடுத்துட்டு நானும் சாப்பிடணும்!" -அப்படிம்பார்!



## தென்கச்சி - கோ.சுவாமிநாதன்

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## முன்னணிக்கு வந்துள்ள ஃபிளவர்



**ஸி**ம்பாப்வே கிரிக்கெட் வீரர் அண்டி ஃபிளவர் டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசைப் பட்டியலில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஸிம்பாப்வேக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் சிறப்பாக விளையாடியதை அடுத்தே ஃபிளவர் முன்னணிக்கு வந்துள்ளார்.

ஹராரேயில் நடந்த இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இருப்பினும் ஃபிளவர் முதல் இன்னிங்ஸில் 142 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் ஆட்டமிழக்காது 199 ஓட்டங்களையும் பெற்றார்.

இதன் மூலம் ஒரு டெஸ்ட்டின் இரு இன்னிங்ஸிலும் சதமடித்த முதல் விக்கெட் கீப்பர் என்ற சாதனையைப் படைத்திருக்கும் ஃபிளவர், 'பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்' தரவரிசைப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தத் தரவரிசைப் பட்டியலின்படி முதலிடத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் இரண்டாமிடத்தில் அன்டி ஃபிளவரும் மூன்றாமிடத்தில் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ்வோவும் நான்காமிடத்தில் பாகிஸ்தானின் இன்ஸமாம் உல் ஹக்கும் ஐந்தாமிடத்தில் இலங்கையின் மஹேல ஜயவர்த்தனவும் இருக்கின்றனர்.

## அடுத்த ஆசிய டெஸ்ட்

இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய அணிகள் கலந்துகொள்ளும் ஆசிய டெஸ்ட் சாம்பியன் போட்டியில் இந்தியா கலந்துகொள்ளவில்லை என்பது தெரிந்ததே.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் பங்களாதேஷ் தோல்வியைத் தழுவியுள்ளது. இதையடுத்து ஆசிய டெஸ்ட் சாம்பியனுக்கான போட்டியில் இலங்கையும் பாகிஸ்தானும் மோதவுள்ளன. இப்போட்டி வரும் வருடம் ஜனவரி மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது. ஜனவரி 31 முதல் பெப்ரவரி 4ம் திகதி வரை கொழும்பில் இப்போட்டி நடக்கவுள்ளது.

இதையடுத்து நடக்கவுள்ள இறுதிப் போட்டியில் இலங்கையும் பாகிஸ்தானுமே மோதவுள்ளன. இப்போட்டி பெப்ரவரி 15 முதல் 19 வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ளது.

## லக்ஷ்மன் அணியிலிருந்து நீக்கம்


**தெ**ன்னாபிரிக்காவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடும் இந்திய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த வி.வி.எஸ். லக்ஷ்மன் நீக்கப்பட்டுள்ளார்.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவுஸ்திரேலியா சென்று சிகிச்சை பெற்ற லக்ஷ்மன் இன்னமும் பூரணமாகக் குணமடையாத காரணத்தால் அணியில் இடம்பெறவில்லை. இவருக்குப் பதிலாக ஹேமங் பதானி சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

வருகின்ற ஒக்டோபர் 5ம் திகதி முதல் 26ம் திகதிவரை தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடரில் இந்தியா, தென்னாபிரிக்காவுடன் கென்யாவும் கலந்துகொள்கிறது.

இந்தத் தொடரில் கலந்து கொள்ளும் இந்திய வீரர்கள் பலருக்கு உடல் உபாதைகள் ஏற்பட்டிருந்தன. இப்போது தேறியுள்ள அவர்கள் அணியில் இணைந்துள்ளனர்.

டெண்டுல்கருக்கு வலது பாதத்திலும் அனில் கும்ப்ளேக்கு தோள்பட்டையிலும்



ஜவகர் ஸ்ரீநாத்திற்கு இடது கையிலும் காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஸஹீர்கான் கணுக்காலில் உபாதையிலும் ஆஷிஷ் நேஹ்ரா மேல் தொடையில் ஏற்பட்ட உபாதையாலும் கங்குலி அடிவயிற்றில் ஏற்பட்ட தசைப்பிடிப்பாலும் அவதிப்பட்டனர். இவர்கள் அனைவரும் தற்போது சரியான உடல்நிலை தகுதியுடன் உள்ளனர்.

# தண்டனை....?

**லா**வண்யா தலைகுனிந்து நின்றிருந்தாள். மாலைச் சூரிய ஒளியில் அவளது வெண்ணிற ஆடை பெரிதும் பளபளக்க தேவதை ஒன்று பூமியில் இறங்கி நின்றிருப்பதுபோல நின்றாள்.

அவளது வெண்ணிறச் சங்குக் கழுத்தில் பொன்னிற ஜோதி விழுந்ததால் பழுப்பு நிறத் தந்தம் போல மினுமினுப்பாக நிறம் மாறியிருந்தது. தலை முடிகள் பொன்னிழைகளாகக் காற்றில் கலைந்து நீந்தின.

அவளது மெல்லிய ஆடையை ஊடுருவிய ஒளி, கறுப்பாக வரைந்திருந்த அந்த உடலமைப்பின் சித்திரம், அநிருத்தனின் சித்தத்தை நிலைகுலைய வைத்தது.

கழுத்துக்குக் கீழே சற்று முன்னே தள்ளிய அந்த மெல்லிய ஆடை, அதன் பிறகு சட்டென உள்ளே திரும்ப முடியாமல் அவள் கீழுடலுக்குச் சற்று எட்டவே சேர்ந்து நிலம் நோக்கித் தொங்கியதால் அந்த இடைவெளியினூடு தெரிந்த அவள் சிற்றிடையும், அதன் மேல் தெரிந்த எழுச்சி முகடுகளும் அவனைப் பைத்தியமாக அடித்தன.

இடைக்குக் கீழே அகன்று, அதன்பின்னர் தலைகீழாய் நட்டு வைத்த வாழைகளென நிலம் தொட்ட கால்களும் அவள் உடலமைப்பின் முழுமையை விளக்கிவிடவே, 'இவளைப் படைக்கும்போது பிரம்மன் மிகுந்த போதையில் இருந்திருப்பான்' எனத் தனக்குள்ளாக வியந்துகொண்டான் அநிருத்தன்.

மெல்ல அவளை அணுகி அவள் சிற்றிடையில் ஒரு கையை வைத்தான். அப்போதும் அவள் சிலையெனவே நின்றிருந்தாள்.

இன்னொரு கையால் அவள் முகத்தை மெதுவாக நிமிர்த்திக் கண்களை நோக்கினான்.

பாய்ந்து விலக எண்ணும் கணத்திலான மானின் மருட்சி தெரிந்தது. அவள் செம்பருத்தி இதழ்கள் லேசாகத் துடித்தன. இன்னும் நெருங்கியபோது அவை ரோஜா இதழ்களென அறிந்தான். காலைப் பனியின் சிலிர்ப்பில் பளபளப்பாக மின்னியபடி இருந்த மென்மையும் ஈரலிப்புமான இதழ்கள்.

அவள் திடீரென ஆவேசம் வந்தவள்போல் செயற்பட்டாள். கைகள் எழுந்து அவன் கழுத்தைச் சுற்றி இறுக்கி இழுத்தன. அந்த முரட்டு உதடுகளைத் தன் இதழ்களுடன் கலந்தாள்.

சிறிது நேரம் விடுபட மனமின்றி இழைந்தன இதழ்கள்.

பிறகு அவளாகவே சற்றுப் பின் வாங்கினாள். தன் ஈர உதடுகளை அசைத்தாள்.

அங்கிருந்த தேன்துளிகள் மிச்சமும் சிந்திச் சிதறிவிடப் போகின்றன என்று பதைபதைப்பில் அந்தத் தேன் சுனையைக் கவ்விவிடும் அவசரத்தில் அனிச்சையாக விரைந்தது அநிருத்தன் முகம்.

அவன் பிடியிலிருந்து விலகாமல் முகத்தை மட்டும் விலக்கிக் கொண்ட லாவண்யா, "என்னமோ பேச வந்ததைப் பாதியில் நிறுத்திக் கொண்டீர்கள்..." என்றாள்.


"பேச வந்ததை மட்டுமா?" என்று முணுமுணுத்தபடி நீரைத் தொடர்ந்து செல்லும் நீரைப் போல அவள் முகம் நோக்கி அசைந்தான் அநிருத்தன்.

அவனைப் பேச விடும் எண்ணத்தோடு, அவன் பிடியிலிருந்தும் விலகித் திரும்பி நின்று கொண்டாள் லாவண்யா.

ஆனால் அந்த முயற்சி மேலும் விபரீதமாகுமென்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

பின்புறம் நின்றபடியே அவள் தோள்களின் வழியாக முன்புறம் கைகளைப் போட்டுக் கொண்ட அநிருத்தன், அவள் பின்புறத்தைத் தன் தேகத்தோடு அழுத்தமாகச் சாய்த்தும் கொண்டான்.

போலியாக விலக எத்தனிப்பு போதா



உண்மையில் அவளை தேகத்துடனா உராய்ந்த சிலிர்ப்பில் அவளுடல் நடுங்கியது. கால்கள் பலமிழந்து, கொழுகொம்பின்றேல் விழுந்து விடும் கொடியெனத் துவண்டாள்.

அவள் முன்புறத்தில் துளைந்த அவன் கரங்கள் இறுகின. அவளைத் தன்னுடலோடு அழுத்தி அணைத்துக் கொண்டான். அந்த நிலையிலேயே, "எனக்கு, உள்ளே இருப்பதை ஒளித்துப் பேசத் தெரியாது" என்றும் சொன்னான்.

உணர்ச்சியின் சுழற்சியில் சிக்கியிருந்த லாவண்யா, தனது மார்புமீது தவழ்ந்து கொண்டிருந்த அவன் கைகளைத் தன் கைகளால் பற்றி அழுத்திய வண்ணம் "ம்" என்று முனகினாள் மெதுவாக.

அவன் தனது கன்னத்தை அவள் கன்னத்தோடு இழைத்துக் கொண்டே, "மிகுந்த பரிதாபத்திற்குமுரியவன்"என்றான்.

"அப்படி ஒன்றும் பரிதாபத்துக்குரியவரின் கைகளாக இவை தெரியவில்லை" என்றாள், அவன் கைகள் இருந்த இடத்தைப் பார்த்து நகைத்துக் கொண்டே.

"உன்மீது ஆசை வைத்ததற்காக இந்த ஊர் எனக்குத் தரப்போகும் தண்டனையை நினைத்துப் பார்த்தாயா?" என்றான் அநிருத்தன் குரலில் எவ்விதக் கலக்கத்தையும் காட்டாமலே.

லாவண்யா ஆழ்ந்த பெருமூச்சுடன் கழுத்தை லேசாகத் திருப்பினாள். துடித்த உதடுகளை அவன் கழுத்துக்குள் புதைத்து மார்புடன் மார்பை அழுத்தி இழைந்தாள். இரும்பு அரண் எனப் பரந்திருந்த அவன் மார்பில் அழுந்திய அவள் மார்பும் மிகவும் கெட்டிப்பட்டது.

அவள் மார்பிலிருந்து விலக்கிக் கொண்ட கைகளால், அவள் முகவாய்க்கட்டையைப் பற்றி நிமிர்த்திய அநிருத்தன், அவளது தாமரைக் கண்களைத் தனது உதடுகளால் தீண்டினான்.

அவள் உணர்ச்சி வசப்பட்டவளாக அவன் கழுத்தைச் சுற்றித் தன் கைகளால் இறுக்கி ஆவேசம் கொண்டவள்போல் தன்னை நோக்கி இழுத்தாள். தாள முடியாத வேதனையில் மூச்சிரைத்தாள்.

அதற்குமேல் பொறுமை காக்க முடியாத அநிருத்தன், அந்தப் பூக்குவியலைத் தன் இரு கைகளாலும் அனாயாசமாகத் தூக்கி, அங்கிருந்த ஒரு கல்லில் அமர்ந்து அவளை மடியில் கிடத்தி உற்றுநோக்கினான்.

மெல்லிய ஆடைக்குள்ளிருந்த அவளது எழுச்சிமிகும் அழகுகள் எழுந்து எழுந்து தாழ்ந்த வண்ணமிருந்தன. இரண்டு தாமரை மொட்டுக்கள் சலனமுறும் குளத்தின் நீர்ப்பரப்பில் தாழ்ந்து தாழ்ந்து மிதப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது.

உன்மத்தனாய் வெறித்தபடி இருந்தான் அநிருத்தன்.

"மனத்தில் உள்ளதை ஒளிக்கத் தெரியாதவர், பரிதாபத்திற்குரியவர் இப்படி ஊரார் கண்படும் இடத்திலா இதைச் செய்து மாட்டிக் கொள்ளப் பார்ப்பார்?" என்று நகைத்தாள் லாவண்யா. ஆனாலும், அவன் மடியிலிருந்து எழுந்திருக்கவோ, அவன் செய்யப்போவதை அறிந்து எதிர்பார்ப்பில் மூடியிருந்த கண்களைத் திறக்கவோ செய்யாமல் உதடுகளை மட்டும் திறந்து மூடினாள் அந்தப் பைங்கிளி.

"காதலுக்கு ஆவேசமாகப் புரட்டிப் போடும் சக்தி இருக்கிறதே தவிர, ஒருவரின் அருமை பெருமைகளை அறிந்து அவரை ஊராரிடம் காட்டிக் கொடுக்காமலிருக்கும் உயர்ந்த குணம் இல்லை" என்று சொல்லிப் பெருமூச்சை விட்டான் அநிருத்தன்.

**நிறையரியர் மன்னளியர்**
**–என்னாது காமம்**
**மறையிறந்து மன்று படும்.**

(குறள்: 1138)

இலக்கிய நயம் தருவது முழடில்யன்

## ஷார்ஜா முத்தரப்புப் போட்டிகள்

இலங்கை, பாகிஸ்தான், ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் வருகின்ற ஒன்டோபர் மாதம் ஷார்ஜாவில் நடைபெறவுள்ளன.

பகலிரவு ஆட்டங்களாக நடைபெறவுள்ள இப்போட்டிகள் யாவும் லீக் அடிப்படையில் நடக்கின்றன.

இப்போட்டிகள் வருகின்ற ஒக்டோபர் 26ம் திகதி முதல் நவம்பர் 4ம் திகதி வரை நடைபெறுகின்றன. இந்த முத்தரப்புப் போட்டியில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் தலா இரண்டு போட்டிகளில் விளையாடுகின்றன.

மொத்தம் 10 போட்டிகள் கொண்ட லீக் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெறும் முதலிரு அணிகள் இறுதிப்போட்டியில் மோதவுள்ளன.

ஷார்ஜா போட்டிகள் பற்றிய விவரம் வருமாறு:

ஒக்டோபர் 26, இலங்கை எதிர் ஸிம்பாப்வே
ஒக்டோபர் 27, இலங்கை எதிர் பாகிஸ்தான்
ஒக்டோபர் 28, பாகிஸ்தான் எதிர் ஸிம்பாப்வே
ஒக்டோபர் 30, இலங்கை எதிர் ஸிம்பாப்வே
ஒக்டோபர் 26, பாகிஸ்தான் எதிர் ஸிம்பாப்வே
நவம்பர் 02, இலங்கை எதிர் பாகிஸ்தான்
நவம்பர் 04, இறுதிப் போட்டி

## சிந்தியா பதில்கள்

★ **அமெரிக்காவில் நடந்த தாக்குதல்?**

கே.விஜயராணி, கொழும்பு-04.

'விதைத்ததை அறுக்கிறார்கள்' என்று யாரோ சொன்னபோது, 'அதுதானே' என்றது மனது. 'எத்தனை ஆயிரம் மனிதர்கள் ஐயோ!' என்று ஒருவர் கவலைப்பட்டபோது, வெட்கப்பட்டது மனது. 'அமெரிக்கப் பாடம்தான் இலங்கைக்கும்' என்று எழுதிய தமிழ்ப் பத்திரிகைகளின் வன்மத்தைப் பார்த்தபோது, வெறுத்துப் போனது மனது.

★ **இந்தக் காதல் நம்மை என்னதான் செய்கிறது?**

பி.விக்னேஸ்வரன், அட்டன்.

அதுதானே! விஞ்ஞானிகளிடம் விளக்கத்தைத் தேடினேன். ஓமோன்களின் விளையாட்டைப் பற்றிப் பக்கம் பக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளத்தோடு ஒட்டவில்லை. கவிஞர்களிடம் திரும்பினால் 'சித்தத்துள் தித்திக்கும் தேன்' என்று இதயத்தை இலகுவாய் எட்டித் தொட்டு விடுகிறார்கள்.

சமீபத்திய சினிமாப் பாடல் ஒன்றில் பா.விஜய் என்கிற இளைய கவிஞர் சொல்கிறார்: "அவளது நிர்வாணம் கூட என்னை எதுவும் செய்ததில்லை முன்பு. ஆனால் இப்போதோ அவளது கணுக்காலின் வெண்மை சற்றே தெரிந்து மறைவதுகூட என்னை உலுப்பி எடுத்து விடுகிறது." அடடா!

★ **ஸ்நேகா, லைலா, சிம்ரன் மூவர் சிரிப்பையும் ஒப்பிடுக?**

சி.அருணன், கிரான்.

சற்றே சுழிப்புக் கொண்ட உதடுகளின் வசீகரமும், கண்களின் பக்கவாத்தியமும் ஸ்நேகாவுக்கு உதவுகின்றன என்றால், லைலாவின் கன்னத்தில் உண்டாகும் குழிக்குள் இன்று கோடம்பாக்கமே விழுந்து கிடக்கிறது. சிம்ரனிடம்-கணந்தோறும் மாறும் முகபாவங்களில் ஒன்றாக வந்து மறையும் சிரிப்பு முரளியின் பந்துபோல எதிராளியைத் தடுமாற வைத்து வீழ்த்து வதிலேயே குறியாயிருக்கிறது.

பார்ப்பவர் இதயத்துடிப்பை சற்று அதிகப்படுத்தியோ குறைத்தோ விடுவது மூவர் சிரிப்புக்கும் பொதுச் சிறப்பு என்றறிக.

★ **நீங்கள் கடவுளை நம்புவோர் கட்சியா? கடவுளை நம்பாதவர் கட்சியா?**

ஏ.மனோஹரன், ஹட்டன்.

புதுமைப்பித்தன் சொல்கிறார்: "பக்தி என்பது என்ன? மனசின் கஷ்டங்களை நாம் அறியாத ஒன்றின் தலையில் சுமத்தி விட்டதாக நம்பி அந்த நம்பிக்கை மீது பலம் கொள்ளுவதே. உண்மையில் நமது சுமைகளைச் சுமக்க நமக்கு வெளியில் ஏதோ ஒன்று இருக்கிறதோ என்னவோ; அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அந்த நம்பிக்கையோடு மட்டும் நின்று கொண்டால் மனம் ஆறுதல் அடையும்." நான் இவரது கட்சி.

★ **சின்னச் சின்னப் பிரச்சனைகளுக்கும் நான் அதிகம் மண்டையை உடைத்துக் கொள்வேன். எந்தப் பிரச்சனைக்கும் என்னால் இலகுவில் தீர்வு காண முடிவதில்லை. நண்பனிடம் கேட்டால், 'எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக் கொண்டு யோசி, தீர்வு கிடைத்துவிடும்' என்கிறான். எளிமையாக யோசித்தல் என்றால் என்ன சிந்தியா?**

எஸ்.திலீபன், மட்டக்களப்பு.

குழந்தைகளைப் போல சிந்தித்துப் பாருங்கள். அவர்களுக்குத்தான் எல்லாக் கதவுகளும் இலகுவில் திறந்துவிடுகின்றன.

வீட்டை விட்டு ஓடிப்போவதைப் பற்றி இரண்டு சிறுவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

"இது நம்முடைய அப்பாமார்களுக்குத் தெரியவந்தால் நம்மை அடிப்பார்களே" என்றான் ஒருவன்.

"அதனாலென்ன, நாமும் அவர்களைத் திருப்பி அடித்துவிடலாம்" என்றான் மற்றவன்.

"அதெப்படி? 'உன் தந்தையையும் தாயையும் மதிக்க வேண்டும்' என்று நம் சமயத்தில் சொல்லியிருக்கிறதே..?"

"சரி, அப்படியென்றால் இப்படிச் செய்வோம். நீ என்னுடைய அப்பாவை அடி, நான் உன்னுடைய அப்பாவை அடிக்கிறேன்!"




★ **பழசாகிப் போன பாத்திரங்களைப் பரணில் தூக்கிப் போடுவதுபோல், தமிழ் மக்களின் நலனுக்கு எந்தவகையிலும் பிரயோசனமற்ற அரசியல் கட்சிகளான தமிழ்க் காங்கிரஸையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தூக்கிப் பரணில் போட்டு விட்டால் என்ன?**

க.கமால்தீன், ஏறாவூர்-03.

படத்தின் கதைக்குத் தேவைப்படவில்லை என்பதற்காக கவுண்டமணி செந்தில் போன்ற கொமடியன்களைத் தூக்கி விட்டால் படம் சுவாரஷ்யமாகவா இருக்கும்? சோகக் கதைகளைச் சொல்லும்போது இடையிடையே பபூன்களும் இருக்க வேண்டும் என்பது அந்தக் காலத்திலிருந்தே நடைமுறையிலிருக்கிறது.

★ **'சாக்லெட்' பார்த்தீர்களா?**

சாக்கிரா உஸ்மான், மடிகே மிதியாலை.

ம்..ம்.. பார்த்தேன். முன் பாதிவரை மும்தாஜ் காப்பாற்றுவதையும்; பின் பாதியில் பிள்ளையார் காப்பாற்றுவதையும்.

★ **சிந்தியா, வானுக்கு ஏன் நீலம்?**

அ.சிவானந்தி, பதுளை.

அவ்வப்போது கறுத்துவிடும் மேகங்களை வெள்ளையாக்க.

★ **காற்றடிக்கும் பக்கம் சாய்பவர்கள்?**

எம். நிர்மலா, ஹாலிஎல.

மரங்கள்!

# மன்னாதி மன்னன் 76

## தாசி அபரஞ்சி

### இராஜகுமாரன்

காடாறு மாதம் புறப்பட்ட விக்கிரமாதித்தனுடன் இம்முறை மந்திரி பட்டியும் சேர்ந்து கொண்டார். இருவரும் இராஜபுரி என்ற நகரை நோக்கி வந்து சேர்ந்தார்கள்.

இராஜபுரியில் அபரஞ்சி என்ற விலைமகள் இருந்தாள். அவள் பேரழகி. அவளுடைய ஆசை நாயகனாக அப்பாசி என்ற பிராமண இளைஞன் இருந்தான். இருவரும் இணைபிரியாமல் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த காலத்தில் திடீரென நோய் வாய்ப்பட்டு அப்பாசி இறந்து போனான். தன் அன்புக்குரியவன் இறந்து விட்டமையினால் அபரஞ்சி மிகவும் வருந்தினாள். அப்பாசி இறந்த செய்தியை வெளியில் எவருக்கும் சொல்லாமல் மறைத்துவிட்டு, இராஜபுரி எல்லையிலிருந்த காளி கோயிலுக்குச் சென்று அழுது புரண்டு, "அம்பாளே என் அன்புக்குரிய அப்பாசியை இழந்து என்னால் உயிர் வாழ முடியாது. அவரை உயிருடன் மீட்டு என்னிடம் தந்துவிடு இல்லையேல் இப்பொழுதே என்னுயிறையும் ஏற்றுக் கொள்!" என்று கூறிக்கொண்டு காளிகாம்பாளின் கையிலிருந்த சூலாயுதத்தைப் பிடிங்கியெடுத்து தன் மார்பிலே குத்துவதற்கு ஆயத்தமானாள்.

அம்பாள் உடனே தோன்றி அபரஞ்சியைத் தடுத்து, "மகளே அபரஞ்சி, உன் காதலன் உயிரை மீட்டெடுப்பதற்கு நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன். அதன்படி நடந்து கொண்டால் அப்பாசி உயிருடன் மீண்டு வருவான்."

தாயே தாங்கள் கூறியபடியே நடந்து கொள்வேன். எப்படியாவது என் அன்பரை நான் மீளப் பெற்றுவிட வேண்டும்" என்று கூறி வணங்கி நின்றாள்.

காளிகாம்பாள் "இன்னும் சில நாட்களில் இந்த நகருக்கு விக்கிரமாதித்த மாமன்னனும், அவருடைய மாமந்திரி பட்டியும் இரத்தின வியாபாரிகள் போல் வருவார்கள். அவர்களில் விக்கிரமாதித்தனை இனங்கண்டு அவருடைய மனம் கோணாதபடி நடந்து கொள்வாயானால் அவருடைய தயவால் அப்பாசி உயிர் பெறுவான்" என்று கூறி காளிகாம்பாள் மறைந்தருளினாள்.



தனது வீடு வந்து சேர்ந்த அபரஞ்சி அப்பாசியின் உடலில் பலவிதமான தைலங்கள் இட்டுப் பதனிட்டு பழுதுபடாமல் இருப்பதற்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து எவருக்கும் தெரியாமல் ஓர் அறையில் வைத்துப் பூட்டி வைத்தாள்.

அன்றைய தினத்திலிருந்து தனது மிக அலங்காரமான மாளிகையின் உப்பரிகையில் இருந்த வண்ணம் அந்த வீதியில் வருவோர் போவோர் எல்லோரையும் அபரஞ்சி பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

இராஜபுரியின் எல்லையை வந்தடைந்த மன்னர் விக்கிரமாதித்தனும் பட்டியும் தங்களுடைய உடைகள் எல்லாவற்றையும் களைந்து வேதாளத்திடம் கொடுத்துவிட்டு, இரத்தின வியாபாரம் செய்யும் செட்டிகளைப் போல உருமாறிக் கொண்டனர். நகரத்தில் உள்ள ஒரு சத்திரத்தில் தங்கினர். விக்கிரமாதித்த மன்னர் தனது பெயரை பெரியகாந்தையச் செட்டி என்றும் பட்டியின் பெயரை சின்னச் காந்தையச் செட்டி என்றும் பெயர் மாற்றம் செய்து கொண்டனர்.

அடுத்தநாற் காலையில் இருவரும் கடை வீதிக்குச் சென்று வசதியான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து கம்பளத்தை விரித்துக் கொண்டு வகை வகையான இரத்தினக் கற்களை அதன்மேல் பரப்பி வியாபாரம் செய்யலாயினர். அந்த நகரத்து மக்கள் புதிதாக வந்திருக்கும் இரத்தின வியாபாரிகளிடமிருந்து இரத்தினக் கற்களை வாங்கிச் சென்றனர். மாலையானதும் இருவரும் வியாபாரத்தை முடித்துக் கொண்டு சத்திரத்தில் வந்து தங்கினர். இதே போன்று ஏழு நாட்கள் கடைத் தெருவில் இரத்தின வியாபாரம் செய்து கொண்டேயிருந்தனர். ஏழாவது நாளன்று மாலை வேளையில் விக்கிரமாதித்த மன்னர் மட்டும் நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாக புறப்பட்டுச் சென்றார். வசதி படைத்தவர்கள் வாழும் ஒரு தெருவினூடாக வேடிக்கை பார்த்துக் கொண்டுசென்ற பெரியகாந்தையச் செட்டி எனும் விக்கிரமாதித்தன், அந்தத் தெருவிலேயே சிறந்த அலங்காரங்களுடன் தெரிந்த ஒரு மாடி வீட்டைக் கண்டார். அந்த வீட்டின் கலையம்சங்களுடன் உரிய அலங்காரங்களைக் கண்டு, அந்த வீட்டின் அழகை ரசித்தபடி சற்றுநேரம் தயங்கி நின்றார்.

அந்த மாளிகையின் உப்பரிகையில் சர்வ இலட்சணங்களும் பொருந்திய ஓரிள மங்கை தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அவதானித்தார். ஒரு கன நேரத்தில் இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டன.

அந்த மாடி உப்பரிகையில் நின்ற பெண் தாசி ஆபரஞ்சியே. காளிகாம்பாள் தன்னிடம் கூறிய விக்கிரமாதித்த மன்னன் இவராகத்தான் இருக்க வேண்டும் என்று நம்பியவளாக புன்னகை புரிந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் உப்பரிகையில் அவள் காணப்படவில்லை. சிறிது நேரம் திகைப்படைந்த மன்னர் விக்கிரமாதித்தன் தன்னெதிரே இருந்த மாளிகை முன் புறத்தில் அந்த பெண்ணும் அவளுடைய தோழிகள் பலரும் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டார். சேடிப் பெண்கள் மலர்களைத் தூவி பன்னீர் தெளித்து விக்கிரமாதித்த மன்னரை அந்த மாளிகைக்குள் அழைத்துச் சென்றனர். அலங்காரமான ஓர் இருக்கையில் அவரை அமரவைத்து வாத்தியங்கள் முழங்க இன்னிசைப் பாடல்களுடன் அங்கு நடனம் இடம் பெற்றது. பல்சுவைச் சிற்றுண்டிகள் மன்னர் விக்கிரமாதித்தனுக்கு வழங்கப்பட்டன.

முன்பின் தெரியாத தனக்கு இத்தனை ராஜோபசாரங்கள் எதற்காகச் செய்யப்பட வேண்டும் என்று தெரியாத விக்கிரமாதித்த மன்னன் திகைப்படைந்தார். 'இந்த அழகான பெண் யாராக இருக்கக்கூடும்' என்று தனக்குத்தானே விசாரித்துக் கொண்டார். அப்போது இவருடைய உள்ளுணர்வுகளை உணர்ந்துகொண்டதைப்போல, நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்டியத்துக்கு பாடல் இசைத்துக் கொண்டிருந்தவளின் வாயிலிருந்து வெளிப்பட்ட பாட்டின் மூலம் தனக்கு வரவேற்பளித்தவளுடைய பெயர் மற்றும் விவரங்கள் தெரிய வந்தன.

'இராஜபுரியின் மன்னர் அரசவையில் ராஜ நர்த்தகியாக விளங்கும் ஆடலழகி அபரஞ்சி அளிக்கும் வரவேற்பு' என்ற விவரம் அந்தப் பாடலில் பொதிந்திருந்தது.

வரவேற்பு உபசாரம் முடிவடைந்ததும், அபரஞ்சி மன்னர் விக்கிரமாதித்தன் அருகில் வந்து அவருக்கு மலர் மாலை சூடி அவருடைய வலக்கரம் பற்றி மாடியிலுள்ள தன்னுடைய பள்ளியறைக்கு அழைத்துச் சென்றாள். அன்றிரவு மன்னர் விக்கிரமாதித்தன் அதுவரை கண்டிராத அதி உன்னதமான லீலைகளால் அபரஞ்சி அவரை மகிழ்வித்தாள். அவளுடைய அன்பில் சிக்கி விக்கிரமாதித்த மாமன்னர் மெய்மறந்திருந்தார்.

பொழுது புலர்வதற்கு முன்னர் அங்கிருந்து புறப்பட்டு மந்திரி பட்டியிடம் சென்றுவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்த மன்னரின் எண்ணம் கைகூடவில்லை. பொழுது விடிந்து பல நாழிகைகள் கடந்தும் மன்னர் விக்கிரமாதித்தன் அபரஞ்சியின் பிடியில் தத்தளித்துக் கொண்டிருந்தார். அதன் பின்னரே அவர் புறப்பட்டு பட்டியிருக்கும் சத்திரத்தை வந்தடைந்தார்.

விடிந்து இத்தனை நாழிகைகள் கடந்தும் மன்னர் வரவில்லையே என்று பட்டி ஏங்கியிருந்தார். மன்னர் வந்து சேர்ந்ததும் அவரிடம் பட்டி சற்று கடுகடுப்பாகவே பேசினார். "அண்ணா! தாங்கள் இவ்வளவு நேரம் என்னை விட்டு எங்கே போயிருந்தீர்கள். நீங்கள் வந்திருக்கும் கோலத்தைப் பார்த்தால் எனக்குப் பெரும் வியப்பாக இருக்கிறது. நீங்கள் அலங்கோலமாகக் காணப்படுகிறீர்கள். இதனைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. எங்கே போயிருந்தீர்கள்." என்று வினவினார்.

விக்கிரமாதித்த மன்னர் தான் அரச நர்த்தகி அழகி அபரஞ்சியிடம் சென்றிருந்த கதையை எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாமல் அவள் தனக்குச் செய்த உபசாரங்களை வியந்தார். எல்லாவற்றையும் கேட்டிருந்த பட்டி, "அண்ணா! தங்கள் கூறுவதைப் பார்த்தால் அந்த தாசியின் அழகில் தாங்கள் தங்களைப் பறிகொடுத்து விட்டீர்கள்போல தெரிகிறது. இத்தகையோரிடம் மிகவும் கட்டுப்பாடாகவும் கவனமாகவும் நடந்து கொள்ள வேண்டியது அவசியம் என்று எச்சரிக்கை செய்தார்.

அடுத்தநாள் விக்கிரமாதித்தன் அபரஞ்சியிடம் செல்லப்புறப்படும் போது "மீண்டும் தாங்கள் அந்த அபரஞ்சியிடம் போகத்தான் வேண்டுமா? என்னைப் பொறுத்தவரையில் அவள் ஒரு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருத்தியாகத் தென்படவில்லை. ஆகவே அங்கு செல்லாமல் ஒதுங்கியிருப்பதே நல்லது" என்று கேட்டுக் கொண்டார். ஆனால் மன்னர் விக்கிரமாதித்தன் மீண்டும் மீண்டும் அபரஞ்சியின் பெருமைகளையே கூறிய வண்ணம் இருந்தார்.

பகல் இருவருமாக இரத்தின வியாபாரத்தைத் தொடங்கினர். மாலையில் வியாபாரத்தை மும்முரமாக முடித்துக் கொண்டு மன்னர் விக்கிரமாதித்தன் அபரஞ்சியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். அவரை இடைமறித்த மந்திரி பட்டி, "அண்ணா நீங்கள் அவளை நம்பி ஏமாற வேண்டாம்" என்று கூறியதும் கோபமடைந்த விக்கிரமாதித் தன், "இத்தனை சொல்லியும் என் அன்புக்குரியவளை நம்ப மறுக்கிறாய்" என்று கடிந்து கொண்டார்.

பட்டி மன்னரிடம், "நீங்கள் கூறுவது போல் அபரஞ்சி நம்பிக்கைக்குரியவளல்ல. உங்கள் மீது அவள் உண்மையான அன்பு வைத்திருப்பாளானால் நாளை நீங்கள் அவளைவிட்டுப் பிரிந்து வரும்போது அவளுடைய அழகுக்கு அழகு செய்யும் கூந்தலை கத்தரித்துத் தரும்படி கேட்டுப் பாருங்கள்" என்று சொன்னா பட்டி, விக்கிரமாதித்தன் "தான் கேட்டால் தனது உயிரையே என்னிடம் தரக் கூடிய அளவு பேரன்பு கொண்டவள் என் காதலி. நாளை காலை நான் வரும்போது கட்டாயம் அவளுடைய கூந்தலைக் கொண்டு வருகிறேன். அப்போது என்ன சொல்வீர் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு வேகமாக நடந்து சென்றார்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

*கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.*

**சத்தியக் கடதாசி:**

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:............... பெயர்:..................... ஒப்பம்:...................



**நோட்டீஸ் பலகை**

**நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

*-காதில பூ கந்தசாமி*

**அபிமான வாசகர் போட்டியில் எட்டாவது: ஒரு முட்டாளாய்த் திகழ்வதற்குரிய முதற் தகுதி என்ன? முடிவுத் திகதி செப்டெம்பர் 30.**

*அநியாயம் பாருங்கோ! இது பென்னாம் பெரிய அநியாயம் பாருங்கோ. நீங்கள் பாத்தனீங்களே? ரீவியில. அப்படியே காட்டினான், இந்தப் பெரிய கட்டடம் கண்ணுக்கு முன்னால இடிஞ்சு விழுறத. என்னெண்டு சொல்லுறது? எப்பிடி நம்புறது? உலகத்தையே ஆட்டிப்படைக்கிற அமெரிக்காவில, அதுவும் கடைஞ்செடுத்த பெரும் பணக்காரக் கம்பனிகளின்ர அலுவலகங்கள் இருக்கிற அந்த நூறுமாடிச் சோடிக் கோபுரம் காப்பாற்ற வழியில்லாத நிர்க்கதிநிலையில அப்பிடியே பூமிக்கு இறங்கி இடிஞ்சு நொருங்கி ஒண்டுமில்லாமல் போனத எப்பிடியப்பா நம்பிறது? நான் பாத்தனான். திரும்பத் திரும்ப ரீவியில அதையே காட்டினாங்கள். என்ன கேவலமப்பா? ஆனானப் பட்ட அமெரிக்காவிலேயே இப்பிடி நடந்திட்டுதெண்டால் எங்கட இலங்கை மாதிரி முட்டைப் பூச்சி நாடெல்லாம் எந்த மூலைக்கு?*

*ஆனாப் பாருங்கோ. நடந்ததப் பார்த்துத் திகைக்கிற நேரத்தில, இன்னும் சிலபேர் ஏதோ பழி தீர்த்த மாதிரி "அமெரிக்காவுக்கு உது நல்லா வேணும்" எண்ட கணக்கில பேசிறதயும் கேக்கிறன் கண்டியளோ. இதுதான் மனசக் கஷ்டப் படுத்துது பாருங்கோ. என்னதான் அமெரிக்கா வல்லரசாயிருக்கட்டும். என்னதான் மற்ற நாடுகளுக்கு மேல அதிகாரம் செலுத்துறதா இருக்கட்டும். என்னதான் முந்தின காலத்தில, ஏன் இப்பவும் சில இடங்களில மற்ற நாடுகளுக்கு மேல தாக்குதல் நடத்தி அழிவுகளச் செய்த நாடாகவும் இருக்கட்டும். ஆனால் பாருங்கோ. நடந்த கொடுமை யாருக்கு மேல? அப்பாவிச் சனங்களுக்குமேல பாருங்கோ. அமெரிக்க அரசாங்கத்துக்கு மேலயோ, அதின்ர ராணுவ நிலையங்களுக்கு மேலயோ நடந்திருந்தால்கூட அது ஏதோ அவையும் அவையின்ர எதிரிகளும் பட்ட பாடு எண்டுட்டு பேசாமல் இருக்கலாம். ஆனால் இது நடு நாட்டுக்குள்ள நாப்பது ஐம்பதாயிரம் சனத்த ஒரு நிமிஷத்தில கொண்டு தள்ளிப்போட்டுப் போகிற வேலைபாருங்கோ. ஜப்பானில ஹிரோஷிமா நாகசாகியில அணுகுண்டு போட்டதப் போல. எப்பிடி நியாயப்படுத்தலாமெண்டு சொல்லுங்கோ?*

*அதுவும் அது நடந்த விதம்...? எங்கயோ தங்கட தங்கட அலுவல்களுக்குப் பிரயாணம் செய்த நூற்றுக் கணக்கான விமானப் பயணிகளைப் பிளேனோட கடத்திக் கொண்டுபோய் கட்டடத்தில மோதித் தற்கொலை செய்ய வைச்ச கொடுமை...? சரியெண்டு சொல்ல மனசிருக்கிறவை யார்...? அந்த நேரத்தில எப்படி இருந்திருக்கும் அவைக்கு எண்டத அனுபவப்படுத்திப் பார்க்கத் தன்னும் ஏலுமோ எங்களுக்கு? சும்மா வாயிருக்குதெண்டிட்டு அமெரிக்காக் காரனுக்கு உது நல்லா வேணுமெண்டு சொல்லிட்டுப்போக ஏலுமே? அமெரிக்காவுக்காக ஏனப்பா அப்பாவிச் சனத்த ஒரு பலவந்தக் கூட்டுத் தற்கொலைக்குத் தள்ளவேணும்?*

*அதை யார் செய்தாலும் நாங்கள் ஏதோ பெரிய வீரச் செயல் செய்த மாதிரியெல்லோ பாக்கிறம்? வீரமெண்டிறத எவ்வளவு பெரிய அழிவைச் செய்யிறானெண்ட அளவாலயே அளவெடுக்கிறது? துணிவு எண்டதை எந்தக் கெட்ட காரியத்தையும் செய்யக்கூடின மூர்க்கத்தனத்தை வைச்சா அளவிடுறது? அப்பிடியெண்டால் தன்ர சொந்தத் தாயக் கொல்லுற முரடனும்கூட துணிந்தவனாயிடுவான். முரட்டுத்தனத்துக்குத் துணிவெண்டும் கொடுமைக்கு வீரமெண்டும் பெயர் மாத்திட்டால் விசயம் சரியாயிடுமா கண்டியளோ?*

*இதை ஒரு பெரிய கெட்டித்தனமெண்டும் நாங்கள் கனபேர் பாத்துத் திகைக்கிறம். இப்பிடி ஒரு பலம் வாய்ந்த நாட்டுக்க ஊடுருவி, ஒரே நேரத்தில மூண்டு நாலு விமானங்களக் கடத்தி, குறி தவறாமல் தங்கட இலக்குகளிலபோய் தற்கொலைத் தாக்குதல நடத்தி ஒரு பேரழிவைச் செய்த விதத்தப் பாக்கேக்க ஒரு பெருங் கெட்டித்தனமாத்தான் எடுத்த எடுப்பில தெரியும். "என்னெண்டடா புகுந்தாங்கள்...?", "என்னெண்டடா உப்பிடி அச்சொட்டாப்போய் அடிக்க பயிற்சி எடுத்தாங்கள்...? "என்னெண்டடா உப்பிடிப் பிளேனால அடிச்சு உந்தப் பெரிய கோபுரத்த உப்பிடிச் சிம்பிளாச் சரிச்சு விழுத்தலாமெண்டதக் கணக்குப் போட்டாங்கள்...?" "என்னெண்டடா உப்பிடியும் நடக்குமெண்டு அமெரிக்காக் காரனாலயும் நினைக்க ஏலாத விதமா நடத்திக் காட்டிட்டாங்களே...?" எண்டெல்லாம் நாங்கள் வாயப் பிளப்பம்தான். ஆனால் பாருங்கோ அதுக்கு மேலாலயும் நெனச்சுப் பார்க்க ஒரு விஷயமிருக்குங்கோ. நீங்கள் ரீவிய நல்லாப் பாத்திருந்தால் கண்டிருப்பியள் அந்த நூறுமாடிக் கட்டடத்திண்ட உச்சியில இருந்து சனங்கள் செய்வதறியாமல் குதிச்சுச் சாகிறத. அந்தப் பெரிய கட்டடத்தின்ர உச்சியில இருந்து குதிக்கிறதுக்கு சாதாரணமா யாருக்கு மனம் வரும்? கட்டடத்தோட சேர்ந்து நொருங்கி விழுந்து நெருப்பில பொசுங்கிச் சாகிறதவிட தப்பிறமோ இல்லையோ குதிச்சிடுவமெண்டு அந்தச் சனங்கள் குதிச்ச பரிதாபத்த நாங்கள் ஒரு சினிமாப் படத்த ரசிக்கிற மாதிரி ரசிக்க ஏலுமோ? கட்டடத்தில மாட்டுப் பட்டவையக் காப்பாத்தப் போன நூற்றுக்கணக்கான தீயணைக்கும் படையினரும் சேர்ந்து ஆயிரமாயிரம்பேர் கட்டடத்தோட இடிஞ்சு விழுந்து செத்தொழிஞ்சு போனதப் பாத்து, "எப்பிடி மச்சான் குடுத்திருக்கிறான் வேலை பாத்தியா...?" எண்டு பாராட்ட மனம் வருமோ? நான் இப்ப இதுகளச் சொல்லுறதுக்கு முந்தி நீங்கள் இதைப்பற்றி உண்மையா எப்படி நினைச்சனீங்களெண்டு ஒருக்கால் யோசிச்சுப் பாருங்கோ. நீங்களும் இதுகள வீரதீரமெண்டுதான் நினைச்சிருந்தால் ஒண்டு மட்டும் உண்மையெண்டத நாங்கள் உணர வேண்டியவயளாயிருக்கிறம். எங்கட மனமும் கொடுமைகளைக் கண்டு கண்டு கொடுமைகளுக்கே சாமரம் வீசிற அடிமையாப் போயிட்டுது எண்டதுதான் உண்மையாயிடும்.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapik.com/arul
433631





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

## விசாலம்



அழகிகள் இருவரும் ஒய்யாரமாக அமர்ந்து போஸ் கொடுக்கும் இந்த விசாலமான மோட்டார் சைக்கிளை ஜப்பானில் உள்ள ஹொண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதுவரை வந்த ஹொண்டா மோட்டார் சைக்கிள்களில் இதுதான் மிகப் பெரியது.

415 கிலோகிராம் நிறையுடைய இந்தப் பிரமாண்டமான மோட்டார் சைக்கிளின் விலை எவ்வளவு தெரியுமா? 25 ஆயிரம் அமெரிக்க டொலர். நம் நாட்டு மதிப்பில் சுமார் 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

## விஷ்க்க்க்....



அவுஸ்திரேலியாவில் வாழும் பழங்குடியினரான அபோரிஜன்களின் உணவுக்காக வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கும் எதிரிகளுடன் போர் புரிவதற்கும் பயன்படுத்தும் ஆயுதத்தின் பெயர் பூமராங்.

இந்த பூமராங் ஆயுதத்தைக் குறிபார்த்து வீசினால் 'விஷ்க்க' என்று பறந்து சென்று அந்தக் குறியைத் தாக்கி அழித்துவிட்டு மீண்டும் அதனை வீசியவரிடம் திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

படத்தில் இருக்கும் பூமராங்கை அமெரிக்கரான டென்னிஸ் ஜோயஸ் என்பவர் வீசினார். சுமார் 3 நிமிடங்கள் வரை வானில் சுழன்று சாதனை படைத்தது. ஜோயஸ் இந்தச் சாதனையை 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி நிகழ்த்தினார்.

## விந்தை

மூளையோடு தொடர்புடைய நரம்பியல் சத்திர சிகிச்சை மிகவும் கடினமானது. மிக மெல்லியதும் மென்மையானதுமான நரம்பு வலைப்பின்னலை மிக அவதானமாகப் பிரித்து மிக நுண்ணிய கருவிகளால் மருத்துவ நிபுணர்கள் அறுவைச் சிகிச்சைகளைச் செய்து வருகிறார்கள்.

இவர்களுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்டிருக்கும் செயற்கை மருத்துவ மனிதனையே படத்தில் பார்க்கிறீர்கள். 'பாத் ஃபைண்டர்' என்றழைக்கப்படும் இந்த விந்தை மருத்துவர் மனிதர்களுக்கு எப்படிச் சிகிச்சை அளிக்கும் என்பதை, செயற்கையாகச் செய்யப்பட்ட மனிதனுக்குச் செய்து காட்டுகிறது.



---

## விருது

டென்னிஸ் விளையாட்டு மைதானங்களில் சுழன்று சுழன்று பந்துகளை அடித்து விரட்டும் அமெரிக்க வீராங்கனை ஜெனிஃபர் கேப்ரியாட்டிதான் இவர். டென்னிஸ் மைதானங்களில், விளையாட்டு உடையுடன் இருக்கும் ஜெனிஃபர் தான் இப்படி அழங்கார உடையில் அழகு தேவதையாகக் காட்சியளிக்கிறார்.

அண்மையில் மொண்டிகார்லோ நகரில் நடந்த விருது வழங்கும் வைபவம் ஒன்றிலேயே ஜெனிஃபர் இப்படி வந்திருந்தார்.

தனது 16வது வயதில் டென்னிஸ் உலகிற்கு அறிமுகமான ஜெனிஃபர் 92ம் ஆண்டு பார்சிலோனாவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் டென்னிஸில் தங்கப்பதக்கத்தை வென்றிருந்தார்.

இளம் புயலாக வந்த இவரது தடம் மாறி, போதைக்கு அடிமையானார். ஜெனிஃபரின் டென்னிஸ் வாழ்க்கை அவ்வளவுதான் என்று பலரும் நினைத்திருந்த வேளையில் சுமார் 6 வருடங்கள் கழித்து, இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் கலந்து கொண்டு சாம்பியனானார்.

டென்னிஸில் மறுபடி கலந்து கொண்டு சாம்பியனானதற்காகவே ஜெனிஃபருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 23.09.2001



**செல்வன் ஹேமாங்கன் — செல்வன் ஹேசாங்கன்**

திருக்கோணமலையைச் சேர்ந்த தர்மசீலன்- சடாட்சரகுமாரி தம்பதிகளின் இரட்டைச் செல்வங்களான ஹேமாங்கன்-ஹேசாங்கன் தங்களது 1வது பிறந்தநாளை 23.09.2001ல் நோர்வே ஒஸ்லோவிலுள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டிமார், மாமாமார்களான பாபு, பபா, வரதன், பெரியப்பாமார்களான ஜெயபாலன், திவாகர், நிமலன் பெரியம்மாமார்களான நிட்தி, பிறின்சி, தேவி, மாமிமார்களான ரமணி, ரூபி, அண்ணாச்சிமார்களான பிரணா, சுஜனா, விதுஷன், சஷோநித், அக்காச்சிமார்களான வர்ஷா, கஸ்தூரி, ஷாயினி, லிலக்ஷனி, மச்சான்மார்களான லஷ்மி, பவித்திரை மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் கோணைநாதப்பெருமான் காளி அம்பாள் துணையுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- அம்மப்பா - திருகோணமலை.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**21.09.2001**

**இஷா விஷாலி**



கொழும்பு கிரேண்பாஸைச் சேர்ந்த சந்திரகுமார்- சில்வியா தம்பதிகளின் செல்லப்புதல்வி இஷா விஷாலி தனது முதலாவது பிறந்தநாளை 21-09-2001 அன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு Dada (வண்டா) அம்மா, அம்மம்மா, Grandpa, சித்தா, சித்திமார், மாமா, மாமி, பெரியப்பா, கனடாவில் உள்ள பெரியப்பா, பெரியம்மா, கௌபி அக்கா, கனடாவில் உள்ள மாமா, அத்தை, இந்தியாவில் உள்ள மாமா அத்தை, கனடா மாமி, வவுனியாவில் உள்ள அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி, மச்சான், மச்சாள் ஞான பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இஷாவை குழந்தை இயேசுவின் அருள்பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அம்மா (சில்வியா)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் செப்.23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.